Registered as a News Paper
பக்கம் - 28

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

விலை: 15.00

நாதம் - 15 வெள்ளி - 20 22-28 யூலை 2003



## நெருக்கடிக்குள்ளாகும் யுத்த நிறுத்தம்



# திருமுக அறிமுகம்

அவர் ஒரு மகாகலைஞர்

ஓவியர், கருத்தோவிய வல்லுநர் (Cartoonist) எழுத்தாளர், கவிஞர். அற்புதமான தனித்துவச் சிந்தனையுடன் இயங்கிய பத்திரிகையாளர். மூன்று தசாப்தங்களிற்கும் மேல் தமிழினத்தைச் சிரிப்புடன் சிந்திக்க வைத்த தமிழீழத்தின் தனிபெரும்சிந்தனையாளர்...

இப்படியாக அவரின் பன்முகப் பரிமாணத்தைக் கூறிக்கொண்டே போகலாம்....

அவர் ஒரு தளம்பாத நிறைகுடம்.

அவர் தான் சிரித்திரன் சிவஞானசுந்தரம் என்ற பெயரில் தமிழ் மக்களால் நன்கறியப்பட்ட மாமனிதர் சுந்தர்.

சுந்தரை அறியாதோர் இருக்கலாம்.

ஆனால் சவாரித்தம்பர்,சின்னக்குட்டி,பாறிமாமி, கிட்டினர்,விக்கிரி மைனர் மச்சான். சிறிமான் செல்லக்கிளி, வளவளா சியாமளா, Mrs. டாமோடிரன், சீனித்தாத்தா, சுட்டிபாபு, வேலரும் மயிலரும், மெயில்வாகனத்தார்... என நீண்டு தொடரும், அவர் தன் தூரிகையால் உயிரேற்றிய, பாத்திரங்களை அறியாதோர் இருக்கவே முடியாது.

அவர் வரைந்து தினகரனில் வெளியான சித்திரகானங்கள் பகுதியைப் பார்த்து ரசித்து சிரித்து வியக்காத மனங்கள் இருக்க முடியாது...


வெறும் கோட்டோவியக் கேலிச்சித்திரங்களை, இரத்தமும் சதையுமான உயிர் அசையும் உயிரோவியங்களாக்கிய வித்தக விரல்கள் அவருக்கானவை. அவர் சமூகத்தை நேசித்தவர். அதனால் சமூகக் கொடுமைகளைக் கண்டு சீற்றத்துடன் அதனை மாற்றச் சிந்தித்த வர்.சிறுமை கண்டு பொங்கும் குணம் அவருக்கேயுரியது. அவரது சமூகக் கோலங்களும் கோடுகளாகி உயிர்பெறும் அவரது, சமூக ஏக்கங்களும் அப்படியேதான் வெளிப்படுத்தப்படும். எடுத்த எடுப்பில் வாய்வலிக்கச் சிரிக்கவைக்கும் அவரது கேலிச்சித்திரக் கருத்தோவியங்கள் அடுத்த சில மணி நேரத்திலேயே மனம்வலிக்கச் சிந்திக்கவும் வைக்கும். இந்த

## மாமனிதர் சுந்தர்

மனம் வலிக்கும் நம் மனிதச் சுபாவங்களின் அசிங்கங்களே காரணம் என நினைக்கும் போது நெஞ்சுக்குள் சுருக்கென முள்குத்தும் அனுபவம் ஏற்படும். அதுவே அந்தச் சுந்தரப்படைப்பாளியின் வெற்றியுமாகும்.

மண்வாசனை வீசும் அவரது பாத்திரங்கள் யதார்த்தத்தை விட்டு விலகாத இயல்பான குணாம்சங்களால் எங்கள் ஆத்மாவுக்கு நெருக்கமான உறவுகளாக விளங்கின என்றால் மிகையில்லை.

மகுடி பதில்களில் மனம் லயிக்காதோர் எவருமில்லை? கேள்விகளை இயல்பாக- விட்டேந்தித்தனமாகக் கேட்கும் ஒருவர் அதற்கு மகுடியார் வழங்கும் பதிலைப்படித்ததும் தனது கேள்விக்குள் இப்படி ஒரு



அர்த்தபுஷ்டியான பிரமிக்கவைக்கும் பதிலுக்கான 'அழுத்தம்' உள்ளதா என்று எண்ணம் கொள்வது தவிர்க்கவே முடியாத விடமாகும். அவரது சிரித்திரன் சஞ்சிகையின் இலக்கினை அப்பத்திரிகையின் அட்டையில் அவர் தெளிவாகவே குறிப்பிட்டிருப்பார்.

"செய் தொழில் தெய்வம்"

"சிரிப்பே சீவியம்' என்ற அந்த வரிகள் அவரது இலட்சியப் பாதைக்கான தாரக மந்திரமாகும். அவர் எவரையும் நோகப்பேசாதவர். மற்றவர்களின் பேச்சைப் பொறுமை யாகக் கேட்டு எடைபோடும் உள்ளம் அவருக்குரியது. ஆற்றலை இனங்கண்டு அதற்குரியவரைத் தட்டிக் கொடுக்கும் பண்பு அவருக்கேயுரியது.

புகழ் 'போதை'களைப் புறந்தள்ளியவர். தன்னினம் மீது குண்டுத் தாக்குதலை நடத்தும் கோர குணம் கொண்ட அரசு வழங்கிய தேசிய விருதை குண்டின் நிழலில் பரிசா... எனக்கு வேண்டவே வேண்டாம் என அதைத் புறந்தள்ளியவர்.

இந்தியப்படை அவரது அச்சகத்தை அடித்துடைத்து அழிவு செய்தது. அதன் பின் அந்த படையினட் அனுமதி பெற்றே சிரித்திரனை வெளியிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது அந்நியனிடம் அனுமதி பெற்று எனது பத்திரிகையை வெளியிட்டு அவமானப்பட நான் தயாரில்லை என உறுதியாக நின்றவர்.

ஏனைய பத்திரிகையாளர்கள் சிலர் ஆக்கிரமிப்பாளருக்கு 'ஜெய்ஹிந்த்' கூறி சலாம் போட்டு அநுகூலம் பெற்றதை வரலாறு அறியும். அத்தகைய துரோகங்களுக்கு அவர் துணை போனதே கிடையாது.

அதுவே அவரது தனித்துவம் .அதுவே அவரது தமிழ்த்துவம். அவர் சமூகப் பொறுப்புடன், தாயகம் மீதான பற்றுதலுடன், தமிழுணர்வுடன் எல்லாவற்றுக்கும் மேலாக மனித நேயத்துடன் சிந்தித்தவர். செயற்பட்டவர். அதனால்தான் வாழும்போதே எமது தேசியத்தலைவர் 'மாமனிதர்' விருதை அவருக்கு வழங்கி உயர் கௌரவத்தை அளித்தார். அக்கௌரவம் தமிழர் தாயகமே அவருக்கு வழங்கிய கௌரவமாகும்.

அவர் இன்று நம்மிடையே இல்லை என்றாலும் அவர் தனது பாத்திரங்களைச் சாகாவரம் பெற்றவர்களுக்காகப்படைத்து விட்டதனால், அப்பாத்திரங்களூடாக அவரும் வாழ்கிறார்.

ஆனாலும் அவர் விட்டுச்சென்ற இடைவெளி இட்டு நிரப்ப முடியாத இடமாகவே இன்னமும் உள்ளது... இனியும் இருக்கும்.

அட்சயன்

# காரசாரம்

"தொழில் எதுவும் தேவையில்லாமல் உருவாகவில்லை. மனிதன் ஒரு போதும் பலதொழில்களை நிபுணத்துவம் காட்டிச்செய்ய முடியாது. ஒவ்வொருவரும் தத்தம் திறமைக்கு ஏற்ற தொழிலை செய்வதற்கு உரிமையுண்டு. செய்வதை யாரும் மறுக்கமுடியாது" என்று ஆரம்பிக்கப்பட்டு இடையில் பறைக்கான முக்கியத்துவத்தை வழங்கி, இறுதியில் இக்கலை வடிவத்தினை இசைப் பொறிகளுக்கு உட்படுத்தினால் சிறந்ததாகும் என்கின்ற அடிப்படையில் 25-06-2004 அன்று வெளியான வெள்ளிநாதத்தில் கட்டுரை அமைந்துள்ளது.

பறை மீது காதல் கொண்டவன் என்கின்ற அடிப்படையில் நாம் அனுபவிக்கும் துன்ப துயரங்களை இக் கட்டுரை அடிப்படையில் பகிரலாம் என எண்ணுகின்றேன்.


தமிழர்களுடைய கலாசார பண்பானது சாதி அடிப்படையிலேயே நகர்ந்துள்ளது. சமூகப்படி நிலை பறை கொட்டுபவர்கள் சமுகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுக்கு எப்படி முகம் கொடுத்துக் கொண்டு தமது முரசினை வளர்ப்பது.

அதனை விட, இம்மக்கள் வாழ்கின்ற கிராமங்களில் பறை தொடாத ஊரே இல்லை. இக்கலையினை கைவிட்ட பல கிராமங்கள் வளர்ச்சி கண்டுள்ளன. இதனை தொடர்கின்றவர்கள். இவர்களது கிராமங்களில் இருந்து, வேறாகியுள்ளனர். இதற்கான காரணம் இம்மக்களுடனேயே இணைந்து வாழமுடியாமையே.

இக்கலையை இம்மக்கள் வளர்க்க முன்வராமைக்கான காரணம். இக்கலையை தொழிலாகக்கொள்வோரின் வறுமை நிலையும், சமூக அந்தஸ்துமே. முரசு கொட்டுபவர் குடும்பங்களைச்சந்தித்தால் புரியும். பிள்ளைகள் கூட பாடசாலைக்கல்வி கற்காத நிலையில் அதிக குடும்பங்கள் உண்டு.

தேசியக்கலையை மீட்டுபவன் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் நிலையில் இக்கலையை பற்றி சிந்திக்க அல்லாவிடின், இதை வளர்ப்பதற்கான முயற்சியில் பொறுப்பானவர்கள் இறங்க வேண்டும். யாவரும் பறையில் திறமைசாலிகளாக மாற்றமடைய வேண்டிய நடவடிக்கைகளை செய்தாக வேண்டும்.

## 'பறை' தொடர்பான ஒரு மனக் குமுறல்



அண்மையில் வவுனியாவில் இளவயதை உடையவரது மரண ஒருவரது ஊர்வலம். ஊர்வலத்தில் இணைந்து வந்தவர் பலர் சோகமாக காட்சியளித்தனர். குருமன்காட்டுச் சந்தியில் வைத்து முரசு அறைந்தோருக்கு, பொன்னாடை போர்ப்பது போல வேட்டி சால்வையால்.போர்க்கப்பட்டார்கள் இச்சம் பவங்களானது முரசுக் குரியதா?

மரண வீட்டுக்கு முரசு அழைக்கப்படுகின்றது. முரசை கொட்டுவதற்கு ஏற்ற இடம் கூட கொடுக்கப்படுவது இல்லை. சில இடங்களில் வீதி ஓரமாகவும், பச்சை ஓலைகளின் மேலும் இருத்தப்படுகிறார்கள். இவை பறைக்கு மட்டுமல்ல கொடுக்கப்படுகிறது. ஒட்டு மொத்த சமூகத்திற்கே வழங்கப்படுகிறது. இப்படியாக முரசு இம்மக்களுடன் பல வடிவங்களில் விளையாடுகிறது.

அண்மைய ஆண்டுகளில் கிழக்கு மாகாண களுதாவளை இளைஞர்கள் தமது கிராமத்தில் காணப்படும் முரசு கொட்டுபவர்களை ஏனைய கிராமத்தவர் அழைக்கவேண்டாம், என்கின்ற கருத்துப்பட முரசறிவிப்பவர்களை அழைக்கும் ஏனைய கிராமத்தவர்களுக்கு வேண்டுகோள் ஒன்றினை விடுத்திருந்தனர். முரசினை கொட்டுவதனால் அக்குடும்பங்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்களை தெரிவித்திருந்தனர். அதன் பின்னராக பல அறிஞர்கள் கட்டுரைகளை வரைந்தனர். வரைகின்றனர். அத்தொழில்களில் ஈடுபடுபவர்களை நல் வழிப்படுத் தவும் அச்சமூகத்தினருக்கு முடியவில்லை. அவர்களின் வறுமையைப் போக்கவும் அக்கிராமத்தினருக்கு இயலாத பட்சத்திலேயே அவ் இளைஞர்கள் அக்கோரிக்கையினை முன் வைத்தனர்.

அதன் பின்னராக பல் கலைக்கழக விரிவுரையாளர் திரு. ஜெயசங்கர், அன்புமணி,தேனுராமன் போன்றவர்கள் சஞ்சிகைகளில் இதற்கு எதிரான அறிக்கையை விட்டிருக்கின்றனர். ஆதரவாக புதிய பூமி வெளியீடு விட்டிருக்கின்றது. என் போன்ற இச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இக்கலை வடிவத்திற்கு உயிர் கொடுக்க வேண்டுமென எண்ணுகிறோம். அதை செய்வது என்பது கடினமாகிறது.

இக் கலைக்கான ராகங்கள், தாளங்கள் எழுத்து வடிவில் இல்லை. மற்றவர்கள் கற்றுக்கொள்ள முடியாது உள்ளது. செய்து காட்டித் தான் மற்றவர்களுக்கு புரியவைக்க முடியும். செய்து காட்ட வேண்டுமாயின் இதனை கொட்டுகவர்களாலேயே செய்துகாட்ட முடியும். இந் நிலையில் மற்றவர்கள் இதனை ஏற்றுக் கொள்வார்களா? முரசினை வளர்க்கவும் முடியவில்லை. வாசிப்பதால் உயர்ச்சியும் இல்லை.

போன்ற கருத்துக்களை முன்வைத்து தாங்கள் எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக அல்லாமல் இக்குல மனிதர்கள் என்ற வகையில் எனது உணர்வுகளையும் இங்கு தந்துள்ளேன்.

ஜெயபாஸ்கரன்

யுத்தம் காரணமாக ஆண்கள் அதிகளவில் குறைந்து போனமை. வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்றமை. கைதுகள், கொலைகள் போன்றவை இன்றைய தமிழீழத்தின் உழைப்போர் தொகையை வெகுவாக வீழ்த்தியுள்ளது.

ஆண்களுக்கு விலையேற்றியாவது மகளை கரைசேர்க்க பெற்றோர் தவிப்பது, மணமகன் விலையேற்றத்தில் தெரிகிறது.

அதாவது சீதன பேரம் பேசலில் தெரிகிறது. குந்த ஒரு கோடி

## பணமகளா...? மணமகளா...? எங்கே தவறு நிகழ்கிறது

எப்படித்தான் பார்த்தாலும் இந்தத் ஆண்கள் தொகை வீழ்ச்சியானது. பணத்தால் நிருவக் கூடியதல்ல, மணமகன் வயதை எட்டிய

இல்லையென்றாலும் சீதனம் கோடி. மணமகளே! மணமகளே! நீ பணமகளாய் போய் மாப்பிளை வீடு சேரும் போது உன்னை நினைத்தா... உன் பணத்தை நினைத்தா மணமகன் அருகிருப்பான். என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு நிலைமை இப்போதும் தொடர்கிறது.

இத்தனை விலை கொடுத்து நாம் எல்லா தளைகளிலிருந்தும் விடுபட போராடுகிறோம். ஆனால் இன்னும் தான் எத்தனையோ சமூக நெருக்கடிகள் தெடர்கின்றன.

இதனை ஏன் நாம் எங்கள்



ஆழ்மனங்களில் அசை போட மறுக்கிறோம்.

இவை எங்கள் மனங்களில் ஏற்படுத்துகின்ற மாற்றங்களுக்கூடாக இவற்றை மாற்றியமைக்க முடியும்.

இதற்கு நாம் எங்கிருந்து தொடர வேண்டும் என ஒருமித்து சிந்திக்க வேண்டும் இந்த சிந்தனையின் வெளிப்பாடு எமது சமூக மாற்றமாக வெளிப்பட வேண்டும். இதுவே எங்கள் இனத்து விடுதலையை முழுமைப்படுத்தும்..

### தவறு

இவ்வார வெள்ளிநாதம் 16-22யூலை 2004 என பிரசுரமா வதற்குப் பதிலாக தவறுதலாக 22-28-யூலை 2003 என பிரசுரமாகியுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

# கிளிநொச்சியில் மனித உரிமைச்செயலகம்

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகம் திறந்துவைக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டிச் சம்பவம் கொழும்பில் சமாதான முயற்சிகள் எத்துணை பலவீனமாக இருக்கின்றன என்பதை காட்டுகிறது. அதே சமயம் கிளிநொச்சியில் மனித உரிமைகள் செயலகம் திறக்கப்பட்டமை, இங்கு சமாதானத்தின் கதவுகள் இன்னமும் முற்றாக மூடப்பட வில்லை என்பதைக் காட்டுகிறது.

புலிகளே முன் நின்று ஒரு மனித உரிமைச் செயலகத்தைத் திறந்து வைத்திருப்பது என்பது தமிழர்களின் அரசியல் கூர்ப்பில் ஒரு புதிய கட்டத்தின் தொடக்கம் எனலாம்.

சில வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு மருத்துவ அதிகாரி லண்டனுக்குப் போயிருந்தார். அங்கே அவர் பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அதிகாரிகளுடன் கதைத்துக் கொண்டிருந்த போது அவர்கள் புலிகளுக்கு எதிராகக் கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்களாம். எங்கிருந்து இந்த தகவல்களை பெற்றீர்கள் என்று அவர் கேட்டபோது அவர்கள், சில மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகளை மேற்கோள் காட்டினார்களாம். அதற்கு இவர் சொன்னாராம் நீங்கள் காட்டியவை எல்லாம் புலிகளுக்கு எதிரான அமைப்புக்களின் பக்கச் சாய்வான அறிக்கைகள் என்று. அதற்கு அந்தப் பிரிட்டிஷ் அதிகாரிகள் கேட்டார்களாம்.... அப்படியானால் இதற்கு மறுப்புக் கூறும் அறிக்கைகள் வெளியீடுகள் ஏதும் இருந்தால் காட்டுங்கள் என்று. அதற்கு இந்த வைத்திய அதிகாரி லண்டனில் இருந்து வெளிவரும் சில வெளியீடுகளை முன்வைத்துக் கதைத்த போது அவர்கள் சொன்னார்களாம் இவை புலிகளுடையவை அல்லது புலிகளுக்குச் சாய்வானவை என்று.

இது பற்றி இப் பத்தி எழுத்தாளருடன் கதைத்த மேற்படி அதிகாரி சொன்னார்... தமிழர்களின் தரப்பு நியாயங்களைச் சொல்லவல்ல நடுநிலை அமைப்புக்கள் ஏதும் அங்கே இல்லை என்று.

ஆனால், சில மாதங்களுக்கு முன்பு லண்டனில் இருந்து வந்த தமிழ் மனிதஉரிமை அமைப்பு ஒன்றின் முக்கியஸ்தர் கேட்டார்.... நடுநிலை என்று ஏதும் உண்டா? என்று. ஏனெனில் உலகில் உள்ள எல்லா நிறுவனங்களும் ஏதாவது ஒரு பின்னணியுடன்தான் காணப்படுகின்றன. எனவே பக்கச் சாய்வு என்பது ஏதோ ஒரு விதமளவுக்கு இருக்கத்தானே செய்யும் என்று.

உண்மைதான். உலகில் நடுநிலை என்று ஒன்று பிரயோகத்தில் கிடையாதுதான். புலிகளுக்குச் சார்பான அமைப்புக்களின் அறிக்கைகளை நம்ப முடியாது என்றால், புலிகளுக்கு எதிரான அமைப்புக்களின் அறிக்கைகளையும் நம்பக் கூடாதுதான்.

ஆனால், இங்கே பிரச்சினை என்னவென்றால் யாருடைய அறிக்கையை ஏற்றுக் கொள்வது, அல்லது மேற்கோள் காட்டுவது என்பது அறநெறிகள் மற்றும் பொதுவான மனிதநீதி என்பவற்றின் அடிப்படையில் முடிவெடுக்கப்படுவதில்லை. மாறாக, அவை நிலையான அரச நலன்கள், அவற்றின் பாற்பட்ட நாடுகள் மற்றும், நன்கு ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களுக்கிடையிலான உறவுகள் போன்றவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

அதாவது வர்த்தகமயப்பட்டுவரும் இவ்வுலகில் மனித உரிமைகள் என்பதெல்லாம் எப்பொழுதோ அரசியலாகிவிட்டன என்பதே.

எனவே, தகவல் யுகத்தில் மனிதஉரிமைகள் என்ற பதம் ஒரு அரசியல்பதமே தவிர அறநெறிகளின் பாற்பட்ட அல்லது நீதி நியாயங்களின் பாற்பட்ட ஒரு பதம் அல்ல.

உதாரணமாக ஈராக்கில் சதாம் ஹுசைனின் மனித உரிமை மீறல்கள்பற்றி அதிகம் அலட்டிக்கொண்ட அமெரிக்கா சவுதியில் தனது நண்பர்களான அரசகுடும்பத்தினரின் மன்னராட்சி பற்றி ஏதும் முறைப்பாடுகள் சொல்வதில்லை.

உலகளாவிய இஸ்லாமியத் தீவிரவாதிகளின் மனித உரிமைமீறல்களைக் கண்டிக்கும் அமெரிக்கா பலஸ்தீனத்தில் தனது செல்லப்பிள்ளையான இஸ்ரேல் செய்துவரும் மனித உரிமை மீறல்களைக் கடுமையான வார்த்தைகளால் கண்டிப்பதில்லை.

அமெரிக்காவின் இந்த மனிதஉரிமைகள் வியாபாரத்தை அறிவியல் தளத்தில் அதிகம் விமர்சித்துவரும் அமெரிக்கச் சிந்தனையாளரான நொம்ஸ்கி மற்றும் இந்திய எழுத்தாளரும் சமூகச் செயற்பாட்டாளருமாகிய அருந்ததி ரோய் போன்றோர் இதுபற்றி நிறைய எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

அமெரிக்காவும் அதன் தலைமையிலான மேற்கு நாடுகளும் தமக்கு அடங்காத நாடுகளையும் இனங்களையும் குறிப்பாக ஆயுதமேந்திப் போராடும் இனங்களையும் பணிய வைப்பதற்காகப் பயன்படுத்தும் ஒருகோட்பாட்டு ஆயுதமாக இன்று மனித உரிமைகள் மாறிவிட்டன. கடந்தவெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் மனித உரிமைகள் செயலகத்தைத் திறந்துவைத்துப் பேசிய புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தனது பேச்சின் ஓரிடத்தில்... "நாங்கள் பல நாடுகளுக்குச் சென்றவேளையிலும்,

**நிலாந்தன்**

பேச்சுவார்த்தை மேசையில் இருந்தவேளையிலும், எல்லா இடங்களிலும் எமக்கு எதிராக அவர்கள் தூக்கிய ஒரே ஒரு ஆயுதம் மனித உரிமைகள்...."என்று கூறியுள்ளார்.

மனித உரிமைகள் பற்றிய மேற்படிநாடுகளின் விழுமியங்களை முழுவதுமாகப் பின்பற்றினால் உலகில் ஆயுதப் போராட்டம் என்று எதுவுமே இருக்கமுடியாது. நசுக்கப்படும் இனங்கள் நசுங்கிக்கிடக்க வேண்டியதுதான். தவிர மேற்படி விழுமியங்களை இந்நாடுகளே முழுக்கமுழுக்க மதித்து நடக்கின்றனவா? என்பதும் ஒரு முக்கியமான கேள்வி.

இதை இப்படி எழுதுவதன் மூலம் இன்று இப்பத்தி, ஆயுதப்போராட்டங்களுக்குள் நிகழும் மனித உரிமை மீறல்களை வலிந்து நியாயப்படுத்துகிறது என்று அர்த்தமல்ல. மனித உரிமைகளை மதிக்காத எந்த ஒரு போராடும் இனமும் முழு விடுதலைக்குத் தகுதியற்றது என்பதில் இப்பத்திக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

ஆனால், அதேசமயம் போராடும் இனங்களின் மனித உரிமை மீறல்களைப் பற்றி கதைக்கும் நாடுகள் பலவற்றுக்கு அதைப்பற்றிக் கதைக்கும் யோக்கியதை இல்லை என்பதோடு அவர்கள் அப்படிக் கதைக்கும்போது எப்பொழுதும் வசதியாகக் காரணத்தைத் தப்ப விட்டு விளைவுகளைத் தூக்கிப் பிடித்து பெருப்பித்து வருகிறார்கள் என்பதே இன்று இப்பத்தியின் முக்கிய குற்றச்சாட்டாகும்.

அதாவது, மனித உரிமை மீறல்கள் வெற்றிடத்திலிருந்து வருபவை அல்ல. எல்லா மனித உரிமை மீறல்களுக்கும் எதோ ஒரு காரணம் இருக்கும். அதைக்கண்டு பிடித்தால்தான் குறிப்பிட்ட மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

உதாரணமாக, ஈழப் போரில் நிகழும் மனித உரிமை மீறல்களைப்பற்றிக் கொழும்பிலுள்ள புத்திஜீவிகள் பலரும் பெரும்பாலான ஆங்கில மற்றும் சிங்கள மீடியாக்களும் காட்டமாக விமர்சித்துவருகின்றன. இவர்களெல்லாரும் காரணத்தைப் பார்க்க மறுத்து விளைவின் விளைவைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காரணம் என்னவெனில் - தமிழர்களின் மனித உரிமைகளை கொழும்புமையச் சிங்களத் தலைவர்கள் மதிக்கத் தவறியதுதான். அதாவது, தமது மனித உரிமைகள் மறுக்கப் பட்டதாலேயே தமிழர்கள் போராடப்புறப்பட்டார்கள். எனவே, தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் இருக்கக்கூடிய மனித உரிமை மீறல்களைப்பற்றிக் கதைப்பது என்பது அந்தப்போராட்டத்துக்குக் காரணமாயிருக்கும் சிங்களத்தலைவர்கள் தமிழர்களுக்குச் செய்த மனித உரிமை மீறல்களைப்பற்றிக் கதைப்பதிலிருந்தே தொடங்கப்பட வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்பு முன்னாள் ஜே.வி.பி. பிரமுகரான ஒரு சிங்களப் பத்திரிகையாளருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்... "தமிழர்கள் மத்தியில் சனநாயகம் இல்லையென்பதால் இடைக்கால நிர்வாகத்தை தமிழர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று ஜே.வி.பி. வாதாடியதாம். அதற்குப் பதிலளித்த ஜே.வி.பி.க்கு எதிரான சில சிங்களப் புத்திஜீவிகள் சொன்னார்களாம்... தமிழர்களிடம் சனநாயகம் இருக்கிறதா இல்லையா என்பது தமிழர்களுடைய உள்வீட்டுப் பிரச்சினை. அதைத் தமிழர்களே தீர்த்துக்கொள்ளட்டும். முதலில் தமிழர்களின் சனநாயக உரிமைகளை நாங்கள் - சிங்களவர்கள் - மதிப்போம். அதன்படி அவர்களுக்கே உரியதை அவர்கள் பெறுவதைத் தடுக்காமல இருப்போம். நாங்கள் தமிழர்களின் மனித உரிமைகளை மதிக்கத் தயாராக இல்லாத ஒரு நிலையில், தமிழர்களின் மனித உரிமை மீறல்களைப்பற்றிக் கதைக்க எங்களுக்கு எந்த யோக்கியதையும் இல்லை..." என்று.

இப்பதிலையே மனித உரிமைகளை அரசியலாக்கி வைத்திருக்கும் எல்லாமேற்கு நாடுகளுக்கும் கொடுக்கமுடியும்.


சமாதானம் மெலிந்து கொண்டே போகும் இத்தருணத்திலும் கிளிநொச்சியில் மனித உரிமைகள் செயலகம் திறக்கப்பட்டிருப்பது என்பது, மேற்கு நாடுகளின் அலைவரிசையில் பிடிபடவல்ல செய்தியொன்றை சொல்லாமற் சொல்வது போலிருக்கிறது.

அந்தச் செய்தி என்னவெனில்- நிலவும் யுத்தநிறுத்தச் சூழலில்தான் இதெல்லாம் சாத்தியமாகிறது. எனவே யுத்த நிறுத்தத்தைப் பாதுகாத்தால்தான் தமிழ்ப்பகுதிகளில் மட்டுமல்ல முழு இலங்கைத்தீவிலுமே ஏன் ஓரளவுக்கு இந்தப்பிராந்தியம் முழுவதிலுமே மனித உரிமைகளைப் பாதுகாக்கமுடியும்.

அதாவது இலங்கைத் தீவில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்பது யதார்த்தத்தில் யுத்தநிறுத்தத்தைப் பாதுகாப்பதிலிருந்தே தொடங்கப்படவேண்டியிருக்கிறது.




*தமிழர்களின் மனித உரிமைகளை கொழும்புமையச் சிங்களத் தலைவர்கள் மதிக்கத் தவறியதுதான். அதாவது, தமது மனித உரிமைகள் மறுக்கப் பட்டதாலேயே தமிழர்கள் போராடப் புறப்பட்டார்கள். எனவே, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருக்கக்கூடிய மனித உரிமை மீறல்களைப்பற்றிக் கதைப்பது என்பது அந்தப் போராட்டத்துக்குக்காரண மாயிருக்கும் சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்குச்செய்த மனித உரிமை மீறல்களைப்பற்றிக்கதைப்பதிலிருந்தே தொடங்கப்பட வேண்டும்.*



# சிறிலங்காவில் ஆதிக்கம் செலுத்துவது சிங்கள பௌத்த பேரினவாதமா?



சிறிலங்காவின் அரசாங்கங்களை தமிழ் மக்கள் எப்போதுமே சிங்கள, பௌத்த பேரினவாத அரசாங்கங்களாகவே பார்த்துவந்துள்ளனர். இலங்கை என்கின்ற ஒரேதீவைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும், ஈழத் தமிழர்கள்மீது சிங்களபௌத்த பெரும்பான்மையினத்தின்பேரால் திணிக்கப்பட்டுவந்த ஒடுக்கு முறைகள், இந்த அரசுகளை தமிழ் மக்கள் அவ்வாறு கருதக் காரணமாக இருந்துவந்தது.

ஆனால், சிறிலங்கா அரசியலின் அண்மைக் காலப் போக்குகள், சிறிலங்கா அரசுகளின் இந்தச் சிங்கள பௌத்த பேரினவாதத் தோற்றப்பாட்டைக் கேள்விக்குட்படுத்துபவையாக அமைந்துள்ளன. குறிப்பாக, ஜாதிக ஹெலஉறுமய என்ற பெயரில், சிறிலங்காவின் அரசி யலுக்குள், பௌத்தபிக்குகளின் நேரடித் தலையீடு ஏற்பட்டபோது, அரசியல்வாதிகளின் இந்தப் பௌத்த பேரினவாத முகம் ஆட்டங்காணத்தொடங்கிவிட்டதாகவே உணரமுடிகிறது.

சிங்கள இனத்தையும், அவர்களுடைய அடையாளத்தின் மற்றைய பிரதானகூறாக இருக்கும் பௌத்த மதத்தையும் பாதுகாக்கும் பொறுப்பை தாமே நேரில் பொறுப்பேற்பதாகக் கூறி, பௌத்த துறவிகளே அரசியலுக்குள் நுழைந்தபோதே, சிறிலங்காவின் பாரம்பரியஅரசியல்வாதிகளுக்கு இந்த அவலம் நேரத்தொடங்கியது.

சிறிலங்காவின் அரசியலில் இந்தப் பௌத்த, சிங்கள பேரினவாதம் நுழைந்தமைக்கு ஒருநீண்ட வரலாறேஉண்டு. மேற்குலகின் சனநாயக அரசியல் பாரம்பரியங்களுடன் சுதந்திர (?) இலங்கையில் ஆட்சியமைப்பு உருவாக்கப்பட்டதுமே, சனநாயக நடைமுறையின் பிரதான கூறுகளாகியகட்சி அரசியலும், தேர்தல்முறைமையும், அரசியலில் இந்தப் பௌத்த பேரினவாதத்தின் பிரவேசத்துக்கு வித்திட்டது.

நேர்மையான அரசியலை நடாத்தி அதன்மூலம் மக்களுடைய ஆதரவைப் பெறத்திராணியற்ற தென்னிலங்கைச் சிங்கள அரசியல்வாதிகள், இலங்கைத் தீவில் பெரும் பான்மையினராக வாழ்ந்துவந்த சிங்கள இனத்தவரை அதிகம் கவர்வதன் மூலமே, தேர்தல் வெற்றிகளைச் சாதிக்கமுடியும் என்ற குறுக்கு வழியை அதிகம் நாடத்தொடங்கினர். இதற்காக பெரும்பான்மைச் சிங்களவரையும், அவர்களுடைய பிரதான மதமாக இருந்த பௌத்த மதத்தையும், இன்னும் அவர்களுடைய மொழி, கலாசாரம் போன்றவற்றையும் தமது அரசியலின் பிரதான மூலதனமாக்கிக்கொள்ள இந்த அரசியல்வாதிகள் தர்மானித்துக் கொண்டனர். இந்தத்தீர்மானத்தின் விளைவையே, 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச்சட்டமாக இந்தத்தீவு சந்தித்தது. அப் போது, அரசியலின் பிரதான போட்டியாளர்களாக இருந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும், ஜே.ஆர்.ஜெயவர்தனா வும், சிங்கள மக்களை அதிக ளவில் யார் கவரமுடியும் என்று நடாத்திய ஒரு அரசியல் போட்டியின் விளைவே இந்தத் தனிச் சிங்களச்சட்டம்.

தொடர்ந்து அரசியலில் அறிமுகப்படுத்தப்பட்ட பௌத்த மதத்தைப் பிரதான மதமாக்கும் சட்டம், கல்வியில் தரப்படுத்தல் சட்டம் என்று எல்லாமே, சிங்கள பெரும்பான்மையினத்தைத் திருப்திப்படுத்தி, வாக்குவேட்டை நடாத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட அரசியல் காய் நகர்த்தல்களே.

ஆக, தென்னிலங்கை அரசியல்வாதிகளின் இந்த சிங்கள, பௌத்த பேரினவாத முகம் என்பது, சிங்களத்தின் மீதான பற்றுறுதியாலோ, அல்லது, பௌத்தமதத்தின் மீது ஏற்பட்ட

**ருசாங்கன்**

தீராத பக்தியினாலோ அவர்களுக்கு தோன்றியதொன்றல்ல.

மாறாக, அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்காகவும், வென்றெடுத்ததை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் அவர்கள் வலிந்து போட்டுக்கொண்ட அரசியல் வேடங்களே இவை.

சிங்கள ஆட்சியாளரின் இந்தப் பேரினவாத வேடத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில், ஈழத்தமிழர்களுக்கு அவர் கள் பேரினவாத ஆட்சியாளர்களாக தோன்றியிருந்ததில் வியப்பேதுமில்லை. ஆனால், இந்தச் சிங்கள, பௌத்த பேரினவாதமென்பது, இந்தச் சிங்கள ஆட்சியாளர்களின் உண்மையான, நேர்மையான, சிங்களம், பௌத்தம் என்பவற்றின்மீதான ஆழ்ந்த பற்றுறுதியால் ஏற்பட்ட ஒன்றல்ல என்பதுதான் யதார்த்த நிலையாக இருக்கிறது.

அண்மையில் சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் நடந்தேறிய அனர்த்தங்களை சரியாக அவதானித்தால், இவ்வளவுகாலமும் சிங்கள ஆட்சியாளரினால் தூக்கிப்பிடிக் கப்பட்டு வந்த சிங்கள, பௌத்த பேரினவாதமென்பது எவ்வளவு போலியானது என்பது புரியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக, பாரம்பரிய அரசியல்வாதிகளுக்குச் சவால்விட்டு நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்திருக்கின்ற பௌத்த பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, அன்றையதினம் வழங்கப்பட்ட 'விசேடமரியாதை', சிங்கள ஆட்சியாளரின் உள் மனதில் சிங்கள பௌத்தத்தின் மீது என்றுமே உண்மையான பக்தி இருந்ததில்லை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

எப்படியும் நாடாளுமன்ற அரசியலைக் கைப்பற்றிவிட வேண்டும் என்று அரும்பாடுபட்டு வரும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, இந்தப் பதின்மூன்றாவது நாடாளுமன்றம் கூடிய நாள்முதலே, பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை இயன்றளவு அவமதித்து வந்ததேயாயினும், மூன்றாம் தடவையாக நாடாளுமன்றம் கூடிய போது, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேர்ந்தகதி, உலகில் வேறெந்த நாடாளுமன்ற சனநாயக அரசியல் பாரம்பரியத்திலும் நிகழ்ந்திராத ஒரு அரசியல் அனாகரிகம்.

இந்த அனர்தத்தின் போது, பௌத்த பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட கதிகுறித்த செய்திகள் இப்போதுதான் மெல்ல மெல்ல ஊடகங்களுடாகக் கசிந்துவருகின்றன. எட்டாம் திகதியே நாடாளுமன்றத் தாக்குதலின் போது மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான அக்மீமனதேர், மற்றும் சிறிசுமங்கள தேரர் ஆகியோரின் உடல் நிலை குறித்த மருத்துவ அறிக்கைகள் முழுமையாக வெளிவந்தன.



சிங்கள தேசத்தின் உயர் மதிப்புக்குரிய சின்னமான, பௌத்த மதத்தைச் சேர்ந்த, மதிப் பார்ந்த துறவியொருவருக்கு, சிறிலங்காவின் அரசியல் உயர் பீடத்தினால் இழைக்கப் பட்டிருக்கின்ற மன்னிக்க முடியாத அவமானம் இது.

இதை இழைத்தவர்கள், இதே சிங்கள பௌத்தத்தை தமது அரசி யல் மூலதனமாகக் கொண்டு இவ் வளவு காலமும் அரசியல் பிழைப்பு நடாத்திவந்த சிங்கள அரசியல் வாதிகள்தான்.

இவர்கள் ஏன் இப்போது இப்படிச் செய்கிறார்கள்?. ஆரம்பத்தில் கூறியதுதான் இதற்குக் காரணம். அதாவது, தென்னிலங்கை அரசியல் வாதிகளின் பிரதான அரசியல் மூலதனமாக இவ்வளவு காலமும் இருந்துவந்த சிங்கள பௌத்த பேரினவாதத்தை, பௌத்த மதத் தின் உயர் ஸ்தானத்தில் இருப்பவர்களான பௌத்த பிக்கு களே தம்கையில் எடுத்துக் கொண்டு விட்டால், அப்புறம் அரசியல் வாதிகள் பாடு என்னாவது என்ற ஆதங்கம்தான், இவ்வாறு ஆத்திரமாக வெடித்திருக்கிறது. அரசியல் பம்மாத்துக்கள் என் பதை சிங்களமக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அதைச் சரியாகப் புரிந்து கொண்டால், தமது ஆட்சியதிகாரத்தைக் காப்பாற்றவும், அதனைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளவும் என சுயநலத்தோடு பாடுபட்டுவரும் இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக, ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களோடு இணைந்து போராடுவதற்கு அவர்கள் துணிந்து முன் வருவார்களா?

## மயில்



ஒருவர்: முத்தையன் கட்டுக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடையில் எத்தனை மைல் இருக்கும்?
மற்றவர்:
அது காட்டுக்குள்ள இருக்கிற மயில்களைப்பொறுத்தது.




# ஒலி, ஒளிபரப்பில் டிஜிற்றல் வானொலி



ஒலி - ஒளிபரப்புக்களின் நவீனத் துவத்தில் புதிதாக வந்திருப்பது டிஜிற்றல் A.M. வானொலி. Broadcast asia 2004ல் இது அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது உலகளவில் வானொலி ஒலிபரப்புக்கள் தரை அலை பரப்பிகள் வழியாகவும், இணையத்தளங்கள், செய்கோள்கள் வழியாகவும், மேற்கொள்ளப் படுகின்றன. அதேவேளை தொலைக் காட்சி ஒளிபரப்புகளும் நடக்கின்றன.

தரை ஒலி- ஒளிபரப்புக்கள் கோபுரங்கள் அமைக்கப்பட்டு அதன் வழி அலை பரப்பப்பட்டு மேற் கொள்ளப்படுகின்றன.

இணையத்தள ஒலி- ஒளிபரப்புக்கள் ஒலி-ஒளி அலைகள் நுண்எண்ணிகள்- அதாவது டிஜிற்றலாக மாற்றப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

செய்கோள் ஒலி- ஒளி பரப்புக்களில் முனைக்கு முனை அதாவது (Point to Point)வகை நுண் அலைகளால் (Microwave) மேற் கொள்ளப்படுகின்றன. நுண்அலை ஒலிபரப்புக்களில் செய் கோள் அலை பரப்பி கோள அலைவாங்கி (அன்ரெனா) எமது நுகர்வு கோள் அலை வாங்கி சரி நேராக இருக்க வேண்டும். நுண் அலைகளுக்குரிய முதன்மை நிபந்தனையே அது தான்.

இதில் மிக எளிமையான மலிவான ஒலி-ஒளி பரப்பி நுட்பம் தரை வழியிலானதாகும். தற்போது வானொலி ஒலிபரப்பில் சிற்றலை, மத்திய அலை, பண்பலை என்ற மூன்று வடிவங்களில் நாம் வானொலியை கேட்கின்றோம். மின் காந்த அலைகளில் ஒலி அலைகள் மின் அலைகளாக மாற்றியேற்றப்பட்டு அலைபரப்பி மூலம் பரப்பப்படுகின்றது. இதனை எமது வானொலி ஏற்று - அதில் மின்காந்த அலையில் இருந்து ஒலி மின்னலையை பிரித்து ஒலியாக மாற்றி எமக்குக் கேட்கச் செய்வது வானொலி.

வானொலியில் நாம் கேட்கும் அலைவரிசையை- குடிசார் அலை என்கிறார்கள். ஆங்கிலத்தில் Citizen wave என்கிறார்கள். இதற்கு அப்பால் உள்ளவை தொலைத்தொடர்புக்கான அலை வரிசைகள் 2.3 MHZ முதல் 22MHZ வரை சிற்றலை53KHZ முதல் 160KHZ வரை மத்தியஅலை 88 MHZமுதல் 108MHZ வரை பண்பலை இதற்குமப்பால் உள்ளவை தொலைத்தொடர்பு, செய்கோள் தொடர்புக்குப் பயன்படும் அலை வரிசைகள். அது ஒரு புறம் இருக்க, இந்த தரைவானொலி பரப்புகளில் அதிகம் ஒலித்தரம் கொண்டது பண்பலை FM. பண்பலையில் தான் உலகமே மூழ்கிக் கிடக்கின்றது. ஏனெனில் பாடல்களை மிகத்துல்லியமாகக் கேட்கலாம். பாடல்களின் உண்மை ஒலிப்பதிவை ஸ்ரீரியோ நயத்தில்கேட்க உதவுவது பண்பலை ஸ்ரீரியோ என்றால் முப்பரிமாண ஒலி ஸ்ரீரியோவில் நீங்கள் ஒருபாடலை உற்றுக் கேட்டால் அப்பாடலின் சூழல் - இசைக்கருவிகளின் தூரம், என ஒலியின் முப்பரிமாணத்தை நீங்கள் தரிசிக்கலாம். இன்று உலகளவில் பண்பலையே ஒலித்தரமிகுந்த வானொலி. மத்தியஅலை ஒலியின் உண்மையான அதிர்வெண்களை மட்டுப்படுத்தி வருவதால், அந்த ஒலித்தரம் இருப்பதில்லை.


ஆனால், அமெரிக்காவின் Broadcast Electronics நிறுவனத்தின் புதிய உருவாக்கம், டிஜிற்றல் மத்தியஅலை(Digital Medium wave) ஆகும். BroadCast asia 2004ல் BE நிறுவனம் இதனைக் காட்சிப்படுத்தியிருந்தது. டிஜிற்றல் மத்தியஅலை பண்பலை ஆகிய இரு ஒலிபரப்பிகளை கண்காட்சி மண்டபத்தில் வைத்திருந்து ஒரே பாடலை இரண்டின் ஊடாகவும் ஒலிக்கவிட்டிருந்தார்கள்.

இந்த டிஜிற்றல் மத்திய அலை பற்றி அதன் நிபுணரிடம் கேட்டோம்.

அவர் ஒரு சாது ஒலி கேட்பியை (Head phone) தந்தார். முதலில் டிஜிற்றல் மத்திய அலை வானொலியை கேட்கச்சொன்னார் கேட்டோம். பின் அந்த அலை பரப்பியிலேயே சாதாரண மத்திய அலைக்கு மாற்றினார். பின் டிஜிற்றல் மத்தியஅலைக்கு மாற்றினார். மத்திய அலையை விட மிக மிக தரமாக, துல்லியமான ஒலியை டிஜிற்றல் தந்தது. அடுத்ததாக பண்பலை ஒலிபரப்பை கேட்கத்தந்தார்.

மூன்றில் டிஜிற்றல் மத்திய அலையே மிகத் தெளிவாக இருந்தது.

இதுபற்றிக்கேட்டோம். இந்த அலைபரப்பி இப்போது அமெரிக்காவில் 300 இடங்களில் அமைக்கப் பட்டுள்ளதாகவும் - இதனை சாதாரண வானொலிகளில் கேட்கமுடியாது



என்றும் டிஜிற்றல் மத்திய அலை உள்ள வானொலியிலேயே கேட்க முடியும் என்றும் குண்டைத் தூக்கிப்போட்டார்.

1990க்கு முன்னரான வானொலிகள் அனேகமானவற்றில் பண்பலை இல்லை. 1990ன்பின் நம் வானொலியைப் பண்பலைகள் நிறைக்கத் தொடங்கியபோது - பண்பலை உள்ள வானொலிகளை மக்கள் வாங்கத் தொடங்கினர். இன்று பண்பலை உள்ள வானொலி 100ரூபாவுக்கு வந்துவிட்டது. அதுபோல் புதியதலைமுறை வானொலியான டிஜிற்றல் மத்திய அலையும் நம் வானை நிறைக்க இதுவும் மலியும்.

இதற்கிடையே இணைய அலையில் உலவியபோது ஒரு புது விடயம் கிடைத்தது. செல்பேசிகளின் மின்கலங்களில் புதிதாக எரிபொருள் மின்கலங்கள் நுழைந்திருக்கின்ற தகவல் கிடைத்தது. இப்போதுவரை எரிபொருள் மின்கலங்கள் விண்கலங்களில் தான் பயன்பட்டுவருகின்றன. இப்போது கையடக்க செல்பேசிகளுள்ளும் ஒளிந்து இருக்க ஆரம்பிக்கின்றது. எரிபொருள் மின்கலம் என்றால் என்ன - செல்பேசியில் அது எப்படி? விபரங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.

**த.அருவி**




## கீழ்முதுகு வலிக்கு ஒரு நிவாரணி

கீழ் முதுகுவலி அனைவருக்கும் ஏற்படுகிறது. கண்டபடி உடலை வில்போல வளைத்து வேலை செய்வது பளுவை தூக்குவது - நகரப் பேருந்தில் பயணம் செய்வது கணினிக்குமுன்னாள் மணிக்கணக்கில் உட்காருவது போன்றவை சில. இதைத் தவிர உறுப்புசார்ந்த ஹெர்னியேட் டிஸ்க், தண்டுவட நெருக்கம், தசைநார் அழற்சி, ட்ரமடால் கலந்துள்ள அடாமன் கேப்சூல்களாகவும், ஊசி மருந்தாகவும் தயாரித்து விற்பனை செய்கிறது ஜெர்மன் ரெமடீஸ்

## குழந்தைகளைக் காப்பகங்களில் விடுவது நல்லதா?

நல்லதில்லைத்தான் அம்மாக்கள் வேலைக்குப்போவது குழந்தைகளுக்கு அறவே பிடிக்காது. பள்ளிக்கு அனுப்பும்போது 'டாட்டா' சொல்லவேண்டும், பள்ளியிலிருந்து திரும்பி வரும்போது, ஆசை, பாசத்துடன் உணவு கொடுக்கவேண்டும் என்று குழந்தைகள் எதிர்பார்க்கும். இதை யாரும் குறை கூறவே முடியாது.

ஏனெனில், பெரியவர்களாகிய நாமே அப்படித்தானே இருக்கிறோம்? இது இல்லாத பட்சத்தில் குழந்தைகள் மனம் வெறுத்துப்போய், 'டெம்பர் டான்ட்ரம்' என்ற மனநோய்க்கு ஆளாகிவிடுகின்றனர். மற்றவர்களைக் கடிப்பது, அடிப்பது, சாப்பிடாமல் முரண்டு செய்வது, அழுவது என்று தன்னையறியாமல் எதாவது செய்வர்.

எனினும், இக்காலத்தில் அம்மாக்களும் வேலைக்குச் செல்வது இன்றியமையாததாகிவிட்ட நிலையில், மாலையில் வீடு திரும்பியதும், முதல் வேலையாக குழந்தைகளை கவனிக்க வேண்டும்.

'டிவி' பார்ப்பதை விட்டுவிட்டு, குழந்தைகளோடு விளையாடணும், வெளியில் எங்காவது அழைத்துச்சென்று நான்கு வார்த்தை அன்பாகப் பேசவேண்டும். குழந்தைகள் சொல்பவற்றை அக்கறையுடன் கேட்க வேண்டும். தனக்கு அன்பே கிடைக்கவில்லை என்று அந்தக் குழந்தை ஒரு கணம் கூட எண்ணுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடாது.

இவையெல்லாம் சாதாரண நடைமுறைகள் தான்: இவற்றை பின்பற்றினாலே ஓரளவு குழந்தைகளை நல்லமுறையில் வளர்க்கலாம் திருப்தி ஏற்படும்.

## தீக்காயத்திலிருந்து தப்புவது எப்படி?

தீக்காயம் என்பது மிகவும் ஆபத்தான விபத்து என்பதாலும், அதனால் தீவிர சிகிச்சை செய்துமே எண்ணற்றவர்கள் இறக்கிறார்கள் என்ற காரணத்தினாலும் வரும்முன் காப்போம் என்ற கொள்கையை கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகும்.

இது பெண்களுக்கு அதுவும் சமைக்கின்றபோது நிகழ்வதால், இவர்கள் சமைக்கின்ற போது மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஜன்னல்களை திறந்து வைத்திருப்பது நல்லது. 'நைலக்ஸ்' போன்ற எளிதில் தீப்பற்றும் ஆடைகளை அணியாமல் பருத்தி ஆடைகளை அணிய வேண்டும்.

'காஸ்' ஸ்ட்வ்வை பற்றவைக்கும் முன் 'ரப்பர் குழாய்' சரியாக பொருந்தி இருக்கிறதா? அதில் துளைஉள்ளதா? என பரிசோதனை செய்ய வேண்டும். அடுப்பை பற்றவைக்கும் முன்பாக 'தீப்பொறியை' ஏற்படுத்தி பார்க்கவேண்டும். பிறகே 'ஸ்டவ்வை' பற்றவைக்கவேண்டும். 'காஸ்' வாடை வந்தால், ஜன்னல்களை திறந்து விடவேண்டும்.

*தீக்காயத்திற்கு முதலுதவி:*

01. ஒருவர் உடலில் தீப்பற்றிக்கொண்டால் அவர் நல்ல தடிப்பாக இருக்கும் போர்வையை தன் உடலில் சுற்றிக் கொண்டு உடனே தரையில் உருளவேண்டும். இதை அவரே செய்ய முடியாமல் போனால்... அருகில் இருப்பவர்கள் செய்ய வேண்டும்.

02. எந்தக் காரணத்தினால் தீ விபத்து எற்பட்டதோ அதை நிறுத்தவேண்டும்.

03. உடலில் எரியும் தீயை அணைக்க மணல், தண்ணீர் ஆகியவற்றை பயன்படுத்தக்கூடாது.

04. தீப்பற்றி எரிபவர் பயந்து ஓடவும் கூடாது. ஓடும் போது காற்றின் வேகத்தால் தீ மேலும் உடலில் பரவ அது ஏதுவாகும்.

05. பிறகு ஆடைகளை நீக்கிவிட்டு காயப்பட்ட பகுதிகளை பார்க்க வேண்டும்.

06. அதனை தூய நீரில் கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

07. சிறிய காயமாக இருந்தால் தண்ணீருடன் சோப்பையும் பயன்படுத்தி காயத்தை சுத்தம் செய்யலாம்.


08. எதிரி உயிரிமருந்துகள் இருந்தால் காயத்தில் உடனே போடவேண்டும்.

09. இவர்களுக்கு தண்ணீர் குடிக்கக்கொடுக்கக் கூடாது.

10. உடனடியாக தடுப்பூசி போடவேண்டும்.

11. காயம்பட்ட பகுதியை சுத்தமான தூய துணியால் மூடி அருகில் இருக்கும் மருத்துவ மனைக்கு உடனடியாக கொண்டு செல்ல வேண்டும்.

### விமான டிக்கற்...



ரெண்டு விமான ரிக்கட் பதிவு செய்யுங்கோ - சீனாவுக்கு என்ரமனிசி சைனீஸ் ஹோட்டல்ல சாப்பிடவிரும்புறா-

அடக் கடவுளே அதுக்கு வன்னிக்கு ரிக்கட் பதிவு செய்தாக் காணும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 16 . 07 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# எதிர்விளைவுகள்...!

அண்மையில் சர்வதேச போர்த்திறனாய்வு முன்னறிவிப்பு அமைப்பு அரசு புலிகளைப் பலவீனப்படுத்தி மீண்டும் போரை ஆரம்பிக்கும் திட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதாகத் தெரிவித்திருக்கிறது.

இது இவ்வாறிருக்க சிறிலங்காவிற்கான புதிய இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொட புலிகளை யுத்தத்தில் சந்திக்கத்தயார் எனவும் இதற்கே படையினருக்கு நவீன பயிற்சி வழங்கப்படுவதாகவும் தெரிவித்திருந்தார். இதனடிப்படையில் நோக்கும் போது அரசு போருக்கான தயார்நிலையில் படையினரை ஒரு புறம் புடம் போட்டுக்கொண்டு, இன்னொரு புறம் போரைத் தொடக்கிவிடக் கூடியதாக புலிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதையும் புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

அரசின் செயற்பாட்டை சர்வதேச போர்த் திறனாய்வு முன்னறிவிப்பு அமைப்பு தெரிவித்தமைக்கு அப்பால் அரசின் சமாதான முயற்சி மீதான அசண்டையும் படையினரின் வன்முறைத் தூண்டல் முயற்சியும் இந்த யதார்த்த நிலைமையையும் அரசின் கபடத்தனத்தையும் தெளிவாகவே வெளிப்படுத்தியவண்ணமுள்ளது.

ஆனால் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்,

போரின் மீதான அரசின்ஆர்வத்தையும், போரை நோக்கிய படையினரின் நகர்வையும் ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளாக எவை அமைகிறது என்பதே இலங்கையின் சமாதான முயற்சிகள் மீது எவ்வளவுதான் சர்வதேச சமூகம் ஆர்வத்தையும் அக்கறையையும் காட்டினாலும் ஒரு சில பொறுப்பு வாய்ந்த நாடுகளின் செயற்பாடுகளோ அரசுக்கும் படையினருக்கும் போர் மீதான ஆர்வத்தை தூண்டுவதாகவே அமைகிறது.

குறிப்பாக ''அமெரிக்க இராஜதந்திரிகளும், இராணுவத்தளபதிகளும் இலங்கைக்கு வருகை தரும்போதெல்லாம் யாழ். குடாநாட்டுக்கு தமது விஜயங்களை மேற்கொள்வதை ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளனர் எனக் கூறுமளவிற்கு தமது பயணங்களை மேற்கொண்டிருந்தனர். ஆனால் இந்தப் பயணங்கள் பெருமளவு சமாதானத்தின் மீதான அமெரிக்காவின் ஆர்வத்தையும், அக்கறையையும் காட்டுவதற்குப் பதிலாக அமெரிக்கா சிறிலங்காப் படையினர் மீது கொண்ட அக்கறையும் ஆர்வத்தையும் காட்டியதே எனலாம்.

இன்னுமொரு வகையில் இர ுவ ரீதியாக கொண்டிருந்த கரிசனையைக்காட்டுவதாகவே இருந்தது.

இதனைச் சிறிலங்காப்படையினருக்கான ஆயுதத் தளபாட உதவிகளையும் இராணுவப் போர்ப்பயிற்சிகள் வழங்கியமையும் இவற்றை சுட்டிநின்றன.

இந்த நிலையில் சிறிலங்கா அரசுக்கு வழங்கப்பட்ட சர்வதேச நாடுகளின் இராணுவ ரீதியான உதவிகளும், ஆலோசனைகளும் சமாதானத் துக்கான ஆர்வத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக எதிர் விளைவுகளாக போரின் மீதான ஆர்வத்தையே அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதனைத்தான் தற்போது சிறிலங்கா அரசும், இராணுவமும் வெளிப்படுத்தத்தொடங்கியுள்ளன.

இவை தற்போது யுத்த நிறுத்தத்தையும், புரிந் துணர்வு உடன்படிக்கையையும் நெருக்கடிக்குள்ளாக் குகிறது. மேலும் இவை தொடருகிறபோது இலங்கையின் சமாதான முயற்சியே பெரும் நெருக்கடிக்குள்ளாகிவிடும்.

அப்போது இதற்கான தூண்டல் சக்தியாக செயற்பட்டதாக சர்வதேசத்தின் மீதே தமிழ் மக்கள் அதிருப்தி கொள்வார்கள்.

அத்தோடு சர்வதேச சமூகத்தின் சமாதானம் மீதான உண்மையான அக்கறையையும் ஆர்வத்தையும் கேள்விக் குள்ளாக்கிவிடும், என்பதோடு இலங்கையை மீள முடியா சகதிக்குள் தள்ளிவிட்ட பெருமையும் சர்வதேசத்தையே சென்றடையும்.

# சமாதானத்துக்கு விரோதமான அரச வானொலியின் செயற்பாடு

ச. சங்கரன்

**சிங்கள அரசு தமிழ் மக்களை ஏமாற்றி தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க தமது கட்டுப்பாட்டில் உள்ள தொடர்பு சாதனங்கள் மூலம் தமிழர் போராட்டத்திற்கு எதிரான பொய்ப்பிரசாரத்தினை முழுமையாக முடக்கிவிட்டிருக் கின்றது. உண்மைகளை திரிபுபடுத்தி பொய்களை நுட்ப மாகப் புனைந்து தமிழர் போராட்டத்தினை மழுங்கடிக்கும் வகையில் ஒரு உளவியல் பிரசாரப்போரையே நடாத்தி வரு கின்றது.**

சமாதானத்திற்கும் தேசியத்திற்கும் எதிராக சிறிலங்காவின் அரச வானொலிப்பிரசாரம் செய் கின்றது. அரசாங்கத்தின் நாசகார இச் சதித்திட்டம் இலங்கை அரசு மீது தமிழ் மக்களுக்கு சந்தே கத்தையே ஏற்படுத்துகின்றது.

ரி.பி.சி. வானொலியினை இலங்கை அரசு வானொலிஊடாக ஒலிபரப்புச் செய்வதானது இனப் பிரச்சினை தீர்வுத்திட்டத்தில் அரசின் கபடத்தனத்தை வெளிச்ச மிட்டுக்காட்டுகின்றது.

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும். தமிழ் ஒலிபரப்புச் சேவை என்ற ரி.பி.சி.இலங்கையின் அரசியல் தலைவர்கள் மற்றும் ஊடக அமைச்சும், சிறிலங்காவின் புலனாய்வுத்துறையும், தமிழ் தேச விரோதக் குழு ஆகியவை இணைந்து இவ் ஒலிபரப்புச் சேவையினை நடாத்துகின்றனர்.

ரி.பி.சி.ஒலிபரப்பானது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மறு ஒலிபரப்புச் செய்யப்படுகின்றது.

ஈ.என்.ரி.எல்.எவ். என அழைக்கப்டும் தமிழ்த்தேச விரோதக்குழுவின் தலைவர் பரந்தன் ராஜன் மற்றும் மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த ராம்ராஜ் திருமதி ராம்ராஜ் என்பவர்கள் ரி.பி.சி. வானொலியை இயக்குகின்றனர். பரந்தன் ராஜன் என்பவர் இந்தியறோவின் முகவராகவும் செயற்படு கின்றவர் என்ற குறறச்சாட்டு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

ரி.பி.சி.வானொலி" தமிழ் தேசியத்திற்கு தாக்கவில்லையென அரச ஊடகத் துறைப் பிரதி அமைச்சர் "முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைப்பது போல்" கருத்துக் கூறியிருக்கிறார்.

கடந்த சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்திலும் இலங்கையின் அரச ஊடகங்கள் பொய்ப் பிரச்சாரங் களையே தீவிரமாகச் செய்துவந்தது. "லங்கா புவத்" எனும் அரச ஊடகப் பிரிவு தமிழ்மக்களினால் "லங்காப் புழுகு" என அழைக்கும்படி அண்டப்புழுகுகளை புழுகியது. அதே போல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை தமிழ்மக்கள் " இலங்கை ஒழிப்பு மறைப்புக் கூட்டுத் தாபனம்" என்று கூறுகின்ற அளவுக்கு பத்திரிகைத் தர்மத்திற்கு முரணாக தொழிற்பட்டது உண்மைகளை மறைத்து பொய்களை கூறிவந்தது.

இராணுவம் பாரிய வெற்றிகளை ஈட்டுவதாகவும் புலிகளின் கதை முடிந்துவிட்டதாகவும் கட்டுக்கதை களைக் கட்டி மக்களை ஏமாற்றி வந்ததுடன் போருக்கான தயார்படுத்தலைம் நியாயப்படுத்தலையுமே மேற் கொண்டது.

அரச வானொலி என்ற ரீதியில் இலங்கை மக்கள் மத்தியில் சமாதானத்தையும் அது சார்ந்த உணர் வுகளையும் மக்கள் மத்தியில் விழிபுணர்வையும் வளர்ப் பதனை மையமாகக் கொண்டு செயற் படுவதைவிடுத்து சமாதானத்தைக் குழப்பும் வகையில் செற்படுகின்றது.

சனாதிபதி பேச்சுவார்த்தை மேசையில் அமரமுடியாத இயலாத் தனத்தில்தான் தப்பித்தும் கொள் ளவும் தனது அரசை பாதுகாத்துக்கொள்ளவும் ஊடகங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திப் பொய் எதிரான தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றது. அண்மையில் மட்டக்களப்பில் துரோகி கருணா மேற்கொண்ட சதித்திட்டத்துக்கு ஆதரவாகவும் பிரதேச வாதத்திற்கு உடன்பாடாகவும் இவ் வானொலி தமிழ் மக்கள் மத்தியில் பொய்ப்பிரச்சாரத்தை மேற்கொண்டு வரு கின்றது. சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையிலும் அதற்கு விரோதமான முறையிலும் செயற் படும் இவ் வானொலி அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு களங்கத்தையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தும். வகையில் இவ் வானொலி பொய்ப்பிரசாரம் செய் வதினால் இவ் ஒலிபரப்பினை உடனடியாக நிறுத்த வேண்டுமென அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அரசாங்கத்திற்கு தெரிவித்திருந்தார்.

மக்களைக் குழப்பியடிக்கும் வகையில் பொய்பிரசாரங்களை இலங்கை அரச வானொலி மேற்கொண்டு வருவதாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறை யினரும் கண்டன அறிக்கையினை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு அம்பாறை பகுதியில் மக்கள் மத்தியில் பதற்றத்தையும் பீதியையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் திட்டமிட்ட ரீதியில் பல் வேறு செய்திகள் சோடிக்கப்பட்டும் கற்பனைகளாகவும், வதந்திகளாகவும் பரப்பப்பட்டு வருகின்றது.

ரி.பி.சி. வானொலியில் வெளியிடப்படும் செய்திகளினால் மக்கள் குழப்பமடையத்தேவை யில்லை. இவை உண்மைத்தன்மை அற்றவை, தமிழர் களிடையே முரண் நிலையினைத் தோற்றுவிக்க அரசு மேற் கொள்ளும் தந்திரபுலனாய்வு நடவடிக்கை ஆகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அப கீர்த்தியை ஏற்படுத்துவதனை இலக்காகக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் திற்கு வன்னிப் புலிகள் எனப்பெயர் சூட்டி, கருணா குழுவே கிழக்குப் புலிகள் என பூதாகாரப்படுத்தி கருணாவே கிழக்கில் இருப்பது போல எங்கேயோ முகவரியிழந்து ஓடி ஒழிந்திருக்கும் கருணாவை கிழக்கின் கதாநாயகனாக்க சித்தரிக்க முயல்கின்றது அரச ஊடகங்கள்.

அரச ஊடகத்தைச் சேர்ந்த ஒலி ஒளி ஊடகமோ எதுவாயினும் எந்தப் போராட்ட அமைப்பையோ சாதாரண குழுவையோ பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சிங்கள அரசு தமிழ் மக்களை ஏமாற்றி தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க தமது கட்டுப்பாட்டில் உள்ள தொடர்பு சாதனங்கள் மூலம் தமிழர் போராட்டத்திற்கு எதிரான பொய்ப்பிரசாரத்தினை முழுமையாக முடக்கி விட்டிருக்கின்றது. உண்மைகளை திரிபுபடுத்தி பொய்களை நுட்பமாகப் புனைந்து தமிழர் போராட்டத்தினை மழுங் கடிக்கும் வகையில் ஒரு உளவியல் பிரசாரப்போரையே நடாத்தி வருகின்றது.

தமிழினத்தின் தேசவிரோதிகளும் பணத்திற்கும். தொழி லுக்கும், பதவிக்கும் அடிமைப் பட்டவர்களேஅரச ஊடகங்களில் பணிபுரிந்து அரசின் ஊதுகுழலாகச் செயற்படுகின்றார்கள். அதற்காக தமிழரின் மாண்பினையும் வீர வரலாற்றினையும் அழித்தொழித்துவிட தயாராகி விட்டார்கள்.


அரச வானொலி போர்கால சூழலில் எவ்வாறான மனநிலையில் செய்திகளை வெளியிட்டதோ அதே மனநிலையிலேயே சமாதான காலத்திலும் தனது வழமையான பாணியை கையாழுகின்றது.

புலிகள் இயக்கம் மீதும், தமிழர் தேசியம் மீதும் தாயகம் மீதும் மக்கள் கொண்ட பற்றினையும் நம்பிக்கையினையும் தகர்த்துவிடும். கபடத்தனமான நோக்கில் அரசுபொய்ப் பிரசார உளவியல் போரை அச்சு ஊடகங்கள் ஒளி ஒலி, ஊடகங்கள் மூலம் நடாத்தி வருகின்றது.

புலிகளையும் மக்களையும் பிரிக்கும் நோக்குடன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும். இம் முயற்சி இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை அல்ல, தமிழர் சிங்களவர் இனப்பிரச்சினை ஆரம்பமான காலத்திலிருந்தே இக்கபடத்தனமான நாடகம் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

எனவே தமிழர் விடுதலைப் போராட்டத்தை சிதைத்துவிடும். நோக்குடன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் உளவியல் பொய் பிரச்சாரப் போரில் எவரும் மாண்டு போகக் கூடாது.

ரி.பி.சி.இன் செய்திகளும் ஏனைய நிகழ்ச்சிகளும் வதந்திகளும் கட்டுக்கதைகளுமே இவற்றை நம்ப வேண் டிய அவசியம் இல்லை. தேவையற்ற வகையில் குழப்ப மடையத் தேவையில்லை. மக்கள் பூரண தெளிவுடன் இருந்தால் தமது உரிமைகளை வென்றெடுக்கமுடியும்.




# தமிழர்களின் தாயக கோட்பாட்டை அச்சுறுத்தும் புற்றுநோய்

"அப்பா எங்கட காளிகோவிலுக்குப் பக்கத்தில பன்சால ஒன்று இருந்ததா நீங்கள் ஏன் சொல்லேல்ல நல்ல வடிவா லைற் எல்லாம் போட்டு அழகா இருக்கு"

" நீங்கள் இந்த ஊர்" தானே. பெரிய விகாரை ஒன்று இருந்ததா ஏன் எனக்குச்சொல்லேல்ல.''

"அவங்கள் தங்கட பன்சாலையை எப்பிடி அழகா வைச்சிருக்கிறாங்கள். இரவில பாத்தா நல்ல வடிவா இருக்கு.'' ஊரெல்லாம் காடு மண்டிக்கிடந்தாலும் விகாரையைச் சுத்தி ஒரு புல்லுக்கூட இல்லை. இப்படி 'நீற்றா" எங்கட வளவையும் மாத்தவேணும்".

" அவங்கட பூசை நேரத்தில எங்கட பிள்ளையார் கோவில்ல ஒலிபெருக்கி பாடக் கூடா தாம்."

"நேற்று அந்த புது பஸ்ஸில வந்த சிங்கள ஆக்கள் அந்த பன்சாலயில நிண்டு கும்பிட்டிட்டு தம்பியின்ர கன்னத்தில கிள்ளி கொஞ்சிப்போட்டுத்தான் போனவையள்."

இந்த உரையாடல்களை அவதானித்தால் இருவிடயங்கள் தெளிவாகப் புலப்படும்.

ஒன்று, இவ்உரையாடல்கள் மீள் குடியேற்ற தமிழ்க்கிராமம் பற்றியவை. மற்றது, இவை அனைத்தும் பன்சால பற்றி அமைந்தவை.

ஆம், உண்மைதான் இவை மீளக்குடியேறிய தமிழ் மக்களால் உரையாடப்பட்டவையே. மீளக்குடியேறிய எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஒன்று இவ் உரையாடல்களில் வெளிப்பட்டு நிற்கிறது. தற்போது சிறிதாக தோன்றும் இந்தப் பிரச்சினை எதிர்காலத்தில் தமிழ் மக்களை அச்சுறுத்தும் ஒன்றாக இருக்கப்போகிறது என்பது அதிர்ச்சியூட்டும் விடயமாகும்.

சரி, இவ்விடயத்தை சற்று விரிவாக பார்ப்போம்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை கொன்றொழிக்கும் இனத்துடைப்பு நடவடிக்கையைத் திட்டமிட்டு மேற்கொண்டுவந்த அதேவேளை தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை அபகரித்து, அந்த இடங்களில் சிங்கள மக்களைக்குடியேற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுவந்தனர். ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்து தமிழ் மக்கள் தமது தாயகப் பிரதேசங்களைத் தக்கவைத்துக்கொள்ளும் வலிமையைப் பெற்றுக்கொண்ட நிலையில் சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படும் வீதம் அதாவது குடியேற்ற வீதம் குறைவடைந்தது. எனினும் தமிழர்களின் நிலத்தை அபகரிக்கும் நாசகாரத்திட்டத்தை சிங்கள ஆட்சியாளர்கள் மறைமுகமாகச்செய்தேவந்தனர். மாறிமாறி ஆட்சிக்கு வந்த இரு பேரினவாதக் கட்சிகளும் இவ்விடயத்தில் ஒரே கொள்கையையே கடைப்பிடித்து வந்துள்ளனர்.

தமிழ்மக்களின் நிலங்களை அபகரிப்பதற்காக துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம், கல்லோயா அபிவிருத்திட்டம் எனப் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நீர்த்தேக்கங்களை அமைத்து உலர்வலயத்தில் பயிர்ச்செய்கை நிலங்களை உருவாக்கினார்கள். அவ்விடங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றிவந்தனர். அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழர் தாயகப்பிரதேசங்களின் பெரும் பகுதி இத்திட்டங்களின் மூலம் அபகரிக்கப்பட்டன. தமிழர் தாயகப்பகுதிகளைத் துண்டாடி தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான நிலத்தொடர்பைத் துண்டாடும் நாசகாரத்திட்டமும், நில அபகரிப்புத்திட்டத்துடன் இணைந்திருக் கிறது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங் களை நில ரீதியான தொடர்புகளைத் துண்டித்து பூகோள ரீதியாக தனித்தனியாகப்பிரிக்கும் திட்டத்தை சிங்கள ஆட்சியாளர்கள் மெல்ல மெல்ல நிறைவேற்றி வந்தார்கள்.

சிங்கள குடியேற்றங்களைத் தடுக்கும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான சில நடவடிக்கைகளைத்தொடர்ந்து குடியேற்றச் செயற்பாடுகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் பிற்போடவேண்டிய நிலை ஏற்பட்டது. அதாவது குடியேற்ற முயற்சிகளில் அவர்களால் முனைப்புடன் ஈடுபடமுடியவில்லை. சிங்கள மக்களும் குடியேற்ற பிரதேசங்கள் பாதுகாப்பற்றவை என்று கூறி குடியேற தயக்கம் காட்டினார்கள். உண்மைநிலையைப் புரிந்துகொள்ள ஆரம்பித்தார்கள். ஆயினும் தமிழர் தாயகப் பகுதிகளை சிங்களப்படையினர் தொடர்ந்தும் ஆக்கிரமித்து வந்ததுடன் இராணுவ முகாம்களை அமைத்துத் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளனர். இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் தமிழ் மக்கள் மீது படுகொலை, கற்பழிப்பு, இராணுவக் கெடுபிடி ஆகியவற்றை ஆக்கிரமிப்பு இராணுவம் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. இதன் காரணமாகத் தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களிலிருந்து



பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவ முகாம்கள், காவலரண்கள், மண் அணைகள் ஆகியன ஏற்படுத்தப்பட்டு எமது பகுதிகள் இராணுவ மயப்படுத்தப்பட்டன. தமிழர்களின் வாழ்விடங்கள், வழிபாட்டுத்தலங்கள்,பொதுக்கட்டடங்கள் ஆகியன இடித்து அழிக்கப்பட்டன. எஞ்சிய ஓரிரு கட்டடங்கள் இராணுவப் பாவனைக்குப்பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் மக்களின் பாரம்பரிய கிராமங்கள் உருக்குலைந்து அழிந்துபோனதுடன், காடுகளால் மூடப்பட்டன. தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் தமிழர்களின் வரலாற்றுத் தடங்களும் திட்டமிட்டு மறைக்கப்பட்டுவருகின்றன.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் தமது பாரம்பரிய இடங்களில் மீளக் குடியேறுவதற்கு இராணுவத்தினர் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். இருப்பினும் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களால் சில இடங்களில் மீளக் குடியேற எம் மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(பாரம்பரிய நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயங்களாக இன்னமும் தடை செய்யப்பட்டுள்ள பிரதேசங்களாகவுள்ளன,

மீளக்குடியேறும் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி தமது உடலுழைப்பைப் பயன்படுத்தி பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்துவருகின்றனர். தமது பாரம்பரிய பிரதேசங்களில் மீளக் குடியேறும் மக்கள் எதிர்பாராத பிரச்சினை ஒன்றை எதிர்நோக்குகிறார்கள். புதிதாக அமைக்கப்பட்டுள்ள விகாரைகளும் அதனோடு ஒட்டிய வழிபாட்டு இடங்களுமே மக்களுக்குப் புதிய பிரச்சினையாகவுள்ளன.

இராணுவ முகாம்களுக்கு அண்மையிலும், தமிழ் மக்களின் வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்த இடங்களில் தமிழ்க் கோவில்களை அழித்துவிட்டு அல்லது அவைகளுக்கு மிக அருகிலும் இவ்வாறான பௌத்த வழிபாட்டுத்தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இராணுவ முகாம்களால் சூழப்பட்டப் பிரதேசங்களில் குடியேறிவரும் மக்கள் இவ்வாறு தமது வாழிடங்களில் அதுவும் தமது காணிகளுக்குள் வழிபாட்டுத்தலங்கள் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக யாரிடம் எடுத்துச்சொல்வதெனத் தெரியாத நிலையிலுள்ளனர். தமது குழந்தைகளுடன் குடும்பமாகக்குடியேறியுள்ள தமது பாரம்பரிய இடங்களில் வீணாணப் பிரச்சினைகளைத் தவிர்க்க வேண்டும் என்ற மனநிலையே இம் மக்களிடம் காணப்படுகின்றது. இவ் விடயத்தில் தலையைக் கொடுத்து இராணுவத்தினர், அதிகாரிகள் ஆகியோரின் கோபத்தையும் வெறுப்பையும் சம்பாதித்துக்கொள்ள மீளக் குடியேறியுள்ள மக்கள் விரும்பவில்லை.


தமிழ் மக்களின் வாழிடங்களில் நிரந்தரக் கட்டடங்களாக வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் பின்னணியில் நாசகாரத் சதித்திட்டங்கள் ஏதும் உள்ளனவா? இவற்றின் மூலம்தமிழ் மக்களின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமா? தமிழர்களின் தாயகநிலம் அபகரிக்கும் திட்டத்தின் முன்னோடி நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றா? எனப் பல்வேறு சந்தேகங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன. இவ்விடயம் தொடர்பாக கவனம்செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் தாயகப் பிரதேசங்கள் தமிழ் மக்களுக்குச் சொந்தமானவையல்ல என்று பௌத்த சிங்களப் பேரினவாதிகள் தொடர்ந்து கூறிவருகின்றனர். "முழு இலங்கையும் பௌத்த சிங்களவருக்கே சொந்தமானது" "நாட்டிலுள்ள ஏனைய இனமக்கள் வந்தேறுகுடிகளே'' போன்ற இனவாத கருத்துக்களைத் தொடர்ந்து கூறிவருகின்றனர். கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி பௌத்த சிங்களவரின் பாரம்பரிய பூமி என்பதை நிரூபிப்பதற்குச் சிங்களப்பேரினவாதிகள் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்கள். தமிழர் பகுதிகளில் பௌத்த சிலைகள்,பௌத்த சின்னங்கள் ஆகியவற்றைத்திட்டமிட்டு மறைத்துவைப்பதும்,பின்பு அவ்விடங்களில் போலியான அகழ்வாராட்சி ஒன்றைமேற்கொள்வதும், அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட பிரதேசத்தில் பாரம்பரிய பௌத்த ஆலயம் இருந்ததாகவும் பிரசாரம் செய்துள்ளனர். இச் செயற்பாடுகளுக்கு வரலாற்றைத் திரித்துக் கூறும் மகாவம்சம் போன்ற நூல்களைப் பயன்படுத்திவருகின்றனர். திருகோணமலையில் கந்தளாய், சேருவில, பன்குளம் போன்ற பல இடங்களிலும் அம்பாறை மாவட்டத் தின் பல இடங்களிலும் இந்த வகையான திட்டமிடப்பட்ட நாடகங்கள் அரங்கேறியுள்ளன.

அகழ்வாராட்சி மூலம் வரலாற்றுச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும் அந்த பிரதேசங்களைப் புனிதப்பிரதேசங்களாக அரசாங்கம் அறிவிக்கும். இதன் மூலம் இவ்விடங்களுக்குச் செல்ல எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் குறிப்பிட்ட பகுதிகளில் தமிழர்களின் நடவடிக்கைகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்படும். அவ்விடங்களுக்கு இராணுவத்தினரின் அல்லது பொலிசாரின் பாதுகாப்பு வழங்கப்படும் மெல்ல மெல்ல அவ்விடம் பாரம்பரிய வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட இடமாக மாற்றப் படும்.

பாரம்பரிய தாயக நில கோட்பாடு அர்த்தமற்றுப் போகும் நிலை உருவாகும். திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழர்கள் தம்மைத்தாமே ஆட்சிசெய்யக் கோரும் அவர்களின் வேண்டுகையும் அர்த்தமற்ற ஒன்றாக மாறும். தமிழ் மக்கள் சிங்கள பெரும்பான்மையினரால் நசுக்கப்பட்டு அடங்கி ஒடுங்கி வாழும் நிலை ஏற்படும். மொத்தத்தில் சிங்கள மக்களின் அதிகாரத்தின் கீழ் அடிமைகளாக வாழும் நிலை உருவாகும். தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் இந்தப் புற்றுநோய் விடயத்தில் நாம் அனைவரும் கவனம்செல்லுத்த வேண்டும்.

**குடிச்சுக் கெட்டுப்போறியள்**



"பிறிஜில் வைக்கிறது எதுவும் கெட்டுப் போகாது"
"அப்பிடியெண்டா முதல் உங்களைத் தான் வைக்கோணும்.குடிச்சுக் கெட்டுப்போறியள்."

# சந்திரிகாவை காக்கவல்ல சக்தி எது?

பு.சத்தியமூர்த்தி

சிறிலங்காவில் ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் முடிவடைந்து முதலமைச்சர்களும் இன்று பதவியேற்கவுள்ளனர். சந்திரிகா ✢ சோமவன்ச அமரசிங்கவின் ஐ.ம.சு. முன்னணி ஆறு சபைகளையுமே கைப்பற்றிக் கொண்டு விட்டது. ஏற்கனவே வடமேல் மாகாண சபையையும் இக்கூட்டணியே கைப்பற்றியுள்ள நிலையில், தற்போது இயங்குகின்ற 07 மாகாண சபைகளும் நாடாளுமன்றமும் சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டன. அதிகாரமுள்ள சனாதிபதியின் கட்சியிடமே சட்டவாக்க அதிகாரமும் இருக்க வேண்டுமென அவரது பரிவாரங்கள் பெருங்குரலெடுத்துக் கூவியதற்கு நேரான-சாதகமான பதில்



கிடைத்துள்ளதாக இதனை எடுத்துக்கொள்ளலாம்.

உண்மையில் சட்டவாக்கத்துக்கான உண்மையான அதிகாரபீடமான நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் சாதாரண பெரும்பான்மையினை சந்திரிகா இன்னமும் எட்டிவிடவில்லை. எனினும் இனி வரும் நாட்களில் அவரால் அதனை அடைவது ஓரளவுக்குச்சாத்தியப்படவும் கூடும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்தும். தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிடமிருந்தும் அவருக்கு ஆதரவு கிடைத்திடக் கூடும். ஐ.தே. கட்சியில் செய்யப்படவுள்ள புனரமைப்பு, களைபிடுங்கல் பணிகள் சந்திரிகா தூண்டில் வீசுவதற்கு சில இலக்குகளை வழங்கிவிடவும் கூடும்.

ஆனால், சந்திரிகா நாடாளுமன்றில் பெரும்பான்மையைப்பெறுகிறாரா? அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வாரா? என்பதல்ல இன்றுள்ள அவருக்கான பிரச்சினை. அவரது தற்போதய ஐ.ம.சு. முன்னணிக்குள் அவர் பெரும்பான்மையையும், அதிகாரப் பிடியினையும் இழந்து வருகிறார் என்பதே அவருக்கான பெரிய அச்சுறுத்தலாக வளர்ந்து விட்டது. தான் எதிர்கொள்ளும் புறப்பிரச்சினைகளை வெட்டியாடுவதற்கு முடியாதபடிக்கு கடிவாளம் பிடிக்கும் தனது சிவப்புக்கூட்டணிகளை எவ்வாறு கையாளுவதென்பதே சந்திரிகாவின் இன்றைய பிரச்சினை.



39 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் 80 மாகாணசபை உறுப்பினர்களையும் கொண்டுள்ள ஜே.வி.பி. தனது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கிவிட்டது. அரசாங்கத்தில் தமது 'அதிகாரப் பிடி'யை இறுக்கிவருகிறது அது. அதனது உயர்மட்டத்தலைவர்கள் மட்டுமன்றி, இரண்டாம் நிலைத் தலைவர்கள் கூட வெட்டொன்று துண்டு இரண்டு என அரசாங்கம் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது குறித்து வெளிப்படையாகவே பேசத் தொடங்கி விட்டனர். அதாவது ஜே.வி.பி வரையும் கோடுகளுக்கு இடையேதான் சந்திரிகாவின் அரசாங்கம் செயற்பட முடியுமென்று தெரிவிக்கிறார்கள் அவர்கள்.

சமாதான நடவடிக்கைகள் குறித்து சந்திரிகாவின் தரப்பினர் தெரிவிக்கும் கருத்துக்களுக்கும் ஜே.வி.பியின் கருத்துக்களுக்கும் அல்லது கடிவாளத்துக்கும் தொடர்பேதுமிருப்பதாகத் தெரியவில்லை. இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேச்சே எடுக்கப்படமாட்டாது என ஜே.வி.பி கூறுகையில்: இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதற்கு மக்கள் ஆணை வழங்கியிருப்பதாக மாகாணசபைத்தேர்தலின் வெற்றியின் பின் சந்திரிகாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பொருளாதார நடவடிக்கைகளிலும் தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல், மானியங்கள் வழங்கல், சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனை (பணிப்புரை)கள், வெளிநாட்டுப் பிரஜைகளும் நிறுவனங்களும் காணிகளை வாங்குதல் போன்ற விடங்களில் ஜே.வி.பி கடைப் பிடிக்கும் கொள்கைகள், வெளிப்படுத்தும் கருத்துக்கள் சந்திரிகாவுக்குப் பெரும் தலையிடியாக வளர்ந்து வருகின்றன. இனி அவை விஸ்வரூபமெடுக்கப் போகின்றன என்பதனால் நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்ததை ஜே.வி.பி இ.ன்று நாடாளுமன்றத்துக்குள் செய்கிறது" என்று ரணில் விக்கிரமசிங்க இதனைத்தான் குறிப்பிட்டார். ஜே.வி.பி.யின் அடிதடி. கூச்சல் குழப்பம், புத்தகங்களை வீசியெறிதல் போன்ற உபசெயற்பாடுகளையும் இதனுடன் சேர்த்துக் கொள்வது பொருத்தமாகவிருக்கும்.

ஜே.வி.பி.இத்துடன் நின்று விடவில்லை. பாதுகாப்பு விவகாரங்களின் கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் விடயத்தில் மிகவும் தீவிரமாகத் தனது அழுத்தங்களை அரசாங்கத்துக்குள்ளிருந்து செலுத்தத் தொடங்கிவிட்டது.

கொழும்பில் தமிழர் செறிந்து வாழும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அப்பகுதியில் மிக விரைவாக மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு தமிழர் பகுதிகளில் தீவிர கண்காணிப்பில் ஈடுபடும். அத்துடன் எந்த நேரத்திலும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் .இந்த நடவடிக்கைகளுக்கு எவரது அனுமதியும் பெறப்பட வேண்டியதுமில்லை. இத்தீர்மானங்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் கூடிய தேசியபாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சரும் முப்படைகளின் தளபதியுமான சனாதிபதி சந்திரிகாவினால் அங்கீகரிக்கப்பட்டும் விட்டன. இவை அனைத்தினதும் சூத்திரதாரிகள் ஜே.வி.பியினரே என்பது இங்கு நோக்கத்தக்கது.

இது ஒருபுறமிருக்க மிக அண்மையில் ஜே.வி.பியின்தலைவர் சோமவன்ச அமரசிங்க சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் குறிப்பிட்டிருந்ததைக் கவனியுங்கள் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை நாடாளுமன்றத்தை விட்டுத் துரத்த வேண்டும். இடைக்கால நிர்வாகம் குறித்து முதலிற் பேச சனாதிபதி தயாராக இருக்கிறார் என்று அவர்கள் தான் கூறினார்கள் அதை நாம் நம்பவில்லை" இது சோமவன்சவின் கர்ச்சனை.

இவையெல்லாம் சொல்லும் செய்திகள் எவை? சமாதானம் என்பதன் மீதான ஜே.வி.பியினரது நாட்டம் என்பது எதிரிடையானதாகவே இருக்கிறது என்பதல்லவா? தமிழர்களை அவர்கள் கிள்ளுக் கீரைகளாகத்தான் கருதுகிறார்கள் என்பதல்லவா? இவ்வாறான கருத்துக்கள் மூலம் உருவாக்கப்படும் சூழல் எந்தளவுக்குச் சந்திரிகாவுக்கு உவப்பானதாக இருக்கக்கூடும்? நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்தல், ஒட்டவறறிப் போய்விட்டதிறைசேரிக்கு உயிர் கொடுத்து நாட்டின் பொருளாதாரத்தை இயங்கு நிலைக்குக் கொண்டு வருதல் நிலைதளர்ந்து படுத்துவிட்ட சமாதான முயற்சிகளுக்கு மீளஉயிரூட்டுதல். இவற்றினூடகத் தனது எதிர்கால அரசியற்கணக்குகளை நிறைவேற்றிக் கொள்ளுதல் எனப்பாரிய வேலைத்திட்டங்களுடன் உள்ள சந்திரிகாவுக்கு ஜே.வி.பியினரின் தோழமை மிகப் பாதகமான எதிர்விளைவுகளைக் கொடுக்கப் போகிறது.



ஏனெனில் சந்திரிகா ஜே.வி.பியினர் மீதான கட்டுப்பாட்டினை அரசுத்தலைவர் என்ற முறையில் கொண்டிருக்க வேண்டியதற்கு மாறாக ஜே.வி.பியே அவரது கடிவாளம் தனது கையிலிருப்பதாக நடந்து கொள்கிறது. அதற்கேதுவாகவே தேர்தல்கள் தோறும் அது தன்னை மிக நன்றாகப் பதியமிட்டும் கொண்டுள்ளது. மூன்று மாதங்களில் நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் ஜே.வி.பி சார்பில் போட்டியிட்ட தலா இரண்டு வேட்பாளர்களே தோல்வியடைந்துள்ளனர். ஆனால் சந்திரிகாவின் சுதந்திரக் கட்சியின் நிலைமையோ பரிதாபகரமானது. அத்தோடு விருப்பு வாக்குகள் வரிசையில் முன்னிலையும் ஜே.வி.பியே நிற்கிறது. இவையெல்லாம் சேர்ந்து ஜே.வி.பியின் பிடியினை ஐ.ம.சு.முன்னணி மீதும் சந்திரிகா மீதும் இறுக்கி விட்டுள்ளன.

ஆனால், ஜே.வி.பியின் வேலைத் திட்டத்திற்கு சந்திரிகாவினால் ஒரு போதுமே இசைந்து போகமுடியாது. அது அவரது சொந்தக்கட்சியின் அரசியல் எதிர்காலத்தையே சூனியமாக்கிவிடும். அத்தோடு அவரது சொந்த அவசர அரசியல் நிகழ்ச்சி நிரலைத்தடம் புரளச்செய்து விடும்.

அப்படியாயின் சந்திரிகாவால் ஜே.வி.பியைக்கழற்றி விட்டுவிட முடியுமா? அதுவும் முடியாது. ஏனெனில் இன்று அது பெற்றிருக்கும் பூதாகரமான வளர்ச்சியின் பின்னணியில் மீண்டுமொரு தேர்தலை சிறிலங்கா சுதந்திரக்கட்சியாலோ, பொ.ஐ.முன்னணியாலோ எதிர்கொண்டு விடமுடியாது. அப்படி நிகழ்ந்தால் எதிர்க்கட்சி அந்தஸ்து கூட சிலவேளைகளில் சந்திரிகாவின் கட்சியினால் இழக்கப்பட நேரலாம். சந்திரிகா இன்று பஸ்மாசூரனுக்கு வரம் கொடுத்த சிவபெருமானின் நிலையிலிருக்கிறார். அவரது தலையிலேயே கையை வைத்துப் பார்த்து விடுவேனென மிரட்டுகிறது ஜே.வி.பி மோகினியாக வந்து பஸ்மாசூரனிடமிருந்து சந்திரிகாவைக்காக்கவல்ல சக்தி இன்றைய சிறிலங்காவின் அரசியற் களத்தில் எது?

நேர்மையும் துணிவுமான சமாதான செயற்பாடுகளே பஸ்மாசூரனிடமிருந்து சந்திரிகாவை மீட்கவல்ல மோகினி என்பதே உண்மையல்லவா?

# சமநிலையற்ற கொள்கைகள் தடுமாறும் நிலையில் அரசுகள்

உலகளாவிய அரசியலில் கொள்கைகளுக்கும் அமுலாக்கங் களுக்கும இடையே பாரிய வேறு பாடுகள், முரண்பாடுகளும் காணப் படுகின்றன. கொள்கைகளை உரு வாக்கி விட்டு அவற்றை அமுல்படுத் தாத போக்கு பல அரசியல் பிரமாணங் களில் நிலவுகின்றது. குறிப்பாக வலுவான அரசுகள் தமது நலன் களையும் பாதுகாப்புக்களையும் கருத்தில் கொண்டு கொள்கைகளை வரைந்து கொள்வதுடன் அவற்றை வலுவான அரசுகளல்லாத பலவீன மான அரசுகள் பின்பற்றவேண்டு மென வலியுறுத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கி யிருக்கும் எந்த அரசியல் பிரமாணமும் வல்லரசுகளுக்குப் பொருத்த மற்ற வையாக விளங்குகின்றன.

## சிறுவர் உரிமை.

சிறுவர் தொடர்பான உரிமைகளை ஐ.நாவின் சிறுவர் பிரிவும் அவை சார்ந்த இதர அமைப்புக்களும் அதிக மாக அமுல்படுத்தி வருவதாகக் கூறுகி ன்றன. சிறுவர் பாதுகாப்பு, கல்வி, போசாக்கு, சுகாதாரம் என்பனவற் றோடு படையில் சேர்த்துக்கொள்வது, சிறுவர் வேலைக்கமர்த்தல், பாலியல் துஷ்பிரயோகம், மற்றும் அச்சுறுத்தலி லிருந்தும், படுகொலைகளிலிருந்தும் பாதுகாத்தல் போன்றவற்றைகொண்டு உலக நாடுகள் எங்கும் சிறுவர் உரிமை சார்ந்த அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. ஆனால் இவை யாவற்றையும் முழு உலகத்திலும் அமுல்படுத்தாது விட்டாலும் ஆசியா, ஆபிரிக்கா, தென்னாபிரிக்கப் பிரதேங்களில் அமுலாக்க சிறுவர் அமைப்புக்கள் முயன்று வருகின்றன.

இத்தகைய சிறுவர் அமைப் புக்கள் நாடுகளை மட்டும் கொள்ளாது முழு உலகத்தையும் சார்ந்ததாக செயற்படுகின்றன. இருந்தபோதும் வல்லரசுகள் மேற்கொள் ளும் போர்கள் மற்றும் தாக்குதல்களால் பாதிப் படையும் சிறுவர்களை பாதுகாப்பதற்கோ அல்லது அதனைத்தடுப்பதற்கோ எந்த நடவடிக்கையையும் மேற்கொண்டதாக ஆதா ரங்கள் இல்லை. கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தா னில் அமெரிக்க விமா னங்கள் நடத்திய தாக்குதலில் 14 பாடசாலைச் சிறுவர்கள் கொல்லப் பட்டார்கள். ஈராக்கின் தலைநகரில் அமெரிக்க விமானங்களாலும் மற்றும் எறிகணைத் தாக்குதலாலும் உற வினரை இழந்த சிறுவன் ஒருவன் கால்களும், கைகளும் இழந்த நிலையில் காணப்பட்ட சம்பவம், மற்றும் மிக அண்மையில் சோத னைச்சாவடியில் வைத்து அமெரிக்க இராணுவத்தால் சுடப்பட்டபோது கொல்லப்பட்ட சிறுவன் தொடர்பான சம்பவம் எனப் பலவற்றைக் கூறலாம், காஸாவிலும், இஸ்ரேலின் எல் லைகளிலும் சிறுவர்கள், சிறுமியர்கள் பலர் கொல்லப்படுகின்ற சம்பவம் நிகழ்கின்றது. இவற்றைத்தடுப்பதற்கு சிறுவர் அமைப்புக்களிடம் இருக்கும் சட்டங்கள் வலுவற்றவையாக உள்ளனவா?அல்லது வல்லரசுகளை தண்டிக்க முடியாதென எண்ணு கின்றனவா? என்ற சர்ச்சை நீடித்து வருகிறது. அநேகம் முதலாவதை விட இரண்டாவதற்கே அதிக வாய்ப் புக்கள் நிலவுகின்றன.இதற்கு வலுச் சேர்க்கும் விதத்தில் அமெரிக்கா 16 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களையே சிறுவர்கள் என சிறுவர் பாதுகாப்புச் சட்டத்தில் ஒப்பமிட்டுள்ளது. ஆனால் உலகில் அநேகநாடுகள், விடு தலைப் போராட்ட அமைப்புக்கள் 18 வயதுக்குக் குறைந்தவர்களையே சிறுவர்கள் என்ற வரையறைக்குள் உட்படுத்துகின்றது. அதாவது வறிய நாடு ஒன்றை விட அமெரிக்கா சிறுவர் களை படைக்கமர்த்தவோ, வேலை யில் இணைத்துக் கொள்ளவோ முடியும். இங்கு அமெரிக்காவுக்குரிய சலுகை உலகத்திற்கு இருந்தாலும் சிறுவர் பிரிவுகளின் அணுகு முறை கள் வேறுபட்டதாகவே அமைந்து விடுகின்றன.

இதனால் வறிய நாடுகளில் நிலவுபவை சரியானவை என்றோ அல்லது அவற்றை நியாயப்படுத் தவோ இப்பகுதி முன்வைக்கப் படவில்லை. மாறாக ஒரே உலகம் என்ற நியதி பொதுக்கொள்கை வகுப்புப் பிரிவுகளிடம் இல்லை. வேலைக் கமர்த்தப்படும் சிறுவரை தடுப்பதைவிட கொல்லப்படும் சிறுவரின் அளவைக்குறைப்பதோடு அதனை முற்றாகத் தடுப்பதே முதன் மையானது.

## அவசர பாதுகாப்புச் சட்டம்

ஈராக்கின் இடைக்கால அரசு முதலாவது சட்டமாகப் பிறப்பித்த விடயம் அவசர கால பாதுகாப்புச் சட்டமாகும். இதன் கீழ் ஊரடங்குச் சட்டங்களை பிரகடனப்படுத்தவும், சோதனை நிலையங்களை அமைப் பதுடன் அவற்றில் சோத னைகளை மேற்கொள்ளவும் சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கவும் இடைக்கால அரசு பொலிஸ் மற்றும் பாது காப்புப் பிரிவு களுக்கு அதி காரத்தை வழங் குகிறது. இது



அமெரிக்க கூட்டுப்படைகளின் ஆதிக் கத்தையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் இத்தகைய சட்டத்தை பிரகடனப்படுத்தும் உடன் பாட்டில் கையெழுத்திட்ட மறுகணமே பிரதமர் அலுவலகம் அருகே வீழ்ந்த மோட்டார் குண்டுத் தாக்குதலில் 6 பேர் காயமடைந்துள்ளனர். அமெரிக்க இராணுவ வலயத்திற்குள்ளேயே இப்பகுதி அமைந்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

எனவே சட்டங்களும் அதன் பிறப்பாக்கங்களும் ஒருபக் கமாக அமைய, மறுபக்கத்தின் தாக்கு தல்கள், சிரசேதங்கள், ஆட் கடத் தல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஈராக்கின் இடைக்கால அரசின் கையாலாகாத்தனத்தைக் காட்டுவதாகவே இவ் அவசர காலச்சட்டம் அமைந்திருக்கின்றது. இதன் மூலம் மேலும் இராணுவ வல்லாதிக்கம் வலுவடைவதுடன் ஈராக்கியர் கொல்லப்படும், சிறைப் பிடிக்கப்படும் சம்பவங்கள் அதிக ரிக்கவே வாய்ப்பு ஏற்படும். முரண்பாடு ஒன்று தீர்க்கப்பட வேண்டுமாயின் இருதரப்பினரிடை யேயும் வலுவான சமநிலை பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான வாய்ப்பற்ற இடைக்கால அரசாக விளங்கும் இது, முரண் பாட்டை வளர்ப்பதற்கான சட்டங் களை உருவாக்கி வருகிறது.

இதேவேளை தாக்குதலாலும் வெளிநாட்டுப் பிரஜைகள், இராணு வத்தினர் கடத்தப்படுவதனாலும் ஈராக்கிற்கு படைகளை அனுப்பும் அரசுகளது பட்டியல் சுருங்குவதுடன் அதுபற்றிய விமர்சனங்கள் ஏற்பட்டுவருகின்றன. குறிப்பாக இந்திய ஆளும் தரப்பில் இடம் பெறும் இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியைச் சார்ந்த பி.கே. வாசுதேவன் நாயர் அமெரிக்காவின் ஏகாதிபத்தியமும், நாடு பிடிக்கும் போக்கும் வறிய நாடு களுக்குப் பெரும் சவாலாக உள் ளது. ஈராக் சித்திரவதைக் கூடமாக மாறியுள்ளது. அமெரிக்க அதிபர் புஷ் பிரபல சர்வாதிகாரி ஹிட்லரைப் போல செயற்படுகின்றார் எனக் குறிப்பிட்டார். இவ்வாறு ஆளும் இந்தியத் தரப்பு கண்டிப்பது அரிதான நிகழ்வாகும். அத்துடன் ஜேர்மனியின் படைகளை ஈராக் கிற்குள் இழுப் பதில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்துவதாக தெரியவந்துள்ளது.

## செனற்றர்களின் அறிக்கை

ஈராக் மீது போர் புரிந் ததற்காக அமெரிக்காவும்-பிரித்தானியாவும் கூறிய காரணங்கள் எந்தளவுக்கு நியாயமானவை என்ற விசாரணை இரண்டு நாடுகளிலும் ஒரே காலப்பகுதியில் முடிந்துள்ளது. அமெரிக்க செனற்றர்கள் ஆராய்ந்து தயாரித்த அறிக்கையின் படி எந்தவித வலுவான காரணமும் இல்லை என்பதுடன் இரசாயன, உயிரியல் தொடர்பான ஆயுதங்கள் இருந்ததற்கான எந்தக் காரணமும் கிடையாதென அறிக்கையை வெளி யிட்டுத் தெரிவித்துள்ளனர். இது அமெரிக்க சனாதிபதித் தேர்தலை பாதிப்பதுடன் சதாம் ஹுஷைனின் விசாரணைக்கு உதவக்கூடியதாக

**ஐங்கரன்**

அமையும் என்ற எதிர்பார்க்கை உலகத்திடம் உண்டு. பிரித்தானியப் பிரதமர் தமது பதவியை இராஜி னாமா செய்யப் போவதாகத் தெரி வித்திருப்பதுடன் அடுத்த தேர்த லுக்குத் தொழில் கட்சி சார்பில் தலைமை தாங்க தாம் முன் வரவில்லை எனவும் அறிவித் துள்ளார்.

இரண்டு தலைவர்களது பதவியையும் இழக்க வைக்கும் சம்பவமாக ஈராக் விவகாரம் அமைந் துள்ளது. போலி யதார்த்தவாதிகளாக விளங் கும் இவர்கள் உலகத்தை தாம் நினைக்கும் திசைக்கு மாற்றி விடலாமெனக் கணக்குப் போட்டன. அமெரிக்கா, பிரித்தானியா போன்று அவுஸ்திரேலியர்களும் இவ் விவ காரத்தில் தலையை நுழைத்து ஆபத்துக்குள் அகப்பட்டுள்ளனர். சதாம் ஹுஷைன் மீதான குற்றச் சாட்டுக்களை நியாயப்படுத்தும் அவுஸ்திரேலியப் பிரதமர், புஷ் ஷையும் பிளயரையும் பாதுகாக் கத்திட்டமிட்டது போல் நடந்து கொண்ட போதும் உள்ளூர் எதிர்க் கட்சிகளாலும் அவுஸ்திரேலிய மக்க ளாலும் மிக மோசமாக விமர்சிக் கப்பட்டு வருகின்றார்.

## இந்திய பட்ஜெட்

இந்தியாவின் புதிய அரசாங் கம் தனது முதலாவது வரவு செலவுத்திட்டத்தை அண்மையில் முன் வைத்திருந்தது. இவ் வரவுசெலவுத்திட்டம் முற்றிலும் மாறுபட்டதாக இல்லாது விளங்கிய போதும் பல அம்சங்களில் மாற்றங்களை அறிவித்துள்ளது. பிரதமர், நிதி அமைச்சர் சேர்ந்த ஒரு கலவை யாக இவ் வரவு செல வுத்திட்டம் காணப் பட்டது. . இந்தியாவில் பாரதியஜனாதாக் கட்சியைவிட அநேக அமைப்புக் களாலும் மக்களாலும் ஓரளவு ஏற்கப்பட்ட வரவுசெலவுத்திட்டமாக உள்ளது. குறிப்பாக நேரடி வெளி நாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் வரவுசெலவுத்திட்டம் மறுசீரமைப்புக் கொள்ளைகளை மேற்கொள்ளப் போவதாகக் கூறியுள்ளது. மேலும் செல்வந்தர்கள் மீதான அழுத்தங்கள் சற்று அதிகரித்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

விவசாயம், உணவு, நெச வாலைகளுக்கான சலுகைகள் வாய் ப்புக்களுக்கு இடமளிக்கப்பட்டது டன்,கிராமிய சிறுகைத்தொழில் பொருளாதாரத்திற்கு வாய்ப்பினை வரவுசெலவுத்திட்டம் அளித்துள்ளது. தனிப்பிரிவுகளின் தொழில் வாய்ப் புக்களுக்குப் பக்கபலமாக வரவு செல வுத்திட்டம் மத்தியதர வர்க்கத்தை பாதுகாப்பதுடன் கல்விமீதானவரியை அதிகரித்துள்ளது. சென்னையில் குடிநீர்த்திட்டமும் சேது சமுத்திரத் திட்டமும் பிரதான செயற் திட்டங்க ளாக உள்ளன. சமூக நலத்திட்டங்கள் மீண்டும் வாய்ப்பளிக்கப்பட்டதுடன் விவசாயக்கடன் (மூன்று ஆண்டுக ளுக்கு) இலவச மின்சாரம், பொது முதலீடு என்பவற்றுக்கு வாய்ப்பினை அளிக்கின்றது. பாதுகாப்புச் செலவீ னத்தை அதிகரித்துள்ளதுடன் பாது காப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாகக் கூறப்பட்டது.

இந்திய வரவுசெலவுத் திட் டம் கிராமியப் பொருளாதாரத்தைத் தக்க வைக்கும் அதேவேளை தனியார் பொருளாதாரத்தையும் பேண விரும்புகிறமை தெளிவாகிறது. பிரா ன்ஸ் உலக வர்த்தக மைய மாநாட்டில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா , யூரோலாந்து , ஜப்பான் என்பவற் றுடன் இந்தியாவும் கலந்து கொண் டமை தெரியவந்துள்ளது. எனவே இந்தியாவின் புதிய அரசின் போக்கு யதார்த்தத்தில் அதிக குழப்பத்தைக் கொண்டிருப்பது புலனாகின்றது. அதேநேரம் அரசியல் ஸ்திரம் தெளி வாகவும், ஊடுருவல் இல்லாதிருப்ப துவுமே அத்தகைய கலந்த பொருளா தாரக் கொள்கை அமுலாக்கத்திற்கு பொருத்தமானதாக அமையும். உதார ணத்திற்கு சீனாவின் பொருளாதாரம் இவ்வாறானதொன்றாகவே உள்ளது. சீனாவுக்கு அதன் இரும்புத்திரை அரசியல் பாதுகாப்பு வழங்குகின்றது. இதனை பின்பற்றி பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் சீன அரசியல் தலைவர்களால் முடியும்.

## இஸ்ரேலின் அணுசக்தித் திட்டம

உலகில் அணுவாயுத தடை அறிமுகமாகி பலதசாப்தங் களைக் கடந்துவிட்டது. உலகில் பல நாடுகள் அணுவாயுதங்களை கொண்டிருப்பதாக அறிவித்திருப்பதும். பல நாடுகள் அணுவாயுத பரவல் தடை போன்ற ஒப்பந்தங்களில் ஒப்பமிட்டுள்ளமையும் பொதுவான நிகழ்வாகும். இதற்கு பின்ன ணியில் அமெரிக்க வல்லரசின் பங்கு அதிகமாகவே காணப் பட்டது. ஆனால் ஈராக்கைப் போன்று இஸ்ரேலிய அரசிடமும் உயிரியல் இரசாயன, அணு வாயுதங்கள் இருப்பதாக சிரியா பல தடவை கூறியிருந்தது. அமெ ரிக்க செல்வாக்குக்குள் இருக்கும் இஸ்ரேலிய அரசு 200க்கு மேற்பட்ட அணுவாயுத war heardsஐ கொண்டி ருக்கிற போது அவற்றை எடை போடவோ, பரிசோதிக்கவோ அமெரி க்கா விரும்பவில்லை. இந்தியா, பாகிஸ்தான் வருகைக்குப் பின்பு இஸ்ரேலும் வெளிப்படையாக பரி சோதனைகளைச் செய்யத் திட்டமிட்டி ருந்த போதும் அமெரிக்காவின் நிர்ப்பந்தம் இரகசியத்தைப்பேண வழிவகுத்தது. தற்போது ஐ.நா. அணுவாயுத பரிசோதனையை வர வேற்றுள்ள இஸ்ரேல் தனது திட்டத்தை ஐ.நா. பரிசோதகர்களுக்கு வெளியிடாது குழப்பி வருகிறது.முன் பின் முரண்பாடான தகவல்களை வெளியிடுகின்றது.

அமெரிக்காவின் செல்வாக் கினுள் இஸ்ரேல் ஏற்கனவே பல உயிரியல், இரசாயன வகை ஆயுதங் களையும்,அணுவாயுதங்களையும் தயார் செய்ய வலுவைப் பெற்று விட்டது. ஒருவகையில் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைக்கு இஸ்ரேலே காரணமெனக் கூறுவதற்கான நியா யப்பாடு தெளிவாகிவிட்டது. இஸ்ரே லின் பாதுகாப்பு அமெரிக்காவிடம் என்பது போலவே மேற்காசிய நில வரம் காணப்படுகிறது.

எனவே முழு உலகத்திலும் சக்தி வாய்ந்த அரசுகளின் செல்வாக்கி லேயே கொள்கைகளும் அதன் அமுலாக்கங்களும் காணப்படுகின் றன. வல்லரசுகள் தமக்கு சாதகமான கொள்கைகளை அமுலாக்குவதும், ஏனையவற்றைப் பிற நாடுகள் மீது திணிப்பதும் இயல்பான ஒன்றாக உள்ளது. இது சர்வதேச அரசியலில் சமத்துவமின்மையை உருவாக்கியி ருப்பதுடன் அபாயத்தையும் சாத்தியப் பாடற்ற கொள்கைகளையும் கொண்டிருக்கும் உலகமாக மாற்றி வருகிறது.

**கவலையால் குடிக்கிறேன்..**



"ஏன்ரா இப்பிடிக் குடிச் சுக்கெட்டுப்போறாய்"

"என்ர கவலைய மறக் கத்தான் குடிக்கிறன்."

"அப்பிடி என்னடா கவலை?"

"இப்பிடிக் குடிச்சுக் கெட்டுப்போறனே என்ற கவலைதான்."

# நேர்நோக்கு



## சமாதானமும் இராணுவமும்



சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இராணுவத்தினருக்கும் பொறுப்பான பங்குள்ளதென தெரிவித்துள்ளார்.

யுத்தத்திலிருந்து சமாதானம் என்று வரும்போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பங்கில் இராணுவத்தின் செயற்பாடானது சமாதானத்தை பாதுகாப்பது என்ன வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஏனெனில் இரண்டு தரப்பு சமாதான பங்காளர்களினதும் வலுவான சக்தியாகப் படைவலு திகழ்வதாலும் சமாதான பாதுகாப்பிற்கான ஏற்பாட்டினை யுத்தநிறுத்தமும், புரிந்துணர்வு உடன்படிக்கையும் படைத் தரப்போடு நேரடியாகத் தொடர்புபடுவதனாலும் இது அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால், இந்த சமாதானத்தை ஏற்படுத்துவதில் படைத்தரப்பின் பங்கு என்பது இலங்கையில் எந்த வகையில் கையாளப்பட்டு வருகிறது என்பதை கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

படைத்தரப்பின் பங்கு என்பது இலங்கையைப் பொறுத்தவரை சமாதான சிவில் கட்டமைப்புகளின் நிர்வாக ரீதியாகக் கூட செய்ய வேண்டிய நடவடிக்கைகளிலும் இராணுவத்தினரின் நுழைவு அதிகமாகவே இருக்கிறது.

இதற்குப் பல காரணங்களின் ஊடாக நோக்க முடியும். அதாவது மக்களின் இயல்வு வாழ்வும் அவர்களின் வருமானத்தின் பிரதான குடியிருப்பு மற்றும் விவசாய நிலங்களின் ஆக்கிரமிப்பு என்பவற்றிக்கு அப்பால், நிறுவன ரீதியான மற்றும் அமைப்புக்களின் சனநாயக ரீதியிலான செயற்பாடுகளில் தலையீடு செய்வது வரை இராணுவத்தினரின் செயற்பாடுகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இவற்றில் அதிகமானவை தற்செயலாக ஏற்படும் சிறு சிறு முரண்பாடுகளாகவும் அவற்றைப் பின்னர் பேசி களைந்து விடுதல் என்பதற்கு அப்பால் முரண்பாடுகளை தேற்றுவித்தல் என்ற வகையில் நன்கு திட்டமிட்டு செயற்படும் காரியங்களில் இராணுவத்தினர் ஈடுபடுவது அதிகமான சந்தர்ப்பங்களில் நிருபணமாகியிருக்கிறது.

இதற்கு இராணுவத்தின் தலைமை பொறுப்புகளில் இருக்கும் இராணுவத் தளபதிகளின் செயற்பாடுகளிலிருந்து இராணுவத்தைத் தமது செயலுக்கு ஏற்ப பயன்படுத்தும் அரசியல் தலைமைகளின் செயற்பாடுகள் வரை காணப்படும் ஒருவித சமாதான முரண் செயற்பாடுகளாக காணப்படுகிறது.

இந்த இடத்தில்தான் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இராணுவத்தினரின் பங்கு என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

இதற்கு இராணுவத்தினர் இராணுவத்தனத்தோடு மட்டும் செயற்படாது மக்களின் நலனோடும் நாட்டின் பொதுவான நலனோடும் இணைந்து செயற்படவேண்டியதேவை உள்ளது.

எந்த வகையிலானதாக இருந்தாலும் இராணுவத்தினர் ஒட்டுமொத்தநாட்டின் தேசிய நலனுக்காக செயற்படும் ஒரு உயிர்ப்பு மிக்க கட்டமைப்பாகச் செயற்படுமானால் சாதாரண அரசியல் நாடகங்களுக்கெல்லாம் அசையும் ஒரு கைப்பொம்மையாகச் செயற்படும் ஒரு படையமைப்பாக இருக்க முடியாது.

இந்த வகையில் சமாதானத்துக்கான இராணுவத்தினரின் பங்கு என்பது சமாதானத்தை ஏற்படுத்துவதில் படைத்தரப்பின் பக்கமிருந்து சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்களில் தலையீடு செய்வதிலிருந்து விலகி இராணுவ செயற்பாடுகளில் மட்டும் கவனத்தை செலுத்துவதே அதிக பலனை ஏற்படுத்தும்.

அத்தோடு மக்களின் வாழ்வில் விளைநிலங்களையும், குடியிருப்புக்களையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருக்கும் நடவடிக்கையை மனிதாபிமான கண்ணோட்டத்தோடு அணுகப்படல் முக்கியமானது.

இதனை எப்படி ஒரு படைத் தரப்பிடமிருந்து மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியும் என சிந்திக்கலாம்.


ஏற்கெனவே கூர்மையடைந்துள்ள இனப் போரின் தோற்றத்துக்கு எவை காரணமாக இருந்ததோ, அதே திட்டமிட்ட குடியேற்றங்களிலும் ஏனைய செயற்பாடுகளிலும் இன்னொரு வடிவமாகவே இராணுவ உயர் பாதுகாப்பு வலயமும் ஆக்கிரமித்து வைத்திருக்கும் இடங்களில் படைத்தரப்பினர் விகாரைகளை நிறுவுவதும் நோக்கப்படுகிறது என்பதைப் படைத்தரப்புப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் புதிய இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சாந்த கொட்டேகொட முதல் இனி வரும் எந்த இராணுவத் தளபதியாக இருந்தாலும் அவர்களின் கண்ணோட்டம் என்பது விசுவாசமான சமாதானத்திற்கான இராணுவத்தினரின் பங்களிப்புக்கான செயற்பாடுகளில் இருப்பதைவிட, அரசியல் தலைமைகளை திருப்திப் படுத்துவதிலேயே இருக்கும் என்பது மட்டும் உண்மை.

இந்த வகையில் சமாதானத்துக்கான இராணுவத்தினரின் பங்கானது முக்கியத்துவம் பெறுகிறது. என்ற புதிய இராணுவத் தளபதியின் கூற்று எந்த அர்த்தத்தில் தெரிவிக்கப்பட்டது என்பதை அவரது அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் விரைவில் புலப்படுத்திவிடும்.

**நக்கீரர்**

### ஒரே தொழில்



என் பையன்கள் ஒருவன் அரசியல்வாதி,
மற்றவன் கொள்ளைக் கூட்டத்தில் இருக்கிறான்.
அப்ப ரெண்டு பேரும் ஒரே தொழில்தான் எண்டு சொல்லுங்க.

சிறிலங்காவில் ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிவுகளும் வெளியாகியுள்ளன. அனைத்திலும் ஆளும் கட்சியே வெற்றிபெற்றிருப்பது பற்றி அக்கட்சி பெருமைப்பட்டுக் கொண்டுள்ளது. மாவட்டரீதியாக பார்க்குமிடத்து கூட ஒரேயொரு மாவட்டத்தில் மட்டுமே ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்றிருக்கிறது. இது ஐ.தே.முன்னணிக்குக் கிடைத்த படு தோல்வி என்றும் ஆளும் கட்சி வர்ணித்திருக்கின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியோ கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையை விட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குக் குறைந்த அளவு வாக்குகளே கிடைத்துள்ளதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கோரிக்கையை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறியிருக்கிறது.

இவ்வாறு இவை கூறி திருப்திப்பட்டுக்கொண்டாலும், மாகாணசபைத் தேர்தல் குறித்த அக்கறையின்மையை மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்பது நடுநிலையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிகிறது. அத்தோடு இதனை வாக்களிப்பு விகிதமும் வெளிக்காட்டுகிறது.

தேர்தல் தினத்தன்று மதியம்வரை 10 வீதமான வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்திருந்தனர். இறுதியில் 35 வீதமான வாக்களிப்பு இடம் பெற்றிருக்கின்றமையே ஒரு ஆச்சரியத்துக்குரிய விடயம் தான்.

ஏனெனில் வழமையாக காலை நேரமே வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெறும், மாலை மந்தகதியிலேயே இருக்கும். எவ்வாறாயினும் இந்த வாக்களிப்பு வீதம் கூட இலங்கையின் வரலாற்றில் என்றுமில்லாத அளவு குறைவு எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மக்களுக்கு ஆர்வமில்லை



கடும் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றவேளையில்கூட மக்கள் இவ்வாறு வாக்களிக்கச் செல்லாது இருக்கவில்லை. ஆனால் இம்முறை பொதுவாக வன்முறைகள் குறைவாக இருந்த போதும் வாக்களிப்பு வீதம் குறைவாக இருந்திருக்கிறது.

இதற்குக் காரணம் தொடர்ந்து வரும் தேர்தல்களும் இத்தேர்தல்கள் பயனற்றவையாக மாறிவருவதுமாகும். அதாவது தேர்தல்கள் மூலம் மக்கள் பாலாறும் தேனாறும் கலந்து பாயும் என எதிர்பார்க்காவிட்டாலும் அமைதியானதோர் வாழ்வாவது கிடைக்குமெனக் கொண்டிருந்த நம்பிக்கை சிதைவடைந்ததனாலாகும்.

2001 இல் இடம்பெற்ற தேர்தலின் போது ஐக்கிய தேசிய முன்னணி சமாதான வழி மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு இலங்கையில் அமைதிநிலவும் என எதிர்பார்த்தார்கள் ஆனால், அவ்வாறு நிகழாதது மட்டுமல்ல, சனாதிபதியின் அதிகாரத்திற்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்துக்கும் இடையேயான போட்டியினால் நாடு சீரழிவு நிலைக்குச் சென்றதையே கண்டார்கள். அது மட்டுமல்ல, ஆறு ஆண்டுகள் ஆட்சிபுரியவென மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் இரண்டு ஆண்டுகளிலேயே கலைக்கப்பட்டது. அதற்குப் பல்வேறு காரணங்களை நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி கூறலாம். அவையெல்லாம் மக்களால் ஏற்கக் கூடியவையாக அமையாது.

பின்னர் கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக் கட்டிலில் ஏறியிருக்கலாம். ஆனால் இன்றும் கூட சனநாயக ரீதியாக தனது பெரும்பான்மையை நிரூபித்துவிட, அதனால் முடியவில்லை. குறுக்கு வழிகளாலும் கூட பெரும்பான்மைப் பலம் நிரூபிக்கப்பட்டுவிடவில்லை. இப்பொழுது நாடாளுமன்றம் ஓர் இயக்கமற்ற நிலையிலேயே இருக்கிறது.

இவ்வாறான ஒரு சூழலில் மாகாணசபைத் தேர்தலையும் நடத்தி அதனைக் கைப்பற்றி விட முடிவு செய்து அதனை ஆளும் கட்சி நிறைவேற்றிக்கொண்டும்விட்டது. இதிலே எத்தனை வீதமான மக்கள் வாக்களித்தார்கள் என்ற கவலையெல்லாம் அதற்கு இல்லை. கட்சிக்காரர்களிலே குறித்த சிலருக்குப் பதவிகளும் அதிகாரங்களும் சுக போகங்களும் கிடைத்துள்ளன. மக்கள் ஆதரவு தனக்கே எனக் கூறிக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மக்களுக்கு என்ன பயன் கிட்டப்போகிறது?

ஏனெனில் இப்பொழுதுள்ள சனாதிபதியின் அதிகாரங்களும், நாடாளுமன்றத்தின் அதிகாரங்களும் மக்களின் நல் வாழ்வுக்குப் பயன்படுவதை விட எதிர்க்கட்சியிருக்கு குழிபறிக்கவே பயன்பட்டுவருகிறது.

இன்றுவரை அரசாங்கத்தின் கொள்கைத் திட்டம் எதுவென்று அறிவிக்கமுடியாத நிலையிலுள்ள ஆட்சியாளர்கள் சனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் செயல்களிலேஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றின் காரணமாக இன்று இலங்கையிலேயே மோசமான இடமாகப் நாடாளுமன்றமே கணிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் அவற்றுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடவடிக்கைகளில் மக்கள் எவ்வாறு ஆர்வம் காட்ட முடியும்?

**வேலவன்**

# எமது சமுதாயத்தை மெல்ல மெல்ல அழிக்கும் நச்சுக்களைகளாக விளங்கும் சமூகவிரோதிகள்

உலகம் ஒரு நியதிப்படி ஒழுங்காக இயங்குகிறது. பூமியில் மனித வாழ்வும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் அமைந்துள்ளது. ஆதி காலத்தில் விலங்குகளைப்போல நாகரிகமற்ற வாழ்க்கையை நடத்திய மனிதன் காலப்போக்கில் கட்டுக் கோப்பான வாழ்க்கை நியதி ஒன்றை ஏற்படுத்திக்கொண்டான். இந்த வாழ்க்கை நியதி ஒவ்வொரு மக்கள் கூட்டத்திற்கும் வேறுபட்டதாக இருக்கிறது. மேலைத்தேய நாகரிகம், கீழைத்தேய நாகரிகம், ஆபிரிக்க நாகரிகம் எனப் பல்வேறுபட்ட நாகரிகங்கள் இருக்கின்றன. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் ஒவ்வொரு மக்கள் கூட்டமும் தமக்கான தனித்துவமான கலாசார பழக்க வழக்கங்களைப் பேணுவதற்கு பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இருப்பினும் ஒவ்வொரு சமூகமும் தனது தனித்துவத்தை இழக்காமல் தமக்கென வாழ்க்கை முறை ஒன்றைக் கொண்டுள்ளது.

இந்த வகையில் சமூக நியதிகளையும் அதனால் உருவாகியுள்ள நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் மீறுவது அல்லது அவற்றில் இருந்து விலகிச்செல்வது சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத செயலாகவே உள்ளது. உண்மையில் அவைகளை மீறிச்செல்வதென்பது எமது சமுதாயக்கட்டமைப்புக்களைச் சிதைத்து, எம்மை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும். இதனால்தான் சமூகநியதிகள், பழக்கவழக்கங்களை அனுசரித்து, அதற்கு இசைவான வகையில் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. பல்லின சமூகத்தவர்கள் வாழும் ஒரு நாட்டில் ஒவ்வொரு மக்கள் கூட்டத்தினதும் நடைமுறைகளை மதித்து அதற்கேற்பவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதனும் தனக்கென தனித்துவமான இயல்புகளைக் கொண்டு விளங்குவான். ஒருவர் மற்றவரைப்போல இருக்க முடியாது. ஆனால் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான நியதிகளே சமுதாய நியதிகளாக இருக்கின்றன.

சமுதாய நியதிகளை மீறிச் செயற்படுவோரை நாம் பொதுவாக சமூக விரோதிகள் என்று அழைக்கின்றோம். இவர்கள் செய்யும் தீய செயல்களையே! சமூக விரோதச் செயல்கள் என்கிறோம். எமது சமூகத்தின் அன்றாட வாழ்வைப் பாதிக்கும் இந்தச் சமூகவிரோதச் செயற்பாடுகள் பற்றி நாம் அலட்சியமாக இருந்துவிடமுடியாது. இன்று எமது வாழ்வை நேரடியாகப் பாதிப்பதுடன் நின்றுவிடாமல் எமது வருங்கால சந்ததியினரின் சுபீட்சமான வாழ்வை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் சமூக விரோதச் செயல்கள் பற்றி நாம் விழிப்பாக இருக்க வேண்டும் சமூக விரோதச் செயல்களை எமது மண்ணிலிருந்து முற்றாக அகற்றவேண்டும்.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் தம்மிடமுள்ள பணபலத்தாலும், சண்டித்தன செயல்களாலும் சட்டத்துறையினரை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயற்சிக்கின்றனர். சட்டமுறைகளில் உள்ள சில ஓட்டைகளை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி தாம்செய்யும் சமூக விரோதச் செயல்களுக்கான தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். சட்டங்களிலிருந்து தப்பிக்கொள்ளும் வகையில் தமது செயல்களைத் திட்டமிட்டுச் செய்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள்.

சமூக விரோதிகள் எவ்வாறு உருவாகிறார்கள்? இவர்களின் பின்புலத்தில் இருந்து செயற்படுபவர்கள் யார்? போன்ற பல வினாக்கள் எமக்குள் எழுகின்றன. மனிதன் இயற்கையாகவே சுயநலம் உடையவனாக உள்ளான். இந்த சுயநலத்தை சில நபர்களும் அமைப்புக்களும் தமக்குச் சார்பாக பயன்படுத்துகின்றன. அந்த வகையில் சிலர் தமது தேவைகளின் பொருட்டு சமூகவிரோதிகளை உருவாக்குகிறார்கள்; சமூகவிரோதிகளின் செயல்களை ஊக்குவிக்கின்றார்கள். ஒரு சிலரின் சொந்த நலன்களுக்கு மட்டுமன்றி, ஒரு சமூகத்தை திட்டமிட்டு சீரழிக்கும் நாசகார திட்டத்தை நிறைவேற்றவும் சமூக விரோதிகள் பயன்படுத்தப் படுகின்றனர்.

திட்டமிட்டு செயற்படுத்தப்படும் சமூகவிரோதச் செயல்களின் மூலம் ஒரு சமூகத்தின் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் ஆகியன மெல்லமெல்ல அழிக்கப்படுகின்றன. இதனால் தமது வாழ்வின் இலட்சியங்களை மறந்து ஏனோ தானோ என்று வாழும் ஒரு சமூகம் உருவாகும். இந்த சமூகம் தானுண்டு தனது வாழ்வுண்டு என்று குறுகிய நோக்கில் செயற்படுவதற்குப் பழக்கப் படுவார்கள், தமது கண்களுக்கு முன்னால் அநியாயம் நடக்கும் போது அதனைக் கண்டும் காணாமல் செல்வோராக இந்தச் சமூகம் உருவாகும். அடுத்தவருக்காகப் பாடுபடும் பொது வாழ்க்கை என்பது காலப் போக்கில் இல்லாமல் போகும். இவ்வாறு உருவாகும் ஒரு சமூகத்தில் உரிமைப் போராட்டம், சமூக விடுதலை,பெண்விடுதலை போன்ற முற்போக்கு சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் எதிர்பார்க்க முடியாது.

போராடும் மக்கள் சமூகமொன்றைப் போராட்ட சிந்தனையிலிருந்து திசை திருப்புவதற்காக அடக்குமுறை ஆட்சியாளர்களால் பல்வேறு சமூகவிரோதச் செயல்கள் ஊக்கிவிக்கப்படுகின்றன. சமூக விரோதிகள் தட்டிக்கொடுத்து வளர்க்கப்படுகின்றனர். தாம் உருவாக்கிய சமூக விரோத கும்பலைக் கொண்டு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் பலவீனப் படுத்தப்படும்.

நன்குதிட்டமிட்டு மேற்கொள்ளப்படும் புதிய வகையான போர் முறையாகவும் இது விளங்குகிறது. சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிடும் எமது சமூகத்தின் மீது சமூக விரோதிகளின் துணையுடன் புதிய வகை போர் ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் எழும் வகையில் எமது தாயகப் பகுதிகளில் குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன.

எவரினதும் பின்புலத்துடன் இயங்கினாலும் சரி, தாம் சுயமாக இயங்கினாலும் சரி. சமூக விரோதிகளின் செயற்பாடுகள் நிச்சயம் நிறுத்தப்படவேண்டும். எமது சமூக அமைப்பினுள் காலங்காலமாக இருந்துவரும் நல்ல அம்சங்களை இனங்கண்டு,அவைகளை சிதைக்கும் வகைளில் சமூக விரோதிகள் செயற்பட்டுவருகின்றனர். இவர்களின் செற்பாடுகளால் மது, போதைப்பொருள் பாவனை, பாலியல் முறைகேடுகள் என பல்வேறு சமூகச்சீரழிவுகள் ஏற்பட்டுவருகின்றன. ஒழுக்கத்துக்கும் கட்டுப் பாடுகளுக்கும் பெயர் போன எமது சமூகத்தில் இவ்வாறான தீய பழக்கங்களின் அதிகரிப்பு எமது சமுதாயக் கட்டமைப்பையே ஆட்டங்காணச்செய்துவிடும்.

எமதுபண்டைய புராணங்களிலும் இதிகாசங்களிலும் பல அசுரர்களைப் பற்றி விபரிக் கப்பட்டுள்ளது. இந்த அசுரர்களைப் போல இப்போது சமூக விரோதிகள் மக்களுக்குத் துன்பங்களைக் கொடுத்து வருகின்றனர். சமகால அசுரர்களாக மக்களுக்குக் கஷ்டங்களை கொடுக்கும் சமூக விரோதிகளின் விடயத்தில் பொதுமக்களும், பொதுஅமைப்புக்களும் விழிப்பாக இருந்து இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் எமது தாயக மண்ணில் சுதந்திரமும், நிம்மதியுமான வாழ்வொன்றைத் தொலைத்தோராக நாம் இருக்கவேண்டி ஏற்படும். பயிரின் வளர்ச்சியை பாதிக்கும் களைகள் விடயத்தில் விழிப்பாக இருப்பதைப்போல சமூகவிரோதிகள் விடயத்திலும் விழிப்பாக இருந்து எமது எதிர்கால சமூகத்தின் சுபீட்சமான வாழ்வை இன்றே உறுதிப் படுத்திக்கொள்வோம்.

**து.செந்தூரன்**

---

வணக்கம் பிள்ளையள்! எப்பிடி எல்லாரும் இருக்கிறீயள்? நீங்கள் நினைப்பியள். என்னடா பழசு நேரம் கெட்ட நேரத்திலை கொதிக்கிற வெயில்லை வந்திருக்கிது எண்டு. என்ர வெள்ளைக்காறக் கூட்டாளியை ஒரு விருந்துக்கு அழைச்சனான். அதுதான் உங்களுக்கெல்லாம் தெரிஞ்ச இந்த "ஏ9 உணவகத்திற்கு"க் கூப்பிட்டனான். மனுசன் 1 மணிக்கு மத்தியானச்சாப்பாடு கணக்கா இருக்குமெண்டு சொல்லிச்சுது. அதுதான் போனமுறை மாதிரி அசடு வழிய அவமானப்பட்டு நிக்கக்கூடாதெண்டு 12 மணிக்கே வந்திட்டன். அவருக்கு நாங்க ஆரெண்டு காட்டி வெட்கிக்கவேணும். இண்டைக்கு அவர் தான் பிந்தி வந்ததா இருக்கப்போகுது. 'டபிள் ஏ' இப்ப 'ட்றிபிள் ஏ' கொக்கெண்டு அவருக்கு விளங்கோணும்.

வரவர இந்த றோட்டைத்தாண்டி வாறது. ஏதோ 'கண்டம்' தாண்டிறது மாதிரி ஆகிப்போச்சு. எட! இயமன்ர எருமை கூட நேரம். காலம். ஆள் எண்டு எல்லாம் பார்த்துத்தான் காவுது. ஆனா எங்கட றோட்டில திரியிற வாகன எருமையள் கண்ட கிண்ட நேரமெல்லாம் கண்கடை தெரியாமல் எல்லே காவு கொள்ளுது.

மற்றதுங்கோ! இண்டைக்கு நான் வேளைக்கு வீட்டை விட்டு வந்ததுக்கு இன்னுமொரு காரணமும் இருக்கிது. வீட்டிலை இருக்க சகிக்கேல்லை. மனிசிப்பக்கத்துச் சொந்தக்காரர் கொழும்பில இருந்து வந்திருக்கினம். எனக்குந்த என்ரை அவாவுடைய எண்டு பிறிம்பு பார்க்கிறதொண்டும் பிடிப்பில்லை. ஆனாப்பாருங்கோ! ஒருசிலரின்ரை கதை வழியைப்பொறுத்துத்தான் எங்களுக்கும் அவையள்ளை ஒரு விருப்பம் வரும் என்ன சொல்லிறியள் நீங்கள்? அவா ஒரு தாயும். பொடிப்பிள்ளை ஒருத்தரும். பொடியன் அமெரிக்காவிலை MSC செய்தவனாம் அவனுக்குப் பொம்பிளை தேடினமாம். ஆள் நல்ல எடுப்பான தோற்றமும் கூட. சரி சொந்தக்காரப்பொடியன்தானே! நானும் இப்பிடி பின்னேரங்களிலை காத்து வாங்க வாறநேரம். கலர் கலராக்கண்ட ஞாபகம் என்னாலை ஒரு நல்ல காரியம். ஆருக்கும் நடக்குமெண்டால் எங்களுக்கும் சந்தோசம் தானே எண்டு நினைச்சதாலை. கொஞ்சம் அவையின்ரை விவகாரத்துக்குள்ளை மூக்கை நுழைச்சன்.

பொடியன் msc Information Technology முடிச்சிருக்கிறான். அப்பிடியெண்டால் என்னெண்டு கேட்பியள். அதாவது தகவல் தொழில்நுட்பத்திலை MSC கொம்பியூட்டரைக் கரைச்சுக்குடிச்ச மாதிரி ஒரு வேலை பாருங்கோ! அதிலையும் உந்த அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் 'நாசா' செவ்வாய்க்கிரகத்துக்கு பாத்ஃபைன்டர்(path-finder) எண்டொரு வாகனம் அனுப்பினது. அந்த வாகனம் எங்கட 'ஏ9 வாகனங்கள்' மாதிரி கண்டபாட்டுக்கு ஓடக்கூடாது. முன்னுக்குப் பின்னுக்குப் பார்த்து யோசிச்சுத்தான் போகவேணும். அதுக்கான அந்த கொம்பியூட்டர் புறோகிராமை இவன் வேலை செய்யிற நிறுவனம்தானாம் நாசாவுக்காகத் தயாரிச்சுக்கொடுத்தது. அதுக்காக மினக்கெட்ட குறூப்பில பொடியனும் ஒரு முக்கியமான ஆளாம். கேட்டதுதான் எனக்கு பேப்பெருமை பாருங்கோ. எங்கட தமிழ்ப் பொடியன் அதிலையும் என்ரை உறவுக்காரப் பொடியன்! இது கட்டாயம் நான் நிண்டு செய்து முடிக்கவேண்டிய கலியாண அலுவல் எண்டிட்டு வலு விருப்போட கேட்டன். எப்பிடிப்பட்ட பொம்பிளையை எதிர்பார்க்கினமெண்டு.




"அண்ணை! நாங்களும் கன இடத்திலை கதைச்சிட்டோம் ஒண்டும் பொருத்தமா அமையுதில்லை. ஒண்டிருந்தா மற்றதில்லை எண்டு. ஏதோ ஒரு குறை இருக்குதுகள்தான் எம்பிடுது. கடைசியா போன கிழமைதான் ஒண்டு. நல்ல வசதியான குடும்பம் வடிவான பிள்ளை. குறிப்பும் பொருத்தம். எல்லாம் சரிவர்ற நேரத்திலைதான் தெரியவந்திச்சு அந்தப்பெட்டைக்குச் செவ்வாய் குற்றமாம். கள்ளக்குறிப்பைத்தந்து ஏமாற்றப்பாத்திச்சினம். தெரிய வந்தாப்பிறகு கேட்ட சீதனத்துக்கு மேலாக தந்தும் சரிக்கட்ட வெளிக்கிட்டவை. என்ன இருந்தாலும் எங்களுக்கெண்டிருக்கிற நம்பிக்கையளை விட்டிட்டுக்கண்டபடி தலையைக் கொடுக்கலாமே! காலம் போகுது தம்பியும் பாவம்! தம்பிதான் சொல்லி பேந்து நல்ல ஒரு ஐடியாவில பேப்பரிலை ஒரு 'அட்'(add-விளம்பரம்) கொடுத்தனாங்கள்.

தாய் சொல்வதை ஆமோதிப்பது போல் கேட்டுக்கொண்டிருந்த மகன் வாடிய முகத்தோடு ஏதோ நினைத்தவனாய் திடீரெண்டு பேர்சுக்குள்ளை இருந்து "அங்கிள்! இஞ்சை! எண்டு ஒரு விளம்பரத்துண்டை நீட்டினான். அதிலை இப்படித்தான் கிடந்திச்சு. "யாழ் இந்து... உயர் கௌரவ குலத்தைச்சேர்ந்த அமெரிக்காவில் MSC Information Technology படித்த சுவாதி நட்சத்திரம். துலாம் இராசி பாவம் 44 ஐக் கொண்ட மணமகனுக்கு. University வரை படித்த அல்லது அதற்கு இணையான Professional Qualification உடன் சரளமாக ஆங்கிலம் பேசக்கூடிய அழகான. மெல்லிய சிவந்த தோற்றமுடைய 1977 இற்குப் பின்னர் பிறந்த. திருமணத்தின் பின் வீட்டோடு இருக்கக்கூடிய குடும்பப்பாங்கான. நீண்ட கூந்தலையுடைய நாகரிகமான மணமகள் தேவை. பேசித்தீர்க்கப்படும் சீதனம் Cash ஆக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்."

விளம்பரத்தைப் பார்த்ததுதான் ரத்த அழுத்தம் ஏறிப்போச்சு ஒருத்தரை ஒருத்தருக்குப்பிடிக்கிறது அவையவையளின்ர போக்கு வாக்கைப்பொறுத்து ஆனா இது என்ன கண்ராவி விளம்பரம்! "பெரிய படிப்பும் படிச்சிருக்கோணும். ஆனால் வேலைக்குப்போகக்கூடாது. பேந்தென்ன கோதாரிக்கே சரளமா இங்கிலிசும் கதைக்க வேண்டும். கரிச்சட்டி கரிப்பானையைப்பார்த்து நக்கலடிக்கிறமாதிரி. எங்களுக்குள்ளேயே ஏதோ வெள்ளைக்கார நினைப்பிலை நிறத்துவேசம் பார்க்கிறது. டேய்! கிளியோபட்ரா கூட ஒரு ஆபிரிக்கக்கறுப்பிதானடா! ஒரு குடும்பத்தை வைச்சுக்காப்பாத்த வக்கில்லாமல் சீதனப்பிச்சையை எதிர்பார்க்கிற நீ கெட்ட கேட்டுக்கு. பட்டதோட professional Qualification கேட்குதோ? அவ்வளவுக்குப் படிச்சுப்போட்டு வீட்டோடயே இருக்கவேண்டும் எண்டு எதிர்பார்க்கிறியே! பேந்து என்னத்துக்கடா மினைக்கெட்டுப் படிக்கோணும்? இல்லைக்கேக்கிறன் உன்னை! ஆ.... என்ன தகவல் தொழில்நுட்பம் படிச்சுக்கிழிச்சனியோ? அவங்கள் செவ்வாய்கிரகம் தாண்டி சனிக்குக்கிட்டேயும் போயிட்டாங்கள் இஞ்ச சிலதுகளுக்குப்பிடிச்ச சனியன் இன்னும் விடிறபாடா இல்லை. path-finder இற்கு புறோகிராம் எழுதிறாராம் அவர்! வெட்கம் கெட்ட பிழைப்பு! டேய்! நீயெல்லாம் இந்தப்பூமிக்கே பாரம்! நான் உயிரோட இருக்கிற வரைக்கும் உனக்கொரு கழுதை கூட கிடைக்கவிட மாட்டன் ஓ..!" எண்டு பொரிஞ்சு தள்ளிப்போட்டு.இருக்கச்சகிக்கேல்லை வந்திட்டன். வீட்டுக்கு வந்திருந்த சனத்தைப்பார்த்து இப்பிடிக்கதைச் சிருக்கக்கூடாதுதான். இருந்தும் விஞ்ஞானம். தொழில்நுட்பம் படிச்சனான் எண்டு விட்டு. அறிவியலுக்குப்பொருத்தமில்லாத விசர்க்கதை கதைச்சால் என்னெண்டு நான் அமைதியாய் கேட்டுக்கொண்டு இருக்கிறது!

உங்க பாருங்கோ நான் உங்களோட கதைச்சுக்கொண்டிருக்கிறன். என்ரை வெள்ளைக்கார நண்பர் வாறார் நேரமும் 12:58 காட்டிது. மனுசன் சொன்ன மாதிரியே 1 மணிக்குக் கணக்காத்தான் வந்து இறங்கிது. "ஹலோ! டபிள் ஏ இண்டைக்கு வேளைக்கே வந்திட்டீர் போல", கேட்டபடி கையைக்குலுக்கினார். நானும் பெருமையோட "ஓமோம்! அண்டைக்கு ஒரு நாள்தான் ஏதோ நான் வரப்பிந்திட்டிது. இண்டைக்கு நான் உமக்கு ஒரு மணித்தியாலம் முந்தியே வந்திட்டன். நேரம் பொன்னாது. அதுக்கு நான் எப்பேயும் மரியாதை கொடுக்கிறனான்" என்றபடி அவருடைய தோளைத்தட்டி சாப்பிடப்போகும் உணவகத்தை நோக்கிக் காட்டினேன்.

ஒரு முறை திரும்பிப்பார்த்த அவர் "டபிள் ஏ! Friend ! நேரம் பிந்தாமல் வந்தது எனக்குச் சந்தோசமாயிருக்கிது. அதுக்காக ஒரு மணித்தியாலம் முந்தி வந்து காத்திருக்கோணும் எண்டில்லை. எல்லாம் வீணாய்ப் போற நேரம் தூன் எல்லாரும் சொல்லிற நேரத்தை மதிச்சுக்கடைப்பிடிச்சால் ok என்றார். அவர் சொன்ன நியாயமும் விளங்கிச்சுது இருந்தும் வீட்டை விட்டு வேளைக்கே மாற வேண்டியிருந்த என்ரை நிலைமையை அவருக்குச் சொல்லேலாது. சொல்லவும் கூடாது. ஏனெண்டால் வெளியால சொல்லேலாத எங்கட வெட்கக்கேடுகள் எல்லே அவை! (அடுத்த கிழமை யாழ்ப்பாணம் போறன் பாருங்கோ!)

**பின்னால வராத...**



*தாய்:-*
நல்லபிள்ளையா வீட்டில இரு போற இடமெல்லாம் பின்னால வராத...

*மகன்:-*
இல்லையம்மா நான் முன்னால போறன் கூட்டிக் கொண்டு போங்கோ...

சிங்களப்படைகள் மண்கும்பான் பாடசாலையில் தங்கியிருந்தவர்களிலும் களையெடுப்பு செய்து திரட்டியவாறு அல்லைப்பிட்டி நோக்கி நகரத்தொடங்கியது.

அல்லைப்பிட்டி தேவாலயத்துக்குள் மக்கள் பெருந்தொகையில் அடைக்கலம் தேடிக்கொண்டிருந்தார்கள்.

தேவாலய மதகுரு மக்களை காப்பதான நம்பிக்கையை ஊட்டிக்கொண்டிருந்தார். ஒரு வெள்ளைக்கொடியையும் தயார்செய்து முன்நிறுத்தினர். மக்கள் ஒருவாறு நிம்மதியடைந்திருந்தனர்.

ஆயினும் எந்த மனித உரிமையையும் மதியாத சிங்களப்படைகள் தேவாலயத்தை முற்றுகையிட்டன. மதகுரு தனது சீருடையில் வாசலின் முன்புறம் நின்று படைநுழைவைத் தடுக்க முயன்றார் ஆனாலும் படைஅதிகாரி ஒருவர் முன் நகர்ந்து மதகுருவுடன் கதைத்தார். மக்கள் தேவாலயத்துள் அடைக்கலம் புகுந்துள்ளதைக் கூறி அவர்களை எதுவும் செய்யமுடியாது என வாதாடினார். ஆயினும்

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...



(படம்:- திரு)

அதனைப் படையினர் கருத்திலெடுக்கவில்லை. மக்களை தேவாலயத்தை விட்டு வெளியே வரச்சொல்லினர். மக்கள் சகல நம்பிக்கையும் இழந்தவர்களாக வெளியே வந்தனர்.

சாட்டிமாதா கோவிலில் செய்தது போல மக்களை வகையருக்களாகப் பிரித்தனர். அதில் ஆண்களை இளவயதுடையவர்களை ஒரு அணியாகவும் அதற்கப்பாற்பட்டவர்களைத் தனியாகவும் பிரித்தனர். இளவயதுடையவர்களை சாட்டி மாதாகோவிலில் திரட்டியோருடன் ஒன்றிணைந்தனர். அதற்கும் அப்பால் வயதினரைத் திரட்டியவாறு அவர்களை ஒரு அணி அல்லைப்பிட்டி யாழ்ப்பாணவீதிக்கு வெளிகள் ஊடாகக்கொண்டு சென்றது. அவர்கள் கொண்டுசெல்லப்பட்டு பிரதான வீதியிலிருந்த அலுமினிய ஆலைக்கட்டடத்துள் அடைத்தனர். யாழ்ப்பாணக் கரையில் நின்று பார்த்தால் தெரியக்கூடிய ஒரே ஒரு கட்டடமாக அதுவே இருந்தது. அதனை விடுதலைப்புலிகள் தாக்கினால் அம்மக்கள் கொல்லப்ப ட்டும் என்பதே நோக்கம். மறுபுறம் திரட்டப்பட்ட இளவயதினர் கேடயமாகப்படையினரால் அல்லைப்பிட்டி - மண்டைதீவு தெற்குக்கரை கண் ணாக்காடுகளூடாகக் கொண்டு சென்றனர் மாலை வந்து இருளத் தொடங்கிவிட்டது.

கண்ணாப்பற்றைகள் சில இடங்களில் சரசரத்தன உடனடியாக படையினர் சரமாரியாக அப்பகுதிகளில் வேட்டுக்களைத் தீர்த்தனர். இதன்போது மக்கள் சிலர் கண்ணாப்பற்றைகளிலிருந்து கைகளை உயர்தியபடி எழுந்தனர். அவர்கள் மண்டைதீவு மக்கள் அல்லைப்பிட்டிக்கு தப்பி வந்துகொண்டிருந்தார்கள்.

அவர்களையும் பிடித்து படையினர் களையெடுப்புச் செய்தனர். படையினரின் இலக்கு பண்ணை வீதியில் உள்ள மண்டைதீவுச்சந்தி பிரதான கரையோரவீதியில் சென்றால் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடிகள் இருக்கலாம். எறிகணைகளால் தாக்கலாம் என்ற அச்சத்தால் படைகள் மறைவாக முன்னேற தெற்குப்பகுதி வழி நகர்வினை மேற்கொண்டது. அதற்கும் மேலாக மக்களை கேடயமாக பயன்படுத்தி படைகள் நகர்ந்தன. தெற்குப்புறமாக மக்களை கேடயமாகப் பயன்படுத்தி படைகள் நகர்ந்தன. தெற்குப்புறமாக மக்களை கேடயமாகக்கொண்டு முன்நகர்ந்த சிங்களப்படைகள் மண்டைதீவை அடைந்தன. மண்டைதீவில் மக்கள் கட்டடங்களுள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அதன் பின்பும் படைகள் மக்களை கேடயமாகக் கொண்டு மண்டைதீவுச் சந்திக்கு வந்துவிட்டன. அதுவரை எம் மக்கள் எவரும் குறிப்பிட்டளவுக்குக் கொல்லப்படவில்லை.

மண்டைதீவுச்சந்தியை படையினர் அடைந்ததும் அம்மக்களை படையினர் அல்லைப்பிட்டி நோக்கி நகர்த்திச் சென்றனர். மக்களை முன்னே நகரவிட்டு படையினர் பின்னால் நகர்ந்தனர்.

இது படையினர் மிதிவெடிகள் இருந்தால் மக்கள் பலியாகட்டும் என்றஎண்ணத்திலாகும். படைகள் மக்களை மந்தைகள்போல அல்லைப்பிட்டிச் சந்திக்குக் கொண்டு சென்று அங்கிருந்து ஒரு வேட்டைக்காகத்தயார் படுத்திவிட்டு அவர்களைத் திட்டமிட்டு நகர்த்திச் சென்றனர்.

துருவன்


தொல்லியல்

# ஆனைவிழுந்தானில் எடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள்

இலங்கைத்தீவின் மூத்த நாகரிகத்திற்குரிய தொல்பொருள் கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொல்லியல் சான்றுகள் சிங்களப் பகுதிகளில் எடுக்கப்பட வில்லை. மனித சமுதாயம் தன் ஆரம்ப கால உருவாக்கங்களை களிமண்ணால் செய்து




சுட்டுப்பயன்படுத்தியுள்ளனர். உலகளவில் இது 6000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது. தமிழர்களின் மூதாதையர்களை பார்க்கிறபோது 5000 ஆண்டுகளின் முன் ஆரம்பமானது. இதற்கான சான்றுகள் சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்டு காலக்கணிப்பும் செய்யப்பட்டது. தமிழகத்திலும் இவை எடுக்கப்பட்டன. தமிழர் தாயகத்தில் இத்தகு சான்றுகள் மிகத்தொன்மையாக வன்னி, மன்னார் பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ளன. தற்கால மனித வாழ்வின் தொடர்ச்சி வன்னியிலேயே இருந்து வருகின்றது.. பூநகரியை மையமாகக் கொண்டு இயங்கிய கிராமங்கள் கிளிநொச்சி நகரம் வரை பரந்திருந்ததற்கான சான்றுகளாக இவை உள்ளன. பூநகரி கிராஞ்சியில் கடற்கரையில் மணலுள் களிமண் நாடாவினால் உருவாக்கப்பட்டு சூளையில் சுடப்பட்ட 3 அடி விட்ட மண் வளையக்கிணறு உள்ளது. இது 2800 ஆண்டுகளுக்கு முன்பதானது என காபன் 14 என்ற அணுக்கதிர் வீச்சு காலக்கணிப்பு மூலம் உறுதி செய்யப்பட்டது. அக்கராயனிலிருந்து 4 மைல் தொலைவில் உள்ள கிராமமான ஆனைவிழுந்தானில் ''நியாப்'' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்ற குளத்தின் ஆறு இயல்பாகவே புவியியல் அமைப்பில் நீர் தேங்கும் இடத்திலிருந்து 50 மீற்றர் மேற்காக தொல்லியல் மையம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குள அணைக்காக புல்டோசர் கொண்டு மண் அகழப்பட்ட போது இவை வெளிப்பாடான அதிசயிக்கக்கூடிய அளவுக்கு இருக்கின்றன. சுமார் ஒரு அடி உயரம் கொண்ட பெண் உருவச்சிலைகள் அதே அளவுடைய விலங்கொன்றின் உருவம் 6 அங்குல உயரமுடைய பெண் உருவ சுடுமண் சிற்பங்கள் ஏராளமாக கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த உருவங்கள் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் சிற்பங் களுக்கு ஒப்பானவையாக இருக்கின்றன. இவை எமது மூதாதைகளின் நவீனத்துவ சிந்தனைக் கலையை வெளிப்படுத்துவதாக உள்ளன. இன்று ஆபிரிக்க பழங்குடிகள் மத்தியில் இருக்கும் மனித உருவங்களின் சிற்பங்களைப் போல இவை தோற்ற மளிக்கின்றன. இவை எமது வரலாற்றை இந்த




மண்ணுடன் மேலும் பிணைக்கச்செய்யும் சான்றுகளாகும். ஆனை விழுந்தான் தொல்லியல் மையத்தில் ஆரம்பத்திம் மண் அள்ளுகையில் கிடைத்தவையே இந்த சுடுமண் சிற்பங்களாகும். இவற்றைவிட அங்கு அகழப்பட வேண்டியவை இன்னமும் இருக் கின்றன.

*மிகத்தொன்மையாக வன்னி, மன்னார் பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ளன. கற்கால மனித வாழ்வின் தொடர்ச்சி வன்னியிலேயே இருந்து வருகின்றது.. பூநகரியை மையமாகக் கொண்டு இயங்கிய கிராமங்கள் கிளிநொச்சி நகரம் வரை பரந்திருந்ததற்கான சான்றுகளாக இவை உள்ளன.*

குரலோன்



(படங்கள்:- திரு)

## ஹொட்டல் செலவு



என்ன? போனமாசம் உன்ர ஹொட்டல் சிலவு நல்லா குறைஞ்சிட்டு. எப்படி?

ஒரு பெட்டைய லவ் பண்ணுறன். அவயிட வீட்ட அடிக் கடி போறன்.அவ்வளவு தான்.

# புலனாய்வு - தேசத்தின் நலன்களை பாதுகாக்கும் ஆற்றல்மிகு ஆயுதம்

உலகநாடுகள் தத்தமது தேசிய நலன்களை பேணிப் பாதுகாப்பதில் மிகத்தீவிரமான கவனம் செலுத்திவருகின்றன.

இத்தேசிய நலன்களை பாதுகாப்பதற்கு படைப்பலத்திற்கு சமமான அல்லது மேலான பணிகளை புலனாய்வு அமைப்பு ஆற்றி வருகின்றது.

இப்புலனாய்வுப்பணிகள் அமைதியான சூழ்நிலையிலோ, யுத்த சூழ்நிலையிலோ பரந்தளவில் நடைபெற்றுவருகின்றன.

மனிதன் சமூகமாக வாழ ஆரம்பித்த காலத்திலிருந்து புலனாய்வு மனித விவகாரங்களில் ஓர் அம்சமாகப் புகுந்துவிட்டது.

பிற்பாடு அரச பரம்பரை ஆட்சி எழுச்சி பெற்றிருந்த பண்டைய காலத்திலும் அரசர்கள் தம் தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்குப் புலனாய்வு நுட்பங்களை உச்சநிலையில் பயன்படுத்தியுள்ளார்கள்.

இவ் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் "ஒற்றாடல்" என்கின்ற அதிகாரத்தில் இரத்தினச் சுருக்கமாகப் பத்துக்குறள்கள் மூலம் புலனாய்வு முக்கியத்துவம் பற்றி தெளிவுபடுத்தியுள்ளார்.

அக் குறள்களில் ஒன்றை மட்டும் கண்ணோக்கிப் பார்ப்போம்.

"எல்லார்க்கும் எல்லாம்
நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன்
தொழில்"

இக்குறளின் விளக்கமானது ஓர் அரசன் மூன்று காலங்களிலும் நடப்பவனவாகிய நன்மைகளையும் தீமைகளையும் ஒற்றரால் தெரிந்து கொள்ளவேண்டும்.

முன் நிகழ்ந்ததை அறிதலால் தனக்கு அது நிகழாமல் தடுக்க ஏதுவாகும். நிகழ்கின்றதை அறிதலால் தான் எச்சரிக்கையாக இருக்க ஏதுவாகும்.

பின் நிகழப்போவதை அறிதலால் முன்கூட்டியே பாதுகாவல் செய்துகொள்ள ஏதுவாகும். ஆகையால் முற்கால நிகழ்ச்சிகளையும் ஒற்றரால் அரசன் அறியக் கடமைப்பட்டவனாகின்றான்.

இக் குறளில் சொல்லப்படும் புலனாய்வுக்கடமையை தற்காலப் பார்வையில் நோக்குமிடத்து தேசத்திலுள்ள எதிரியின் உளவாளிகளை கண்காணிப்பதிலும் அவர்களை கைது செய்வதிலும், நாசவேலைகளையும் சதிச் செயல்களையும் தடுப்பதிலும் புலனாய்வு அமைப்பினது கடமை இருக்கின்றது.


இத்தேசிய அச்சுறுத்தல்களைத் தடுப்பதிலும் எல்லாவற்றிற்கும்மேலான தேசத்திற்கு வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களையும் அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தேசிய நலன்களையும் பாதுகாக்கும் கடமையும் புலனாய்வு அமைப்பிற்கு உண்டு.

உலக வரலாற்றில் பல்வேறு நாடுகள் பல்வேறு காலகட்டங்களில் யுத்தஅச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தன. இக்காலகட்டங்களில் புலனாய்வு அமைப்பினது பெரும்பங்கினை உணர்ந்த பின்னர் பலம்பொருந்திய புலனாய்வு அமைப்புக்களை உருவாக்கிய வரலாற்றுக் கதைகளை இங்கு மீட்டுப்பார்ப்போம்.

ரஷ்யாவின் புலனாய்வு அமைப்பொன்று 1917ம் ஆண்டு லெனினால் ஆரம்பிக்கப்பட்டது. இப்புலனாய்வுத் தேவையை உணர்த்துவதற்காக லெனினால் சொல்லப்பட்ட கருத்தானது "தன்னைத்தானே பாதுகாக்கத் தெரிந்திருந்தால் மட்டுமே புரட்சியைப் பெறுமதிமிக்கதாக ஆக்கமுடியும் என்றார். இக்கருத்துரையை மெய்யாக்க பின்னாளில் MMGB , KGB ஆகிய பலம் வாய்ந்த புலனாய்வு அமைப்புக்களை ரஷ்யா கட்டியெழுப்பியது.

இது இப்படியிருக்க அமெரிக்காவினது புலனாய்வு அவசியம் பற்றி அமெரிக்க புலனாய்வு வல்லுனர் மைக்கல் இப்படிக் கூறுகின்றார். "இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா சுதந்திரம் அடைவதற்கு புலனாய்வு மிகவும் அத்தியாவசியமாயிருந்தது. அதேபோல் அமெரிக்கா பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குப் புலனாய்வு அவசியம்" என்றார். இவ் அவசியம் கருதி அமெரிக்கா FBI CIA ஆகிய புல னாய்வு அமைப்புக்களை நவீனமயப்படுத்தியுள்ளது.

இதற்கு மேலாக 1981இல் அமெரிக்கா புலனாய்வின் இயல்பு பற்றி 12333 இலக்க சனாதிபதி கட்டளையில் தெளிவுபடுத்தியுள்ளது.




அதாவது ஐக்கிய அமெரிக்காவின் தேசிய நலன்களை வெளிநாட்டுப் பாதுகாப்புப்படையின் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கவும் ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, பொருளாதாரக்கொள்கை ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல் விரிவுபடுத்தல் தொடர்பான முடிவுகளையும் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை சனாதிபதிக்கு வழங்க வேண்டும்.

இப்படியாக புலனாய்வு அமைப்பினது முக்கியத்துவம் இருப்பது போன்று இந்தியாவும் IB, RAW புலனாய்வு அமைப்புக்களை மிகவும் சக்தி வாய்ந்த அமைப்புக்களாக கட்டியெழுப்பியுள்ளது. இதனை பின்நோக்கி தேடலுக்குள்ளாக்கும் போது உலகமகாயுத்தம், உலக அரசியல் போட்டிகள், எல்லைத் தகராறுகள் ஆகிய கள நிலவரங்களால் இந்தியா 1949இல் வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவொன்றை உருவாக்கியது. 1962,1965 களில் சீன பாகிஸ்தான் யுத்தங்கள் ஏற்பட்டது. இத்தகைய பெரும் அச்சுறுத்தல்களால் 1968இல் இந்திராகாந்தியினால் இவ்விரு புலனாய்வு அமைப்புக்களும் நவீனமயப்படுத்தப்பட்டு பலமான அமைப்புக்களாக நிறுவப்பட்டது.

அந்த RAW வின் தந்திரோபாய நடவடிக்கை இரண்டை இங்கு சிறிது அலசிப்பார்ப்போம். முதலாவதாக, பலம்பொருந்திய பாகிஸ்தான் நாட்டை இரு நாடுகளாக உடைத்து பலவீனப்படுத்தியது. அதிலொன்று கிழக்குப் பாகிஸ்தான், வங்களாதேஷ் நாடாக இன்று விளங்குகின்றது. இந் நடவடிக்கைக்காக இந்திய இராணுவத்தை ஈடுபடுத்தி இருப்பினும் RAWவின் பங்கு மிகப்பெரியது மற்றது சிக்கிம் மன்னர் ஆட்சியில் சுதந்திரமாக இயங்கிய ஒரு சிற்றரசு இதனை இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைத்துக் கொள்ளப்பட்டதற்கு RAW வினது உழைப்பு முக்கிய இடம்பெற்றுள்ளது.

இத்தகைய பல்வேறு புலனாய்வுப் பணிகளால் RAWவும் உலகில் மிகப் பலம்வாய்ந்த புலனாய்வு அமைப்பாகத் திகழ்கின்றது. இவற்றிற்கு மேலாக இஸ்ரேல் நாட்டின் படைபலத்திற்கு சமமான பணிகளை புலனாய்வு அமைப்பு செய்து பலம் பொருந்திய புலனாய்வு அமைப்பைக் கொண்ட நாடாக இஸ்ரேல் விளங்குகின்றது.

அது தன் நாட்டிற்குள் நாசவேலைகள் அரபுத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் நடைபெறாமல் முறியடிப்புப் புலனாய்வில் ஈடுபட "சின்பெத்" என்ற புலனாய்வு அமைப்பை நிறுவியுள்ளது. அதற்கு அப்பால் வெளிநாடுகளில் உளவு நடவடிக்கைகளிலும் மறைமுக நடவடிக்கைகளிலும் 'மொஷாட்" என்ற புலனாய்வு அமைப்பை ஈடுபடுத்திவருகின்றது. இவ்விரு அமைப்புக்களை விட பாதுகாப்புப் படைகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஒன்றையும் நிறுவியுள்ளது.

இஸ்ரேலியப் புலனாய்வுதுறையின் பலம் யாதெனில் அது பல மொழிபேசும் இஸ்ரேலியர்களைக் கொண்டதாகும். அரபுநாடுகளில் வாழும் பெரும் எண்ணிக்கையான இஸ்ரேல் இரகசிய முகவர்கள்

**—— நீலன் ——**

மொசாட்டின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றனர். இன்று உலகில் மிகத் திறமையான புலனாய்வு அமைப்பு மொசாட் என புகழ் பெற்றுள்ளது.

மேற்கூறிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து இவைகள் புலனாய்வு அமைப்பினது அவசியத்தை உணர்வதோடு, அது தேசத்தின் ஓர் ஆற்றல்மிகு ஆயுதமாக இருப்பதனையும் புலப்படுத்துகின்றது.

உலக மகாயுத்தங்கள் எதிரி நாடுகளது இரகசிய அச்சுறுத்தல்கள் ஆகியவற்றால் எல்லா நாடுகளிலும் புலனாய்வுச் சேவைகளை உருவாக்கவும், விஸ்தரிக்கவும், வழிவகுத்தது போல் தமிழீழத் தேசியவிடுதலைப் போராட்டம் தான் சிறிலங்கா அரசையும் தமிழீழ அரசையும் தத்தமது புலனாய்வு அமைப்புக்களை விஸ்தரிக்க வழிவகுத்துள்ளது.

ஆரம்பகாலங்களில் தமிழரின் ஆயுதப்போராட்டத்தை அழித்தொழிப்பதற்குச் சிறிலங்கா அரசு CID என்கின்ற பெயரில் புலனாய்வுப் பணிகளைமேற்கொள்ளத் தொடங்கியது.

அதாவது வஸ்தியாம் பிள்ளை தலைமையிலான CID குழுவொன்றை தமிழர் தாயகப் பகுதிகளில் முதல் முறையாக புலனாய்வுப்பணிகளில் ஈடுபடுத்தியது. அக்குழு ஈழப்போராளிகள் பலரை கைது செய்தும் கைதுசெய்யப்பட்டவர்களை சித்திரவதை செய்து தமது கொடூரமான செயலில் இறங்கியது. அத்துடன் இன்பன், செல்வரத்தினம் உட்பட சில தமிழ் உணர்வுள்ள இளைஞர்கள் CIDயினரால் கொலை செய்யப்பட்டு வீதிகளில் வீசி எறியப்பட்டனர். இத்தகைய இரகசிய அச்சுறுத்தல்களிலிருந்து தமிழர் விடுதலைப்போரைப் பாதுகாக்க 78 களில் புலிகள் இயக்கம் CID யினர் மீதான தாக்குதலைத் தொடுத்தார்கள்.

> **ஒரு நாட்டின் தேசிய புலனாய்வு அமைப்பென்பது குறித்த நாட்டின் இரு கண்களாகவும் இருகாதுகளாகவும் நுண்ணறிவு படைத்த கட்டமைப்பாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் எதிரி நாட்டவரின் புலனாய்வுப்போரை எதிர்கொள்ளவோ, அல்லது எதிரி நாட்டின் மீதான புலனாய்வுப்போரை தொடக்கவோ முடியும். இப்பணிகளில் முகவர்கள்தான் புலனாய்வுச்சேவையை நிர்ணயிப்பவர்களாக இருக்கின்றார்கள்.**

அத்தாக்குதல் ஆரம்பமானதும் வஸ்தியாம்பிள்ளை, பேரம்பலம், பாலசிங்கம் ஆகியோர் கொல்லப்பட்டார்கள். அதனைத்தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களில் கருணாநிதி, உரும்பிராய் சண்முகநாதன் இணுவில் சண்முகநாதன் எனப்பல CIDயினர் அழித்தொழிக்கப்பட்டார்கள். அத்தோடு CIDயினரின் முக்கிய முகவரான உரும்பிராய் பெற்றோல் நிலைய நடராசாவிற்கும் புலிகள் பகிரங்க மரணதண்டனை வழங்கினார்கள்.

இப்படியாக அக்காலத்து சிறிலங்கா புலனாய்வாளர்களையும் அவர்களது முகவர்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் வெற்றிகண்டது.

புலிகளின் ஆரம்பகால புலனாய்வுச் செயற்பாடுகள் மூலமாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு, பின்னரான மறைமுகத் தாக்குதலால் CID யினரின் சுதந்திர நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டது. அத்தோடு அவர்களின் முகவர் நிலையங்கள் சீர்குலைக்கப்பட்டது. மேலும் CID யினரால் கைதுசெய்து பின் விடுதலையானவர்களைச் சந்தித்துக் கதைத்து CIDயினர் புலிகள் இயக் கம் தொடர்பான தகவல்களில் கவனம் செலுத்தும் விடயங்கள் பற்றியும், அவர்கள் தெரிந்து வைத்திருக்கும் விபரங்கள் பற்றியும் மற்றும் CIDயினரின் தகவல் தேடல் பற்றியும் அறிந்துகொள்ளும் ஆர்வம் தேசியத் தலைவரிடம் இயல்பான புலனாய்வுப் பண்பாக இருந்துவருகின்றது.

அவரின் புலனாய்வுத் தேடலும் இரகசியம் பாதுகாக்கும் இறுக்கமான பண்பும் புலிகள் இயக்கத்தினை எதிரிப்புலனாய்வு அச்சுறுத்தலில் இருந்து பாதுகாத்து, தேசியத்தலைவரால் 84களில் புலனாய்வுப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அப்புலனாய்வுப் பிரிவானது அக்காலப் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட சிறிய அளவிலான புலனாய்வுப் பணிகளை ஆற்றிவந்துள்ளது. அப்பிரிவு கால நகர்வில் புதிய அமைப்பு வடிவம் பெற்று பலமான ஒரு நிலைக்கு கொண்டுவரும் பொருட்டு தேசியத் தலைவரால் 90ல் பொட்டம்மான் புலனாய்வு அமைப்பின் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

அப்புலனாய்வு அமைப்பானது இன்று உலகப்புலனாய்வு அமைப்புக்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் அளவிற்கு ஆற்றல் உள்ள ஒரு புலனாய்வு அமைப்பாகப் பிரபல்யம் பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க சிறிலங்காவினது CID புலனாய்வுப் பிரிவைத் தொடர்ந்து தேசியப் புலனாய்வுப்பணியகம், (NIB) இராணுவப்புலனாய்வுப்பிரிவு (DMI) கிளர்ச்சி முறியடிப்புப்பிரிவு, (C.S.U) வெளிநாட்டுப் புலனாய்வுப்பிரிவு (D.F.I) கடற்படைப் புலனாய்வு என உருவாக்கி அதன் செயற்பாடுகளைக் கட்டமைப்புகளை விரிவாக்கம் செய்து வினைத்திறன்மிக்க சிறிலங்கா புலனாய்வு அமைப்பாக முன்னேற்றம் கண்டுள்ளது.

இத்தகைய ஒரு நிலைக்கு புலனாய்வுக் கட்டமைப்பைக் கொண்டு வருவதற்குப் பெருமளவில் நிதிவளம் நவீன தொழில்நுட்பவளம், செயல்திறன் மிக்க ஆளணிவளம் என அனைத்தினையும் சிறிலங்கா அரசு ஒதுக்கீடு செய்து வந்துள்ளது. அத்துடன் அதன்புலனாய்வு நண்பர்களாக வல்லமை உள்ள நாடுகளும் இருந்து வருகின்றன, துணைபுரிகின்றன. அதனால் நவீனத்துவ வளர்ச்சியுள்ள பலமுள்ள ஓர் அமைப்பாக சிறிலங்காப் புலனாய்வு அமைப்பு உயர்ச்சி கண்டுள்ளது.

(17ஆம் பக்கம் பார்க்க...)




# இதயங்கள் எங்கும் எம் இதயச்சந்திரன்

**— க. மிரேசு —**



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதன்மையான சமர் ஒன்றில் - விழுப்புண் அடைந்தும் தனது இலக்கினில் குறியாக இருக்கும் ஒரு விடுதலைவீரனின் குரல் மிக மிகத்தெளிவாக ஒலிக் கிறது. அந்தக்களத்தினில் ஓயாது கேட்டுக்கொண்டிருக்கின்ற வேட் டோசைகளையும் மீறிவருகிறது அந்தக்குரல்.

மச்சான் விடாதே, விடாதே....

தொடர்ந்து அடியடா... ஓடுறான்...

அந்தா ஓடுறான்... விடாதே அடி....

உவங்கள் எங்களை யாரெண்டு நினைச்சான்! சண்டையில சாள்ஸ் அன்ரனி நிற்பது அவனுக்குத் தெரியாது உடம்பில உயிர் இருக்கு மட்டும், எதிரியின் கதையை முடிப் போம்... என்கிறான்.

பக்கத்தில் இருந்தவனோ, டேய்.....சாள்ஸ் அன்ரனியில ஒருவன் இருக்கும் மட்டும் எங்களைக் கடந்து செல்லமுடியாது... எனச் சொல்லி யவாறே எழுந்து நின்று ஆவேசமாக எதிரியைநோக்கி சுட்டுக்கொண்டே நகர்கிறான். விழுப்புண் அடைந்து வீழ்ந்து கிடந்தவனோ நகரும் அந்த சகதோழனுக்கு ஆதரவுச் சூட்டினை வழங்குகிறான், சண்டை வெற்றி கொள்ளப்படுகிறது.

உறுதி நிறைந்த இந்த உத்வேகத்திற்கு, காரணம் என்ன, சாள்ஸ் அன்ரனி என்றதும் உணர்வு தழும்பி, உயிரோட்டமாக எதையும் செய்திடும் துணிவு எங்கிருந்து வந்தது என்பதை ஆராயுமளவுக்கு சென்றுவிட வேண்டியதில்லை, ஏனெனில் வீரத்திற்கு இலக்கணமாய் எம் கண்முன்னே வீரத்தின் திரு உருவாய் நிழலாடுகிறான் எங்கள் வீரசீலன்.

எப்படிப்பட்ட எதிரியின் உறுதியையும் உடைத்தெறியும் அந்தப் பெயர்மட்டுமல்ல, சீலனின் உருவமும், எவரையும் அஞ்சிடவே செய்துவிடும், கட்டுடலும் சீரிய பார் வையும், முறுக்கேறிய மீசையுமான, எங்கள் சீலனின் உருவம் எதையும் செய்து விடவும், செய்யவும் ஊக்கம் ஊட்டுபதாகவே உள்ளது. என்ப தனை சீலனின் திரு உருவப்படத் தைப்பார்த்த எவரும் இலகுவில் மறுத்துவிட முடியாது.

தமிழீழ விடுதலைப்புலி களின் முதற்தாக்குதல் தளபதியாய், தலைவரின் நேசத்திற்குரிய இதயச் சந்திரனாய், தாய் நாட்டுக்காய் எதை யும் செய்துமுடிக்கும் இலட்சிய வாதி யாய் உதித்தவன் எங்கள் வீரசீலன்.

குமுறுகின்ற எரிமலையாய் போர்க்களத்தில் குதிக்கின்ற மனோ பாவத்தினை இயல்பாகவே கொண்டி ருந்தான். எனவேதான் சீலன் களத் திலே பெரும்வீரனாகச் செயற்பட்டு எதிரிக்கு சிம்மசொப்பனாகத் திகழ்ந் தான் என்பது பெரும் இரகசியமல்ல.

லெப். சீலன் (சாள்ஸ் அன்ரனி)யின் வீரம் என்பது சுத்த மானதும், கலப்படமல்லாததுமான தங்கத்தைப் போன்றது என்ப தற்குச் சாட்சிகள் எதுவும் தேவைப் படாத உண்மையாகும். உலகத்தில் வீரத்துக்கு புதுமகுடம் சூட்டிய புதுமையான மனோ நிலையுடன் உருவாகிய வீரமாகும். வீரத்துக்கே வீரம் என்பது இதுதான் என்பதை புரியவைத்தவன் எங்கள் சீலனாகும்.

1983ஆம் ஆண்டு யூலைத் திங்கள் 15ஆம் நாள். யாழ். மீசாலைக் கிராமம் மிகவும் அமைதியாக தென் றல் தவழ்ந்திட காட்சியளிக்கிறது. கச்சாய் கடலின் இதமான காற்று உவர்நீர் தூறலுடன் வீசிக்கொண்டி ருக்கின்றது. அந்த எளிமையான அமைதியினை கோட்டான்களின் அலறல் கலைக்கின்றது. தூரத்தே ஏதோ சில ஊர்திகளின் சத்தம் கேட் டிட மீசாலைக் கிராமம் கலவரமடை கின்றது. ஊர்திகளின் இரைச்சல் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களினதே என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. ஏதோ ஒன்று சிங்களவெறியர்களால் நடக்கப்போகின்றது என்பது கிராமத் தவர்களுக்குத் தெரிந்துவிட்டது. எனவே எல்லோரும் கலவரமடைய, பிசாசுகளின் தீவாய் மாறியேவிட்டது. மீசாலையில் ஒரு சிறு பேருந்து,ஒரு இராணுவ ஜீப், ஒரு இராணுவ கவசஊர்தி என மூன்று ஊர்திகளில் சிங்களக் கூலிப்படைகள் மீசாலை அல்லாரை வீதியை ஆக்கிரமிக் கின்றன. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களப்படைகள் சாதாரண உடை யில் வந்திறங்கிவிட்டார்கள்.

பனைவடலிகளும், நெடிய பனை மரங்களும், ஆங்காங்கே பற்றைகளுமாகக் காட்சிதந்த அந்த இடத்தில்தான் லெப். சாள்ஸ் அன்ர னியும் அவனது தோழர்களும் மறைந்திருக்கின்றனர்.

புலிகளின் மறைவிடத்துக் குள்ளே, அவர்களைத்தேடி, என்ன வென்று சிங்கள எதிரி காலடிவைக்க முடியும், சிந்திக்க நேரம் இதுவல்ல, நிச்சயமாகத் துரோகி ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டுவிட்டோம் என்று எண்ணியபடி வெளியேறினார் கள். பற்றைகள் அடர்ந்த ஒரு ஒற்றை யடிப்பாதையால் சீலனும் அவனது 03 தோழர்களும் பின் வாங்கிக் கொண்டிருந்தனர். அடர்த்தியான வடலிகளும், பற்றைகளும் நிறைந்த ஒற்றையடிப்பாதை தங் களுக்குப் பாதுகாப்பைத்தரும் என்றே பின்வாங்கினார்கள். எதிரி தங்களது மறைவிடத்தைச் சுற்றிவளைத்துவிட் டான் என்பதற்காக, உயிரிலும் மேலான தங்களது ஆயுதத்தை எடுத்துக்கொண்டு பின்வாங்கி வந்து கொண்டிருந்த வேளையே அந்தச் சம்பவம் நடந்தது.

எதிரிக்கு சிம்மசொப்பன மாய் விளங்கும் புலிகளை குறி வைத்தே எதிரியானவன் இந்தச் சுற்றிவளைப்பைச் செய்துகொண்டி ருந்தான். அவர்களிடமிருந்து தப்பு வதற்காக சீலனும் அவனது குழுவும் பின்வாங்கிக்கொண்டிருக்க, எதிரி அவர்களைக் கண்டுவிட்டான். ஒரு ஊர்தியிலுள்ள சிங்களப்படைகளுடன் சீலனின் தலைமையிலான புலிகள் தாக்குதலை தொடங்கினர் ஆனால் இவர்கள் நின்ற இடம் ஒரு வெட்டை என்பதை உணர்ந்த சீலன், அந்த இக்கட்டான நிலையிலும் எதிரியை தாக்குவதற்கு கட்டளையைப் பிறப் பிக்கின்றான், சுடுங் கள்.... சுடுங்கள்... என்றவாறே சீலன் தனது துப்பாக் கியை இயக்குகின் றான். சீலனின் துப்பாக்கி சட சடத்த உடனேயே சகதோழர்களின் துப்பாக்கிகளும் தங்களது அனல் நாக்கை கக்கின.

சிங்களப்படைகள் புலிக ளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாது திணறுகிறன. என்றாலும் எதிரியின் தாக்குதல் தொடர்கின்றது. பலமான நிலையிலிருந்து தாக்கு கிறான். சீலனும் அவனது தோழர்க ளும் முன்னேறவோ,பின் வாங்கவோ முடியாமல் இருந்த இடத்திலிருந்தே விடாமல் தாக்கிக்கொண்டிருக்கிறார் கள். எதிரியிடம் பிடிபடுவதைவிட மானத்துடன் உயிர்விடுவதே மேலென நினைத்தவாறு தொடர்ந்தும் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். வெட்டவெளி என்பதனாலும் எதிரி கூடுதலான தொகை யினன் என்பதனாலும் முழுமை யாகச் சுற்றி வளைத்து விட்டான், என்றாலும் சீலன் ஓயவில்லை. அவனது துப் பாக்கி சட சடத்த வண்ணமே இருக்க ஆ......... அம்மா... எனசீலன் கத்து கிறான். எதிரியின் குண்டொன்று சீலனின் மார்பில்... சீலனின் உடலிலிருந்து குருதி மண்ணைத்தொட்டு முத்தமிட தோழர்கள் இருவர் எதிரியை நோக்கிச் சுட்டுக் கொண்டிருக்க ஒருதோழன், அவனது வீரத்தள பதியைத் தூக்கிச்சென்று காப்பா ற்றும் எண்ணத்தில் கிட்டச் செல் கிறான், எப்படியென்றாலும் எங்கள் சீலன் அண்ணாவைக் காப்பாற்றிவிடவேண்டும் என்று மனதில் ஆயிரம் ஆசைகளுடன் நிறைவேறாத பல வேண்டுதலுடன் செல்கிறான்.

என்னைத் தூக்கவேண்டாம் என்னை விட்டிட்டு நீங்கள் ஓடித்தப் புங்கோ...! என்றதுமே அந்த வீரன் திகைத்துப்போய் நிற்கிறான்.

மீண்டும் சீலன் இயலாத குரலுடன் கத்துகிறான் டேய்.. டேய்.. என்னை விட்டிட்டு நீங்கள் ஆயுதத்தை காப்பாற்றுங்கோ... சொன்னபோதே எதிரிகிட்டவாக நெருங்கிவிட்டான் என்பதை எல்லோரும் உணர்ந்து விட்டனர். எனவே அந்த வீரன் எப்படி யும் சீலனைத் தூக்கிக்கொண்டு சென்றுவிடவேண்டும் என்பதில் உறு தியாக இருந்தான்.

சீலண்ணை உங்களை விட்டிட்டுப் போகமாட்டம்...

எப்படியும் உங்களை, கொண்டுபோய்ச் சேர்த்திடுவம் என்கிறான்.

மீண்டும் இயலாத நிலையி லும் சீலன் உறுதியாகச்சொல் கிறான்.

என்னை சுட்டுவிட்டு என்ர ஆயுதத்தை எடுத்துக்கொண்டு போங்கள் என கூறியவன் சகதோழர் கள் தயங்கியபோது கெதியாய் ஆயு தத்தைக்கொண்டு போங்கோ...இது என்ர கட்டளை என்றான்.

இது இயலுமான காரியமா, என்னவென்று அப்படிச்செய்வது விறைத்துப் போய் நிற்கிறார்கள். தங் களது தளபதியை, உயிர்த்தோழனை என்னவென்று சுட்டு விட்டுப்போவது என்று தோழர்கள் மனப்போராட்ட த்தில் தங்களை மறந்திருக்க, சீலனின் குரல் மீண்டும் திடமாக ஒலிக்கிறது.

டேய்... என்னை சுட்டுவிட்டு என்ர ஆயுதத்தை எடுத்துப்போய் [illegible] கொடுங்கள் என் கிறான்.

என்னவென்று சீலண்ணையச் சுடுவது. தலைவனின் நேசத்திற் குரியவன் தமிழீழத்தில் அளவில்லாத பற்றுதல் வைத்துள்ளவன் என்ன வென்று எங்கள் வீரப்புதல்வனைச் சுடுவது, இது உடனே எடுக்கப்பட வேண்டிய முடிவும் இல்லை, ஆனால் எதிரியின் தாக்குதலோ கடுமையாகி விட்டது. எனவே என்ன செய்வது என்று திகைத்தபோதே மீண்டும் சீல னின் குரல் கடுமையான கட்டளை யாய் ஒலிக்கிறது.

என்னைச்சுடடா... என்னைச் சுடு... என்னைச்சுட்டுவிட்டு என் ஆயு தத்தை கொண்டுபோவெனக் கத்து கிறான்.

நெஞ்சில் வழிந்தோடிய இரத்தம் மண்ணில் பரவிக் கொண்டே இருக்கிறது. அதனுடன் சேர்ந்து அவனது இலட்சிய உறுதி, வீரம், தாயகப்பற்று, தலைவனின் நேசிப்பு புதிய உத்வேகமெடுக்கிறது.

விடுதலைக்கே தனது உயி ரென நினைத்து வந்தவன், விடு வானா? தனது இலட்சியப்பற்றை.

என்னைச்சுடடா..சுடு... இது எனது கட்டளை... சுட்டுவிட்டுப்போ. என கட்டளையை நிறைவேற்றச் சொல்கிறான்.

அழுதுபுலம்பியவாறே. அந்தப்போராளி சகதோழனின் தலை யில் துப்பாக்கியை வைக்கிறான்.

(17ஆம் பக்கம் பார்க்க)



## கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு ------------------

# அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி பற்றாக்குறையாக உள்ளது

**-வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம்-**



**இந்தவார நேர்காணலுக்காக நாம் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களைச்சந்தித்தோம். அவரிடம் நாம் கிளிநொச்சி வலயத்திற்கான அரச நிதி ஒதுக்கீடு மற்றும் மாவட்டத்தில் வளப்பங்கீட்டில் பாரபட்சம் நிலவுவதாக குற்றம் சுமத்தப்படுவது என்பன தொடர்பாகவும் கிளிநொச்சி வலயகல்விசார் நெருக்கடிகள் தொடர்பாகவும் பல கேள்விகளைக்கேட்டோம்.**

**எமது கேள்விகளுக்கு அவர் மிகவும் கரிசணையோடு பதிலளித்தார். அவர் எமக்களித்த பதில்கள் வருமாறு:**

நேர்காணல்
சு.பிரபா

தகவல் தொழில்நுட்ப விருத்தியினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் எதிர்கொள்வது கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் என்று சொல்வதை விட விசேடமாக வன்னிப்பகுதிப் பாடசாலைகளைக் குறிப்பிடலாம் இன்று அரசினால் அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றோம். அதற்கு விசேடகாரணம் தகவல் தொழில்நுட்பம் என்றபொழுது அது ஒரு மிகுந்தநவீன அறிவாற்றலை வளர்க்கின்ற ஒருபகுதி அந்தவகையிலே, இங்குள்ள பாடசாலைகளுக்குக் கணினி வசதிகள் போதியளவு செய்யப்படவில்லை. இந்தமாவட்டத்தில் 20 பாடசாலைகள் கல்விப்பொதுத் தராதர உயர்தர வகுப்புகளைக் கொண்டுள்ளன.

அதிலும் நான்கு பாடசாலைகளுக்கு மட்டும் கணினிவசதி செய்து தரப்பட்டுள்ளது. கணினிவசதியின்மை ஒருபுறம். மின்சாரவசதியின்மை ஒருபுறம் அத்துடன் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகளுக்கான மின்பிறப்பாக்கிகள் எவையும் அரசினால் இதுவரையில் வழங்கப்படவில்லை. தற்சமயம் நகரப் பகுதியில் மட்டும் மின்சாரவசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு பாடசாலைக்கும் மின்சாரம், தொலை பேசி வசதியில்லாமல் உள்ளது. இதனால் தகவல் தொழில் நுட்பப்பாடத்தை நடைமுறைப்படுத்த முடியாது.

தகவல் தொழில்நுட்பம் என்றவகையில் இணையத்தளம் என்பது முக்கியம். எந்தப்பாடசாலைகளுக்கும் இணையத்தைப் பார்க்கக் கூடிய வசதிகள் இல்லை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசினால் தகவல் தொழில் நுட்ப பாடத்தை போதிப்பதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, முருகானந்தா மகாவித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளுக்கு மட்டும் தகவல் தொழில் நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கின்றன. இவற்றைவிட கல்விப் பொதுத்தராதரவிஞ்ஞான பிரிவுகளை உடைய வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கோ, பூநகரிமகாவித்தியாலயத்திற்கோ, பளைமத்தியகல்லூரிக்கோ, இவ்வாறான கணினிகள் இதுவரை வழங்கப்படவில்லை என்றே கூற வேண்டும்.

***கல்வி மேம்பாடு என்பது அறிவைத்தேடுவதோடு மட்டுமல்லாது, விளையாட்டுத் துறை மேம்பாட்டிற்கும் ஒரு செயறபாடாக அமைகின்றது. அந்த வகையில் கிளி நொச்சிமாவட்ட கல்விமேம் பாட்டிற்கு எந்த நடவடிக்கை எடுக்கமுடியும்?***

ஒரு பாடசாலையின் பெயரும்புகழும் நிலைத்து நிற்பதற்கு விளையாட்டுத்துறைமிகமிக முக்கியமானது இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்திலே எமது மாணவர்கள் வெளி மாவட்டத்திலே போட்டிகளுக்கு செல்லமுடியாத நிலையில் இருந்தது.

கடந்த இரண்டுவருட காலமாகத்தான் வடக்குக்கிழக்கு மாகாணப் போட்டிகளில் பங்குபற்றக் கூடியதாக உள்ளது. இவ்வாறான நிலைமை ஏற்பட்டபின் மாகாண மட்டத்திலும் தேசியமட்டத்திலும் குறிக்கப்பட்ட சாதனைகளை எமது மாணவர்கள் ஏற்படுத்தி வருகின்றனர்.

இம்முறை இதுவரை நடந்த மாகாண மட்டப்போட்டிகளிலே உடற்பயிற்சிப் போட்டியிலே. ஆண்கள் மூன்று இடமும் பெண்கள்மூன்று இடமும் என்ற ஆறு இடங்கள் உள்ள இடங்களிலே எமதுமாவட்டம் இரண்டு இடத்தைப் பெற்றுள்ளது. இதனை ஒரு சாதனையாகவே நாங்கள் பார்க்கின்றோம். இந்த விளையாட்டுத் துறையில் நாங்கள் மேலும் முன்னேறுவதற்குத் தடையாக பலசக்திகள் உண்டு. இந்த மாவட்டத்திலே எந்த ஒரு பாடசாலையிலும் விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதற்குஎந்த விதமான நிதியும் வழங்கப்படவில்லை. இதனால் இங்கு தரமான விளையாட்டுமைதானங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இந்த வகையில் எமது மாணவர்கள் உயர் மட்டப் போட்டிகளுக்கு பெருந்தொகையான பணத்தினை செலவு செய்து வேறுமாவட்டங்களுக்குச் செல்கின்றனர்.

அடுத்து எங்களுடைய மாவட்டத்தில்போதியளவு உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாதுள்ளமை, இவ்வாறு ஆசிரியர் இன்மையால் போதியளவு பயிற்சிகளை வழங்கமுடியாத நிலையில் உள்ளது.

அவற்றைவிட கடந்த நான்கு வருடங்களாக பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் எவையும் அரசினால் இதுவரையில் வழங்கப்படவில்லை. இவ்வாறு வருடா வருடம் விளையாட்டு உபகரணங்கள் வழங்காது விட்டால் மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகளை பெறமுடியாது. இது ஒரு பாரிய குறையாகவே விளங்குகின்றது. ஒருபாடசாலையினுடைய பெயர் முக்கியத்துவம் பெறுவதற்கும் அதன் பெயரும், புகழும் நிலைநிறுத்துவதற்கும் இந்த விளையாட்டுத்துறை காரணமாயிருக்கின்றது என்றே குறிப்பிடவிடும்பு கின்றேன்.

***இலங்கைக் கல்வி அமைச்சினால் நாடு முழுவதும் முனைப்புடன் நடைமுறைப்படுத் தப்பட்டு வரும் ஆங்கிலமொழிக்கல்வியை (தரம் 6முதல்) கிளிநொச்சியில் பரிட்சார்த்த மாகக்கூட நடைமுறைப் படுத்தாமைக்கான காரணம்?***

இன்றைய நிலையில் ஆங்கிலக் கல்வி என்பது இலங்கையிலும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு விடயமாகும். அதேநேரம் இந்த ஆங்கில கல்வியைப் போதிப்பதற்கு ஆசிரியர்வளம் என்பது மிக முக்கியம். இந்தவகையில் நான் எற்கனவே குறிப்பிட்டதுபோன்று 87 பாடசாலைகளுக்கும் மொத்தமாக இந்த ஆங்கிலக்கல்வியை கற்பிப்பதற்கு சுற்றுநிருப அறிக்கைகளின்படி 168 ஆங்கில ஆசிரியர்கள் தேவையான இடத்தில் 14பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இதனால் பலபாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியை போதிக்கமுடியாத நிலை உள்ளது. ஆங்கிலக் கல்வி பெறாத ஆசிரியர்களைக் கொண்டு ஆங்கிலம் பயிற்றுவிப்பது என்பது மிகப் பெரியபிரச்சினையாக எதிர் கொள்ளவேண்டியுள்ளது.

இன்று முற்றுமுழுதாக பாடசாலைகளில் தரம் 06 இல் இருந்து ஆங்கிலப்பாடமூலம்சகல பாடங்களையும் கற்பிக்கின்ற நடை முறை இலங்கையின் பலபகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால இங்கு ஆங்கிலம் என்ற ஒருபாடத்தை கூட கற்பிக்க கூடிய ஆசிரியர்வளம் கற்பனைசெய்யமுடியாத நிலையில் பற்றாக்குறையாக உள்ளது. ஏனென்றால் ஒருபாடசாலையில் என்றாலும் சகல பாடங்களையும் கற்பிக்கமுடியாத நிலையில் ஆசிரியர் வளப்பற் றாக்குறை உள்ளது.எனது வலயத்தில் மட்டுமல்ல ஏனைய வலயங்களிலும் இப்பிரச்சினை நிலவி வருகின்றது.


***நுண்கலைப்பீடத்திற்க்கான தெரிவில் கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய ஒதுக்கீடுகளுக்கு உட செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இதனை நிவர்த்திசெய்யக்கூடிய வகையில் எவ்வாறான நடவடிக்கை. எடுக்க முடியும்?***

கிளிநொச்சி மாவட்டத்தில் அழகியல்பாடங்களுக்கு ஏற்கனவே ஆசிரியர்கள் குறைந்த அளவில் உள்ளதனால் சிறுபாடசாலைகளிலே இந்தப்பாடத்தை நடைமுறைப்படுத்தி விடுகின்றோம். ஆனால் தற்பொழுது நுண்கலைப்பீடத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இடப் பகுதியை, இவர்களால் நிரப்பமுடியாத ஒரு சூழ்நிலையிலே வேறுமாவட்டத்தைச்சார்ந்தவர்கள் அந்த இடத்திற்குச் செல்கின்றனர் இது சம்பந்தமாக மாவட்டமட்டத்தில் அரசாங்க அதிபர் கல்விக்கழகத்தின் ஆகியோருடன் பல நாட்கள் இது பற்றி ஆராய்ந்துள்ளோம்.

கிளிநொச்சிமாவட்டத்தில் உள்ள அழகியல்கலாமன்றத்தினூடாக அழகியல்பாடம் கற்க விரும்பும் மாணவர்களை அழைத்து வேறு மாவட்ட ஆசிரியர்களை அழைத்து, கற்பித்தல் செயற்படுத்துவதன் மூலம் மாணவர்களைக் கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் பங்குபற்றச் செய்யும் முயற்சிகளை செய்துள்ளோம். இது அனைவரது ஒத்துழைப்புகளுடன் இதனை நடைமுறைப்படுத்த முடியும். பரிட்சார்த்தமாக இந்தமுயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். 2007 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக் கழகத்தில் ஏற்படுகின்ற அழகியல் பாடத்திற்கான வெற்றிடத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய மாணவர் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும் வகையில் எமது கல்விச் செயற்பாடுகளை நகர்த்தி செல்கின்றோம்.

***"கல்விப்பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் தேர்ச்சி பெறும் மாணவர்களின் விகிதம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. தமிழ் மொழிமூலப் பாடசாலைகள் எல்லாவற்றிற்கும் ஆசிரியர் பற்றாக்குறை பொதுவான விடயமாகும்." இதன் அபிவிருத்திக்கு கணிதவளநிலையம், விஞ்ஞானப் பாடத்திற்கான நடமாடும் ஆய்வு கூடம் என்பன ஏன் இதுவரையில் நிறுவப்படவில்லை? அல்லது முயற்சிகள் ஏதாவது எடுக்கப்பட்டுவருகின்றதா?***

ஒப்பீட்டு ரீதியாக எமது மாவட்டத்தின் பரீட்சை பெறுபேறுகள் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் அளவுக்கு திருப்தியாக இருந்தாலும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் பெறுபேறுகள் மிக குறைவாகவே உள்ளன. இதற்கு முக்கிய காரணம் ஆசிரியர்பற்றாக் குறை ஆரம்ப வகுப்புக் களில் ஆங்கிலம், கணிதம் ஆகிய




பாடங்களினை சிறியவகுப்புகளில் கற்பிக்காது விடும்இடத்து இப்பாடத்திற்கான முழுமையான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளமுடியாது. கிட்டத்தட்ட 50பாடசாலைகளில் சாதாரண வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதில்20 பாடசாலைகளில் மட்டும் கணித ஆசிரியர்கள் உள்ளனர். அத்தோடு 22 பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர்கள் உள்ளனர்.

இவற்றை நிவர்த்தி செய்ய கணித விஞ்ஞான வளநிலையங்கள் மிகமுக்கியமான ஒன்றாகும். கடந்த காலத்தில் தொண்டமனாறு வெளிக்கள நிலையம் இருக்கின்றபோது அதனுடன் தொடர்புகொண்டு இவற்றை நிவர்த்தி செய்து வந்தோம்.

இங்கு வளநிலையங்களை அமைப்பது தொடர்பாக தமிழீழ கல்விக்கழகம், கல்விப்பேரவை, என்பன தொடர்முயற்சி எடுத்தாலும் அதற்கான நிதி ஒதுக்கீடுகள்

(23 ஆம் பக்கம் பார்க்க)




# படிக்கற்கள்

மலரன்னை

"ஸ்.... என்ன வெய்யில்... என்ன புழுக்கம்...."

சித்தியின் சலிப்புக்குரல். பாடப்புத்தகத்தில் மூழ்கியிருந்த என்னை. திரும்பிப்பார்க்க வைத்தது. என்னுள்ளம் இங்கே புழுங்கித் தவிப்பது அவளுக்கு எங்கே தெரியப்போகிறது.

"கவிதா! நானும் சிந்துவும் கோவிலுக்குப்போட்டுவாறம். வீட்டைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்."

அவளது வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளில் ஆதிக்கம் தூள் பறந்தது. பதிலெதுவும் பேசாமல் அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

மேகவர்ணக் காஞ்சீபுரம் அவளது கால்களுக்குள் அகப்பட்டு சரசரத்தபோது...என் நினைவில் மின்னலென ஒரு பொறி... அ..ஆம்.. அது என் அம்மாவினுடையதுதான். அப்பாவைத்தான் தன் ஆக்கிரமிப்புக்குள் அடக்கி வைத்திருக்கிறளென்றால்... அம்மாவின் உடமைகளும் அவளது ஆட்சிக்குள் அமிழ்ந்துபோய்விட்டன போலும். நினைத்ததும் என்னுடல் தகித்தது.

"அம்மா! பூ ங்காவனத்துக்கு மேகலாவும் சரிதாவும் வாறனெண்டவை அவையோடபோய் ஐஸ்கிறீம் குடிக்க விடவேணும் என்ன..!"

சிந்துவுக்கு ஐந்துவயதுதான் ஆகிறதென்றாலும் ஆடம்பரப்போக்கில் அம்மாவுக்குச் சற்றும் சளைத்தவளல்ல. எனது அப்பாவைப் பங்குபோட்டு. அவரைச்சுருட்டி வளைத்துத் தன் கைக்குள் போட்டுக்கொண்டிருப்பதாலோ என்னவோ எனக்கு அவளை அறவே பிடிக்காது. எதேச்சையாக அவளது கழுத்தை அவதானித்தேன். என் மேனியெங்கும் அனலாகப்பரவியது.

டென்மார்க்கிலிருக்கும் எனது சின்னமாமா. தன் தங்கையின் மகளான எனக்கென்று ஆசையோடு வாங்கி அனுப்பிய அந்த அழகான தங்கச்சங்கிலி அவளது கழுத்தில் மின்னிக்கொண்டிருந்தது.

என்னையறியாமலே எனது பற்கள் நறநறுத்தன ஆக்கிரமிப்பு.... ஆக்கிரமிப்பு... இந்த ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடவே முடியாதா...

என்னைப் பெற்றதாயை நான் இழந்ததும் இந்த ஆக்கிரமிப்பு என்ற போர்வைக்குள்தான். எங்கள் மண்ணை ஆக்கிரமிக்க வந்தவர்களின் அட்டூழியப்போக்கும். அடாவடித்தனமும் என் இதயத்தில் ஆழப்பதிந்துவிட்ட ஈட்டி. சாதாரண ஈட்டியாயிருந்தால் அதனை இலகுவில் பிடுங்கி எறிந்துவிட நினைக்கலாம். ஆனால்...அது என் உயிர் மூச்சையே தன்னுள் அமிழ்த்தி வைத்திருக்கும் பொறியாயிற்றே.

அம்மா...அம்மா...அம்மா...

என் உயிர்மூச்சின் நாதமாய் ஒலித்துக்கொண்டிருக்கும் வார்த்தை அது.

"கீச்...கீச்...."

திடீரெனக்கேட்ட அவலக்குரல் வந்த திசையை நோக்கி என் கால்கள் விரைகின்றன. மதிலுக்குமேலால் தலையை நீட்டி எட்டிப்பார்க்கிறேன்.

வேட்டைக்காரன் ஒருவனது கையிலிருந்த முயலொன்று கால்களை உதறி. உயிருக்குப் போராடியவாறு குரலெழுப்புகிறது. அவனைச் சுற்றி இன்னும் நான்கைந்து பேர் கைகளில் தடிகள் பொல்லுகளுடன் இயமகிங்கரர் போல் நின்று கொண்டிருக்கின்றனர். சுற்று மதிலால் வேலியிடப்பட்டிருந்த அந்த வெளிவளவிற்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்த அந்த வேட்டைக்காரர்களை கண்டு ஒரு கணம் என்னுடலும் உள்ளமும் சிலிர்த்தெழுகிறது. மறுகணம். அவன் கையிலிருந்த முயலை ஓங்கி மதிலுடன் அறையமுற்பட்டபோது... என்னை யறியாமலே என் கண்கள் இறுகமூடிக் கொண்டன.

மரண ஓலம் ஒன்று வானளாவ ஒலித்து நிரந்தரமாய் அடங்கிப்போனது.

இதயம் படபடக்க கால்கள் வெடுவெடுத்து அவ்விடத்திலேயே அமர்ந்து.... நான் மதில்மேல் சாய்ந்து கொண்டேன். எங்கள் வாழ்வில் நடந்த அந்தக் கோரச் சம்பவம் என் கண்முன் விரிந்தது.

குடாநாட்டை சூரியக்கதிர்கள் சுட்டெரித்து ஓய்ந்திருந்த நாட்கள் அவை. தென்மராட்சியில் இருந்து எங்கள் சொந்த வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டதில் ஒரு திருப்தி. மாலை ஆறுமணிக்கெல்லாம் ஊரே 'கப்சிப்' பென அடங்கிப் போய்விடும். அதன்பின் அவர்களது நடமாட்டம் அதிகரிக்கும். சுற்றிவளைப்புகளும். தேடுதல் வேட்டைகளும் அடிக்கடி நடக்கும் சம்பவங்களாகிவிட்டன. இடையிடையே காணாமற்போனவர்களின் செய்தி காற்றோடு கிசுகிசுக்கும். எங்கள் வீட்டிலும் இப்படியொரு சம்பவம் நடக்குமென எவருமே எண்ணிப் பார்த்திருக்க முடியாது.

ஒருநாள் இரவு நடுச்சாமத்தில் வீட்டின் கதவு தட்டப்படும் ஓசைகேட்டு அப்பா. அம்மா. நான் மூவரும் திடுக்கிட்டு விழித்தோம். மீண்டும் கதவு தட்டப்பட்டது. திகிலுடன் நான் அம்மாவை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டேன். அம்மா கைகளைப் பிசைந்தவாறு அப்பாவைப் பார்க்க. அவர்போய் கதவைத் திறந்தார். திறந்ததுதான் தாமதம் அவரைத் தள்ளிக்கொண்டு மூவர் உள்ளே நுழைந்தனர்.

"எல்.ரீ.ரீ. இங்க வந்ததா?"

ஒருவன் விசாரிக்க. மற்றைய இருவரும் 'டோர்ச்' விளக்கில் ஒளியைப் பாய்ச்சி வீடெங்கும் சல்லடை போட்டனர்.

"இல்ல சேர். எங்களுக்கு ஒன்றும் தெரியாது"

அப்பா உளறினார்.

சளாரென அவரது கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. அடியின் தாக்கத்தினால் நிலை தடுமாறியவர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டபோது... மற்றொருவன் துப்பாக்கியின் முனையை அவரது நெஞ்சின்மேல் வைத்தான்.

"ஐயோ! அவரை ஒண்டுஞ் செய்து போடாதையுங்கோ"

இது அம்மாவின் அபயக்குரல். ஓங்கி ஒலித்த அம்மாவின் குரல்கேட்டு அயலவர் எவரும் எட்டிப்பார்க்கவில்லை. அன்றைய நிலைமை அப்படி. எவரும் எட்டிப்பார்த்தால் முட்டி உடைபட்டு மூச்சை இழக்கவேண்டிவரும்.

சடாரென ஒருவன் அம்மாவைப் பிடித்து இழுத்தான். நான் அழுதவாறு அம்மாவை இறுகப்பற்றிக் கொண்டேன். ஒருவன் அப்பாவைத் துப்பாக்கிமுனையில் வைத்திருக்க மற்றைய இருவரும் அம்மாவைத் தரதரவென இழுத்துப்போயினர். படலையை அடைந்ததும் அம்மாவிடமிருந்து பிரித்து என்னைத் தள்ளிவிட நான் மண்டை அடிபட விழுந்துபோனேன்.

"ஐயோ! என்ரை பிள்ளை."

அதுதான் நான் அம்மாவிடமிருந்து கேட்ட கடைசிக்குரல். மயக்கம் தெளிந்து விழித்துப்பார்த்தபோது. அப்பா மட்டும் அருகிலிருந்து அழுதுகொண்டிருந்தார். ஒன்பது வயதுதான் என்றாலும் என்னால் நிலைமையை ஓரளவுக்குப் புரிந்துகொள்ளமுடிந்தது. கதறியழுவதைத்தவிர வேறுவழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அப்பாவின் நிலையும் அதுவாகத்தானிருந்தது.

அம்மாவின் நினைவோடு அப்பாவும் நானும் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தோம். அம்மாவை இழந்து சரியாக ஒரு வருடம்கூட ஆகவில்லை. ஒரு நாள் பர்வதப்பாட்டி அப்பாவிடம் வந்தாள்.

"தம்பி! நடந்தது நடந்து போச்சு. இனி நீ தனிய இருந்து உந்தப் பொம்பிளைப் பிள்ளையை என்னெண்டு வளர்க்கப்போறாய். உனக்கென்ன வயசேபோயிட்டுது. நீ சரி எண்டு சொல்லு. உனக்குப் பொம்பிளை நான்கொண்டு வாறன".

சொல்லோடு நிற்கவில்லை எப்படியோ அப்பாவையும் சம்மதிக்க வைத்து தனது உறவினரான சித்தியை அப்பாவுக்கு இரண்டாம் தாரமாக்கிவிட்டாள். அகம்பாவம் பிடித்த அவளால் நான் படும் துன்பம்....அப்பப்பா... வேண்டாம் அந்த வேதனை. அது என்னுடனே அமிழ்ந்து போகட்டும். "தங்கச்சீ!"

சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த என்னை ஒரு இனிய குரல் இவ்வுலகுக்கு மீட்டது. அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தேன்.

"தங்கச்சீ! றஞ்சிதா எண்டு ஆரும் இந்த ஒழுங்கைக்க இருக்கினமே?"

நீளக்கால் சட்டை. சட்டை அணிந்திருந்த அந்த அக்காவைப் பார்த்ததும் என்னுள்ளத்தில் இனந்தெரியாத பரவசம் ஆட்கொண்டது.

"எங்கட வீட்டுக்குப் பின்வீடுதான். வாங்கோ. கூட்டிக்கொண்டு போய்விடுறன்"

அக்கா. என்னுடன் இணைந்து நடந்து வந்தபோது. காலமெல்லாம் அவளோடு நடக்கவேண்டும் என்று ஓர் உந்துதல் என்னுள் தோன்றியது.

"தங்கச்சீ! எத்தினையாம் வகுப்புப் படிக்கிறியள்?"

"ஓ.எல்.றஞ்சி அக்கா உங்களுக்குச் சொந்தமோ?"

அவவுடன் நிறையக் கதைக்க வேண்டும் போலிருந்தது. கேள்விக்கணையொன்றைத் தொடுத்தேன்.

"இல்லை. அவவும் நானும் ஒன்றாய் படிச்சநாங்கள்" அதற்கிடையில் றஞ்சி அக்காவின் வீடு சமீபித்துவிட்டது. குரல் கொடுத்தேன்.

"றஞ்சி அக்கா! றஞ்சி அக்கா!!"

வெற்று நெற்றியும். வீங்கிய முகமுமாக றஞ்சி அக்கா வந்து எட்டிப்பார்த்தா. அவவைப் பார்த்த எனக்கு என்னவோ போல் இருந்தது.

"அக்கா! பார்த்தீபன் எங்கை?"

"உங்கை வீட்டிலைதான் அழுது கொண்டு இருக்கிறான்"

"ஏன் அக்கா அடிச்சநீங்களே"

"இல்லை கவிதா உங்கை விளையாடப்போன இடத்தில... பர்வதம் மாமி அவனை 'அறுதலி வளர்த்த பிள்ளை' எண்டு பேசிப்போட்டாவாம்"

அவவின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்தோடியது. நிலைமையைச் சமாளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு.

"றஞ்சி அக்கா! உங்களைத் தேடி ஒரு அக்கா வந்திருக்கிறா அதுதான் வீடுகாட்ட வந்தநான்"

சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாக வீடு வந்து சேர்ந்தேன். அதற்கிடையில் சித்தி வந்துவிட்டாள் அவளிடம் அகப்பட்டு நான் கண்ணீர்விடவேண்டி வந்துவிடும். எனக்கு றஞ்சி அக்காவை நினைக்க அனுதாபம் பொங்கியது. அவவின் கணவனும் எனது அம்மாவைப்போல அந்த ஆக்கிரமிப்பாளரின் கைகளில் அகப்பட்டு. காணாமற்போனவர்தான். றஞ்சி அக்காவிற்கு ஏதோ சுகயீனமென்று அவர் தனது அம்மாவின் வீட்டிலிருந்து இரண்டு உணவுப் பொதிகளைக் கொண்டு வந்ததுதான் அவர் செய்த குற்றம். எல்.ரீ.ரீ.க்கு சாப்பாடு கொண்டு போனதாகச் சொல்லி அவரையும் கொண்டுபோய்விட்டார்கள்.

பார்த்தீபனுக்கு அப்பாவைத் தெரியாது. அவன் வயிற்றிலிருக்கும் போது இந்தச்சம்பவம் நடந்துவிட்டது. றஞ்சி அக்கா இப்படி எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியில் எதிர்நீச்சல் போட்டு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறா. என்னுடைய அப்பாவின் மீது அனுதாபம் காட்டி. அவருக்கு வலுக்கட்டாயமாக ஒரு கலியாணத்தைச் செய்து வைக்க முன்நின்ற இந்தச் சமுதாயம் . றஞ்சி அக்காவைப்பற்றியோ. அவவின் குழந்தையைப்பற்றியோ எள்ளளவும் கவலை கொள்ளவில்லை ஏன்.?

என்ன தான் முற்போக்குவாதம் பற்றிக்கதையளந்தாலும் இங்கு பெண்ணுக்கு ஒரு நீதி. ஆணுக்கொரு நீதி இது தான் இன்றைய நடைமுறையில் நான் கண்ட உண்மை ஆனால் இந்த அக்காவைச்சந்தித்த பிறகு... என்னுள் ஒரு நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்திருக்கிறது. இந்தச் சமுதாயத்தின் கணிப்பிலிருந்து பெண் மாறுபட்டவளாய் தன்னை ஒரு நேர் வழிப்பாதையில் இட்டுச்செல்ல முடியும். என் இதயத்தின் அடித்தளத்தில் ஆழப்பதிந்திருந்த ஈட்டியின் வடு இலட்சிய வேட்கையாக வீறுகொண்டெழுந்த போது ஆக்கிரமிப்பை அழித்தொழிக்க வேண்டுமாயின் நாம் வலுவுள்ளவர்களாக எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். பெண்கள் மனத் துணிவுடன் அணிதிரண்டால் சமுதாயத்தின் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறலாம். ஆண். பெண் என்ற வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்று திரண்டால் ஆக்கிரமிப்புக்களை அழித்தொழித்து சுதந்திரக்காற்றில் சுகித்திருந்து சுபீட்சமடையலாம். இப்படி என்னுள் பல சிந்தனைகள் உயிர் பெறத்தொடங்கின.

றஞ்சி அக்கா வீட்டிற்கு அடிக்கடி அந்த அக்கா வந்து போய்க் கொண்டிருந்தா. அவ்வேளைகளில் அவவைச் சந்தித்து அளவளாவுவதில் எனக்கொரு தனி இன்பம் கிடைத்தது. இவ்வளவு காலமும் கிழக்கு மாகாணத்திலும் வன்னியிலுமாக இருந்து எதிரியின் ஆக்கிரமிப்புகள் பலவற்றை முறியடிப்பதில் பங்கேற்று. தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் தன்னுடைய சொந்த ஊருக்கு அவாவந்திருப்பதாக அறிந்தேன். அவாவின் உடலெங்கும் பல விழுப்புண்களை ஏற்ற வீரத்தின் சின்னங்களைக் கண்டு நான் மெய்சிலிர்த்துப்போனேன். இத்தனை நாள் என்னுள் மூண்டிருந்த இலட்சியத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

தக்க தருணம் பார்த்து ஒரு நாள் நான் பாடசாலை மூடியதும் அவர்களது இருப்பிடத்தைத் தேடிப்போய் எனது நிலைப்பாட்டை அவர்களுக்கு விளக்கினேன். அங்குள்ள அக்காமார் அனைவரும் என்னை அன்போடு அரவணைத்து அளவளாவினார்கள். இத்தனை காலமும் கொதித்துக் கொண்டிருந்த என்னிதயம் குளிர்ந்தது. பொறுப்பாளராயிருந்த அக்கா என்னிடம் வந்தா.

"தங்கச்சீ! கல்விதான் எங்கட மூலதனம் ஆக்கிரமிப்பாளர் எங்களுக்குக் கல்வியில பாகுபாடுகாட்டியதாலயும்தமிழ் இனத்தை நசுக்க வேண்டுமென நினைத்ததாலயும்தான் எங்கட இளைஞர்கள் யுவதிகள் விழிப்புணர்வு பெற்று இப்படியான ஒரு போராட்டத்தையே முன்னெடுத்தார்கள். உம்முடைய தாகம் எங்களுக்குப்புரியுது. உமக்கு இப்ப பதினைந்து வயது தானே. இப்ப நீர் போய் கவனமாய்ப்படிக்க வேணும். காலம் ஒரு நாள் உமக்குச்சாதகமாகக் கனிந்து வரும்போது. நீர் உம்முடைய இலட்சியப்பயணத்தை எங்களோடு தொடரலாம்."

அவ சொன்னதைக்கேட்டு எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. "நான் என்ன சின்னப்பிள்ளையே எதையும் சாதிக்கும் மனபக்குவம் எனக்கும் இருக்குது" சொல்லத்தான் நினைத்தேன். ஆனால் அந்த அக்காவை மீறிக்கதைக்கும் மனோவலிமை எனக்கிருக்கவில்லை.

மறுநாள் பாடசாலையில் வைத்து அப்பாவிடம் என்னை ஒப்படைத்து விட்டு எனக்கு அனுசரணையாக முதுகில் தடவி விட்டுப்போனா அந்த பொறுப்பாளர் அக்கா.


ஏனோ அவவின் செய்கை எனக்கு ஆறுதலைத் தந்தது.

வீட்டிற்குப் போகும் வழியில் அப்பா என்னிடம் கேட்டார்.

"கவிதா! ஏன் பிள்ளை இப்படியொரு முடிவு எடுத்த ந"

"அப்பா! என்னுடைய அம்மாவுக்கு நடந்த கதி இனிமேலும் இந்த மண்ணில நடக்கக்கூடாது. இதுதான் என்னுடைய இலட்சியம். இப்ப நடந்த இந்தச்சம்பவம் எனது இலட்சியப் பயணத்துக்கு ஒரு தடைக்கல் ஆகிவிட்டது என்று மட்டும் நினைக்காதையுங்கோ. நிச்சயமாக இது ஒரு படிக்கல் தான். என்னுடைய இலட்சியம் ஈடேறும் வரை இப்படியான படிக்கற்களை நிதானத்துடன் நான் தாண்டிக்கொண்டேயிருப்பன்."


அப்பா பதிலெதுவும் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தார். அவரது முகத்தைத் திரும்பிப்பார்த்தேன். கண்கள் கலங்கியிருந்தன.



## ஓட்டுநர்



காவற்துறை:- மணிக்கு 80 மயில்போனது குற்றம் இப்படி ஓடக்கூடாது.
ஓட்டுநர்:- நான் வாகனத்தை எடுத்து இன்னும் பத்து நிமிசமாகேல்லயே.




நீர் எங்கள் பொருண்மிய வளங்களில் முதன்மையானது என்பது எங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடையம்தான். அது மாத்திரமல்ல மிகப் பாதுகாக்கவேண்டி ஒரு பொருளுமாகும். அத்துடன் எதிர்காலத்தில் கிடைக்காமல்/அருந்தலாகப் போகும் ஒரு பொருளாகவும் கருதப்படுகிறது.

மனித வாழ்க்கையில் நீர் பிரதானமானது என்பதைவிட மனிதவாழ்வுக்கு ஆதாரமான உணவு உற்பத்திக்கும் நீர் உயிரானது.

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

இத்தகைய பின்னணியில் நீரை நாங்கள் எவ்விதம் பாவிக்கின்றோம், பாதுகாக்கின்றோம், சேமிக்கப்போகின்றோம் என்பதெல்லாம் ஒரு அர்த்தமுள்ள கேள்விகள் ஆகின்றன.

மனிதர்கள் நாளாந்தம் நீரைப் பாவிக்கும் அளவினை விட அவர்கள் வீணாக்கும் நீரின் அளவு அதிகமானது என்பது கவலைக்குரிய விடயமே.

அவ்வாறே விவசாயிகளும் தங்களதுப் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்குப் பாவிக்கும் நீர்கூட தேவைக்கதிகமாகப் பொருத்தமில்லாத முறையில் வீணாக்கப்படுகின்றது.

இவ்வாறு பயிர்களுக்கு விடப்படுகின்ற நீரின் விரையத்தை தடுப்பதற்கு/குறைப்பதற்குப் பொருத்தமான சில நடவடிக்கைகளை கைக்கொள்வது அவசியமாகும்.

நிலத்துக்குச் சரிவுக்குக்குறுக்காக உழவு செய்தல், பாத்திகள் அமைக்கும்போது நிலத்தின் சரிவுக்கு ஏற்ப அமைத்தல், பாத்திகள் சீராக நீர்ப்பாய பாத்தியின் உட்பரப்பை சமப்படுத்தி நீர் பரவிச் செல்வதற்கு ஏற்றவாறு சமமாகப் பாத்திகள் அமைத்தல், பசளை நீர் தட்டுப்பாடான இடங்களிலும் கிணற்று நீர்ப்பாசனப்பகுதிகளிலும் சிறுசிறு பாத்திகளாக அமைத்தல், ஒவ்வொரு பயிர் இடைவெளியிலும் வாய்க்கால்கள் அமைப்பதைவிட இரண்டு பயிர்களுக்கு இடையில் வாய்க்கால் அமைத்து இருமருங்கிலும் நீர் செல்லக்கூடிய அளவில் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் பயனுள்ள நடவடிக்கைகளாக அமையும் எனச் சொல்லப்படுகின்றது.

(சி-9609)

## பொருளாதார வளர்ச்சிக்கு வவுனிக்குளம்

முல்லை மாவட்டத்திலே மேற்குப்பக்கமாக மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள பெரிய குளங்களில் ஒன்றுதான் வவுனிக்குளம். இக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவின் கீழ் உள்ளடங்கும்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் விவசாய விளைநிலங்களில் 6897 ஏக்கருக்கு நீரை வழங்குகிறது. இதன் மூலம் 2300 குடும்பங்கள் முழுப்பயன் பெறுகின்றன. ஆனாலும் இந்த மக்களோடு இணைந்து இக்குளத்து நீரைக் கொண்டு சுமார் 5000 குடும்பங்களுக்கு மேல் பயன்பெறுவது குறிப்பிடத்தக்கது.

வட கிழக்குப் பகுதியில் 50 வீதமான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அதற்கேற்ற வகையில் நில அமைப்பும் நீரின் வளமும் இங்கு போதியளவு உண்டு. இவ்வாறு நிலவளமும் நீர் வளமும் கொண்டதுதான் வவுனிக்குளம்.

1950 ஆம்ஆண்டு காலப்பகுதியில் பாலியாற்றுநீரைத் தேக்கி அணைக்கட்டு அமைக்கப்பட்டு வவுனிக்குளம் உருவாகியது. பின்னர் 1983 - 1985 ஆம் ஆண்டுகளில் புனரமைப்புச் செய்யப்பட்டு வடிவமைக்கப்பட்டது. இக்குளத்தின் நீரேந்துப் பிரதேசப் பகுதியில் பல சிறிய குளங்கள் உள்ளன.

மாரி காலத்தில் பெய்யும் மழையினால் சிறிய குளங்கள் வான்பாயும் நீரும் வவுனிக்குளத்தை வந்தடையும். இதனால் நீர்ப் பற்றாக் குறை ஏற்படுவது குறைவு. 2மைல் 3100 அடி நீளமான அணைக்கட்டு உட்பக்கம் பல பகுதிகள் ஆரம்பத்தில் சிமெந்துக்கட்டு அமைத்து அணைக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு அரிப்பு ஏற்படுவதைத் தடுத்து இருந்தது. பின்னர் மேலும் பாதுகாப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீடு இல்லாததாலும் சிமெந்து மூலப்பொருட்கள் கொண்டு வரத் தடை ஏற்பட்டிருந்தாலும் சீரான முறையில் பராமரிப்பு இல்லாததால் அணைக்கட்டுச் சுவர் அரிப்பு ஏற்பட்டு இடிந்து வீழ்ந்து பாதிப்பை ஏற்படுத்தியது. இதே போன்று வாய்க்கால் கட்டு மானங்களும் இடிந்து சிதைவடைந்து காணப்படுவதால் நீர் விநியோகம் விரையமாகிறது. விரையமாகும் நீர், கழிவு வாய்க்கால் மூலமாக மீண்டும் பாலியாற்றுடன் கலந்து இந்நீர் வீணாகக் கடலையடைகிறது.



நீர் விரையமாவதால் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்கை அடைய முடியாமல் மக்கள் கஷ்ரப்படுகின்றனர்.

இக்குளத்தில் மேலும் ஒரு சிறப்பு என்னவென்றால் வலது கரை வாய்க்கால் பகுதிக்கு 10 ஏற்று நீர்ப்பாசன பம்பிகளும் இடது கரை வாக்கால் பகுதிக்கு 6 ஏற்று நீர்ப்பாசனப் பம்பிகளும் பொருத்தப்பட்டு இதன் மூலம் வலது கரை 551 ஏக்கரிலும் இடதுகரை 286 ஏக்கரிலும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை மேற்கொளப்பட்டது. இதன் மூலம் மக்களுக்குக் கணிசமான அளவு வருமானம் கிடைத்தது. கடந்த காலங்களில் தகுந்த பராமரிப்பு இல்லாத காரணத்தால் நீர்ப்பாசனப் பம்பிகள் யாவும் செயலிழந்தன. இதை நம்பி இருந்த மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தொடர்ந்தும் இக்குளம் புனரமைப்புச் செய்யப்படாமல் இருக்குமானால்; விவசாயத்தை நம்பி இருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் வறுமைக்குத் தள்ளப்படும். அத்துடன் கடும் மழை வெள்ளம் ஏற்படும் போது ஆபத்து நிலை ஏற்பட இடமுண்டு. மக்கள் இடம் பெயர வேண்டிய நிலைக்கும் ஆளாக வேண்டிவரும்.

இம்மாவட்டத்தின்பொருளாதாரத்தின் ஒரு பகுதி வீழ்ச்சி அடையும். கால் நடை வளர்ப்பு, நன்நீர் மீன்பிடித் தொழில் என்பன முற்றாகப் பாதிக்கப்படும். எனவே தற்போது ஏற்பட்டுள்ள இயல்பு நிலையைக் கருத்தில் கொண்டு இக்குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் புனரமைப்புச் செய்ய முன்வரவேண்டும்.

இக்குளத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்கு 125.0 மில்லியன் ரூபாவரை செலவு ஏற்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்குளம் புனரமைப்புச் செய்யும் பட்சத்தில்; விவசாயத்தை நம்பி வாழ்ந்து வந்த மக்கள் மீளக்குடியேறித் தமது விவசாயச் செய்கையில் ஈடுபடுவர், வாய்க்காலில் நீர் பாய்வதால் கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்து காணப்படும். மரக்கறிப் பயிர், சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட வாய்ப்பளிக்கும். நன்நீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குக் கூடிய வருமானம் கிடைத்து அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும், அடுத்து கால்நடை வளர்ப்போரும் கால்நடைகளை வளர்த்து தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த ஏதுவாகின்றது.

சிவகமலா

## இதயங்கள் எங்கும்.....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீலண்ணே... என்ர சீலண்ணே! என்று கத்திக் குளறியபடி கண்ணை மூடிக்கொண்டு சுடுகிறான்.

ஐயோ! இது என்ன கொடுமை! எங்களது இலட்சியப்போராட்டத்தில் இதுவும் ஒரு நிகழ்வா. என கதறி அழுகிறான். அதே நேரத்தில் சீலனின் உயிர் மண்ணை முத்தமிடுகிறது. சீலனின் உதிரமும், உயிரும், உடலும் தாயக மண்ணில் சங்கமிக்கின்றன நேற்றுவரை இந்த மண்ணின் மைந்தனாக, வீரத்தளபதியாக இருந்த எங்கள் வீரச்சீலனின் உயிர் தமிழீழக்காற்றுடன் சங்கமிக்கின்றது.

சீலனின் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு மேலும் சில அடிகள் எடுத்துவைத்த போது எதிரியை தாக்கிக் கொண்டிருந்த ஆனந்தும் குண்டடிபட்டு விட்டான் எதிரியின் குண்டுபட அவனும் மண்ணில் சாய்கிறான். தனது தளபதி எந்தவழியில் சென்றாரோ அதேவழியில் அவனும் செல்ல திட்டமிடுகிறான், அதற்கேற்ப என்னையும் சுட்டுவிட்டுப் போ. என்கிறான் ஆனந். இறுதியில் அவன் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்பதற்காயும், உயிரிலும் மேலான ஆயுதங்களைப் பாதுகாப்பதற்காகவும், ஆனந்தை சுட்டுவிட்டுப் பின்வாங்குகிறான்.

விடுதலைப்புலிகளின் மானத்தையும், தூய்மையையும் காத்திட அந்த வேங்கைகள், வீரத்தின் இலட்சினையாய், வீரமரணம் அடைந்து உலகின் தமிழினத்தின் மானம் காத்துவிட்டார்கள். தாயக விடுதலைப் போராட்டத்தில், சீலன் வித்தியாசமானவன். அவனது நாவினில் எப்போதும் உச்சரிக்கப்படுவதெல்லாம் வீரத்தின் ஒலிகளேயாகும். விடுதலைப் போராட்டத்தின் இக்கட்டான நிலைகளிலெல்லாம். முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து வெற்றிகள் பல பெற்று தந்திருக்கிறான். தலைவர் அவர்கள் இந்தியாவில் இருந்த காலத்தில் தமிழீழத்திலுள்ள அனைத்துப்போராளிகளையும், விசுவாசமும், கடமையுணர்வும், வீரமும் உள்ளவர்களாகவே வளர்த்து சிங்கள எதிரிமீதான பல தாக்குதல்களைச் செய்து வெற்றியும் கண்டான்.

லெப். சாள்ஸ் அன்ரனி (சீலன்) சிறுவனாக இருந்தபோது. தனது 18ஆவது வயதில் மாணவனாக இருந்தபோது. 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனச் சட்டத்தை எதிர்த்துத் தனது பாடசாலையில் சிங்களக்கொடியவர்களின் சிங்களக்கொடி ஏற்றும்போதே எரியும் படி தனது நுட்பமான அறிவைப் பயன்படுத்தி எரியச்செய்து, ஒட்டு மொத்த தமிழினத்தின் எதிர்ப்பைக் காட்டினான். அதன் பின் சீலன்



கைது செய்யப்பட்ட போது. சொல்ல முடியாத சித்திரவதைகளின் போதும் எவரையும் காட்டிக்கொடுக்காது, தனது மனஉறுதியை வெளிப்படுத்தினான். அந்த உறுதியே சீலனை தமிழர்களுக்கான தாயக விடுதலைக்கு உந்தித்தள்ளியது. லெப். சீலன் அசாத்தியமான துணிச்சல்மிக்கவன் எனவேதான் சிங்களப் படைகளை இடைவிடாது தாக்கிக் கொண்டிருந்தான் 1981ஆம் ஆண்டு சிங்களப்படைக்கெதிரான முதலாவது கெரில்லாத்தாக்குதலை செய்திருந்தான். இதன்பின் 1982இல் பொன்னாலைப் பாலத்தில் வைத்து சிங்களக் கடற்படைக் கெதிரான தாக்கு தலைச் செய்தான். அதன்பின் ஈழப்போராட்டத்தின் வரலாற்றில் முதன் முதலாக 1982இல் சாவகச்சேரி பொலிஸ் காவல் நிலையத் தாக்குதலையும் சீலன் தலைமையிலான புலிகளே வெற்றி கண்டனர்.இந்தச் சண்டையில் பெருமளவான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

1983ஆம் ஆண்டு மே மாதம் கந்தர்மடச்சந்தியில் எதிரியுடன் நேருக்குநேர் மோதி வெற்றிகண்டான். இரவுபகல் பாராது, ஊண் உறக்கம் பாராது உழைத்திடும் சீலன் எப் போதுமே எளிமையானவனாகக் காணப்படுவான், ஆனால் தனது இலட்சியப் பற்றுறுதியில் மிகவும் தெளிவாகவே காணப்படுவான். எப்போதும் எதிரியை எப்படித்தாக்குவது என்பதிலேயே தனது சிந்தனையைக் கொண்டிருக்கும் சீலன். திட்டங்கள் தீட்டுவதிலும், அதை திறம்பட நடைமுறைப்படுத்துவதிலும் செயல்வீரனாகவே இருந்தான். தனது உயிரை அற்பமாக நினைத்து தலைவனின் கனவை நனவாக்கிடவே தன்னையும் சுட்டுவிட்டு தனது ஆயுதத்தைக்காப்பாற்றச் சொன்னான் . ஆரம்பகாலகட்டத்தில் ஆயுதம் என்பது மிகவும் கடினமான விடயமாகும். பல உயிர்களைக் கொடுத்தே ஒருசில ஆயுதங்களைப் பெறமுடியும். எனவேதான் ஆயுதத்தின் பெறுமதியைத் தனது உயிரைவிட மேலாக நினைத்துத் தன்னைச் சுட்டுவிட்டுஆயுதத்தை கொண்டுபோ... என சொல்லி தனது சாவிலும் சரித்திரம் படைத்தான் சீலனின் பற்றையும், ஓயாத உழைப்பையும் பார்த்ததனால் தான் தலைவர் சீலனுக்கு இதயத்தில் முதல் இடம் கொடுத்து இதயச் சந்திரன் என நாமமிட்டார், சாவிலும் சரித்திரம் படைத்த அந்த சரித்திர நாயகன் என்றென்றும் தாய்மண்ணில் உயிரோட்டமாய் இருந்து, இமயத்தின் இதயத்தில் இதயச்சந்திரனாயிருப்பான்.

## புலனாய்வு........

(13 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இப்படியாக வளர்ச்சி பெற்ற புலனாய்வு அமைப்புக்கள் அனைத்தும் தம் எதிரி நாட்டு உயர் அதிகாரிகள் அமைச்சர்கள் பிரபல வர்த்தகர்கள் முதலியோர்மீது கவனம் செலுத்தி அவ் உயர்மட்டத்தில் தம் முகவர்களை அமர்த்தியும் கீழ் மட்டத்தில் உள்ளோர்களை முகவர்களாக அமர்த்தியும் தகவல் சேகரிப்பை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றன.

அவை அந்நிய நாட்டவரின் பல நோக்கங்கள் திட்டங்கள் மறைமுக அச்சுறுத்தல்கள், என்பனபற்றிய தகவல்கள் திரட்டுகின்றன. அத்துடன் நின்று விடாது அரசியல் நடவடிக்கைகளிலும் ஊடுருவி ஆராய்ந்து பார்க்கின்ற பணிகளிலும் ஈடுபட்டு தேவை ஏற்படும் போது மறைமுகத் தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றன.

இவ்விடயங்கள் அனைத்தும் வகுத்துத் தொகுத்துப்பார்த்தால் ஒரு நாட்டின் தேசிய புலனாய்வு அமைப்பென்பது குறித்த நாட்டின் இரு கண்களாகவும் இருகாதுகளாகவும் நுண்ணறிவு படைத்த கட்டமைப்பாகவும் இருக்கவேண்டும். அப்போது தான் எதிரிநாட்டவரின் புலனாய்வுப் போரை எதிர்கொள்ளவோ, அல்லது எதிரி நாட்டின் மீதான புலனாய்வுப் போரைத் தொடக்கவோ முடியும். இப்பணிகளில் முகவர்கள் தான் புலனாய்வுச் சேவையை நிர்ணயிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

ஆதலால் ஒரு தேசத்தின் புலனாய்வாளன் அர்ப்பணிப்புக் கொண்ட ஒரு போர்வீரனாகவும் பொதுமகனாகவும் செயற்படுகின்றான்.இவ்வாறான புலனாய்வுப் பணியைச் செய்து முடிப்பதில்தான் பங்குகொள்வதை ஒரு பெரும் பேறென்று நம்புகின்றான். இவ்விதம் ஒரு தேசத்தின் பிறப்புரிமையான புலனாய்வுப் பணியில் சேர்ந்ததற்காகப் பெருமை அடைகின்றார். என உலகப் புலனாய்வு வல்லுனர்களின் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறான பண்பைக் கொண்ட தமிழ் தேசிய புலனாய்வாளர்கள் பலர் செயலாற்றி வந்துள்ளார்கள், வருகின்றார்கள், இவர்களது அர்ப்பணிப்பு நிறைந்த உழைப்பு தமிழீழத் தாயகத்திற்கு பலம் சேர்ப்பதோடு சிறிலங்கா தேசத்திற்கு அச்சுறுத்தல்களையும் கொடுத்துள்ளன.

அத்தகைய வளர்ச்சியை பெற்றுவரும் தமிழீழ தேசத்தின் புலனாய்வு அமைப்பை மேலும் நவீனமான பலம் பொருந்திய அமைப்பாகக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் உள்ளது. ஆதலால் தமிழர்களின் கண்களும், காதுகளும், மூளைவளங்கள் தமிழ் தேசிய புலனாய்விற்காகப் பங்காற்றும் போது தான் தேசிய நலன்கள் பாதுகாக்கப்படும்.

### எலிக்கு நல்லது



**ஒருவர்:-** ஐயா இந்தப்பூனைய வீட்ட கொண்டு போங்கோ எலிக்கு நல்லது எண்டு சொன்னியே. அது எலிக்கு கிட்டயும் போகுதில்லை.
**மற்றவர்:-** அதுதான் சொன்னனே எலிக்கு நல்லம்.




பெண்களை விட ஆண்களின் தொகை குறைந்துகொண்டு போகிறது. பொதுவாகப் பெண்களை மெல்லியலார் என்று கூறினாலும், பிறப்பு, நோய் முதலிய சமுதாயப் புள்ளி விபரங்கள் உண்மையில் ஆண்களே மென்மைத்தன்மை படைத்தவர்கள் எனக் காட்டுகின்றன.

உடற் கூற்றைப் பொறுத்தவரை ஆண்குழந்தைகளைக் காட்டிலும் பெண்குழந்தைகள் அதிக வன்மை படைத்திருக்கிறாா்கள் என்பது நன்கு விளங்கும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பெண் இயல்பு நல்ல எதிா்ப்பு சக்தியைப் பெற்று வளா்ந்து வந்திருக்கிறது. மனித இனம் நிலைபெற்று வாழவேண்டுமானால் ஆண்களைவிடப் பெண்களின் உயிா் முக்கியமானது என்பதை இயற்கையே அறிந்து கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.

உயிா்நூல் வல்லுநா்களின் ஆராய்ச்சிகள் ஆண்களின் இறப்பு விகிதம் அதிகமானது எனக் கூறுகின்றன. பிறப்பு நோய் முதலிய சமுதாய நிலைப் புள்ளிவிபரவியல் ஆய்வுகள் பொதுவாகப் பெண்களை விட ஆண்களின் சாவுவிகிதம் இரண்டு மடங்கு அதிகமானதே எனக்கூறுகிறது. இந்தச் சாவுவிகிதம் வயது 15 - முதல் 19லிருந்து 20 - 29முடிய இருப்பதுபோல தொடா்ந்தும் உள்ளது.

360 அண்டுகளின் முன்னா்கூட பெண்களைவிட ஆறுசதவிகிதம்

# மெல்லியலார் யார்?



அதிகமாக ஆண்குழந்தைகள் பிறப்பதாகக் காணப்பட்டது. இவ்விகிதம் இப்படியே இருந்திருக்குமானால் ஆண்பெண் எண்ணிக்கையை சமமாக்கியிருக்குமோ? ஆனால் இது குழவிப்பருவம், பிள்ளைப்பருவம், வாலிபப்பருவம் ஆகியவற்றில் குறைந்து கொண்டே சென்று இருபது முதல் இருபத்துநாலு வயது வரை ஆண்பெண் இருபாலாரும் சம எண்ணிக்கையை உள்ளவா்களாக இருக்கக் காண்கிறோம்.

ஆண்களின் இந்த இறப்பு வீதம் குடும்பவாழ்க்கையைக் குலைத்து விடுகிறது. ஒருகுடும்பத்தில் கணவன் இறந்து விடுதல் என்பது பெரியதொரு நஷ்டமாகும். கணவனில்லாமல் ஒருதாய் பிள்ளைகளை வளா்ப்பது துன்பமாகும். ஒரு கைம்பெண்ணின் வாழ்க்கை கொடூரமானது. அவள் மறுமணம் செய்து கொண்டு குடும்பத்துக்கு ஒரு சிறியதந்தையைக் கொண்டு வருவதற்குரிய வாய்ப்புகள் மிக அரிது.

கணவனை இழந்தவா்கள் தொகை அதிகமாகவும் மனைவியை இழந்தவா்கள் தொகை குறைவாகவும் இருக்கக் காண்கிறோம். மனைவியை



இழந்த ஆண் விரைவில் மறுமணம் செய்து கொள்கிறான். பெண் அப்படி செய்வது சாத்தியமில்லை. இதன் தாக்கமாக ஏராளமான குடும்பங்கள் உடைந்து போவதுடன் பெண்கள் நியாயமான முறையில் குடும்பத்தை நடாத்த முடியாமலும் போகிறது.

போா் ஒன்றுதான் ஆண்களின் அதிகப்படியான இறப்புக்குக் காரணம் என்று நாம் நினைப்போம். ஆனால் இதுவும் ஒன்றுதான் ஏனையகாரணங்கள் அதிகம் போாில் பங்குபற்றாமலே 40 வயதுக்கு மேற்பட்டஆண்களின் சாவுவீதமும் இதேயளவில் இருக்கிறது காரணம்.

பெண்கள் உடலைப் பேண எடுக்கும் முயற்சிகளில் ஆண்களாகிய நாம் எதுவும் எடுக்கவில்லை என்பதாகும். போதைப்பொருட்கள், புகையிலை, சாராயம், புகைபிடித்தல் என எல்லாம் வைத்திருக்கிறோம். பெருங்குடிப்பழக்கமும், போதைப்பொருட் பழக்கமும் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் பெரும் இழப்பை உண்டாக்குவதுடன் குடும்பத்தில் பகைமையை உண்டாக்கி விவாகரத்துக்களையும் உண்டாக்கக் காரணமாகிறது.

இளைஞா்களிடையே புகைபிடிக்கும் பழக்கம் வேகமாக அதிகரிக்கிறது. இதனால் நுரையீரல் புற்றுநோய் போன்ற உயிராபத்து நோய்கள் ஏற்படுகின்றன. ஒரு பெண்ணுக்கும் ஆணுக்குமிடையேயான சராசாி வயது வித்தியாசம் ஏழுமுதல் எட்டுவரையாகும். ஆண்மக்களின் வயதைக் கூட்ட வேண்டும் என்பதால் பெண்மக்கள் பால் அக்கறையில்லை என்பதல்ல. பகல் முழுதும் அலுவலகங்களில் கடமைசெய்து வீட்டுவேலைகளையும் பொறுப்பேற்று குழந்தைப்பேற்றுச்சுமைகளையும் தாங்கும் பெண்கள் நம்மரியாதைக்குாியவா்கள். வீட்டின் பாரத்தையும் சமுதாயபாரத்தையும் சுமக்கும் ஆண்கள் நம்மதிப்பைப் பெறுகிறாா்கள். இந்த சாவுவிகிதத்தைப் பற்றியும் கெட்டபழக்கங்களிலிருந்து விடுபடமுடியாமல் தவிப்பதிலும் இவா்கள் "மெல்லியலான்" என்று சொல்லத் தகுதிபெறுகின்றனா்.

ஜெயகாந்தன்.

# அவரைக்காய் இறைச்சிக்குழம்பு




| | |
|---|---|
| இறைச்சி | - 250 கிராம் |
| அவரைக்காய் | - 125 கிராம் |
| கசகசா | - 2 கிராம் |
| பூண்டு | - பாதி |
| சீரகம் | - சிறிதளவு |
| வெங்காயம் | - 5 |
| மிளகாய் | - 4 |
| மிளகு | - 3 |
| இஞ்சி | - 1சிறிய துண்டு |
| தேங்காய் | - 2துண்டு |
| உப்பு | - தேவையான அளவு |
| எண்ணெய் | - தாளிப்புச் செய்யத்தேவையான அளவு |
| சோம்பு | - சிறிதளவு |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |

இறைச்சியை நல்லாகப்பாா்த்துவாங்கி. தண்ணீாில் இரண்டு மூன்று முறை கழுவியெடுத்துக் கொள்ளவும் அதே போல் அவரைக்காயையும் நல்லதாகப் பாா்த்து வாங்கி, அவற்றின் காம்புகளை மட்டும் கிள்ளி விட்டு ஒவ்வொன்றையும் இரண்டாகக் கிள்ளித் தண்ணீாில் போட்டுக் கழுவியெடுக்கவும். பிறகு, கழுவிய இறைச்சியுடனும், காயுடனும் மூன்று வெங்காயம் சோ்த்து ஒரு பாத்திரத்தில் போட்டுத் தேவையான அளவு தண்ணீா் சோ்த்து வேகவைக்கவும். (வெங்காயத்தை வட்ட வடிவில் நறுக்கிப் போடவும்.) வேகும் போது பாத்திரமானது மூடப்பட்டிருக்க வேண்டும்.

கசகசா, பூண்டு, சீரகம், மீதமுள்ள இரண்டு வெங்காயம், மிளகாய், மிளகு, இஞ்சி, ஆகிய எல்லாவற்றையும் ஒன்றாக அம்மியில் வைத்து மைபோலத் தனியாக அரைத்துக் கொள்ளவும்.தேங்காயையும் இதேபோல தனியாக அரைத்துக் கொள்ளவும். இப்படியாக அரைத்து எடுத்த மசாலாவில் சிறிது தண்ணீரைச் சோ்த்து போதுமான உப்பையும் போட்டுக் கலக்கி இறைச்சியும் நன்றாக வெந்து கொண்டிருக்கும் சமயமாகப் பாா்த்துப் பாத்திரத்தை மூடிவிடவும்.

தனியே ஒரு பாத்திரத்தில் தாளிப்புக்கேற்ற எண்ணெய்யை இட்டுக் காயவைத்து அதில் சோம்புத்தூளைப் போட்டுச் சிவக்கவிடவும். சிவந்ததும் கறிவேப்பிலையைப் போட்டுப் பொாியச் செய்து, வெந்த காயையும் இறைச்சியையும் அதில் கொட்டித் தாளிப்புச் செய்யவும் தாளிப்புச் செய்ததும் பாத்திரத்தை உடனே மூடிவிடவும் சிறிது நேரத்திற்குப் பின் மூடியைத் திறந்து, அரைத்து வைத்துள்ள தேங்காயை அதில் போட்டு நன்றாகக்கிளறிவிடவும்.

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடா்பாக உங்களது விமா்சனங்களை எதிா்பாா்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

வீடு,
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# இப்படிச் செய்யலாம்...

□ பச்சைப் பயறை அரைத்து மாவாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அந்த மாவுடன் சலித்து எடுத்து கோதுமைத் தவிட்டைக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். குளிக்கும் போது இதைத் தேய்த்துக் குளித்தால், தோலில் இருக்கின்ற கரும் புள்ளிகள் மாறி விடும். தோல் நன்றாக இருக்கும். தோ்ல் வியாதிவராது.

* * *

□ டொ்லின் சட்டையை வெயிலில் காயப் போடக்கூடாது. நிழலில் உலா்த்த வேண்டும் அதிக சூடுள்ள இஸ்திாிப் பெட்டியால் இஸ்திாி போடக்கூடாது சாதாரண சூடுள்ள இஸ்திாிப்பெட்டியால்தான் இஸ்திாி போட வேண்டும். நமது உடலில் உள்ள உஷ்ணமே டொ்லின் சட்டை காய்வதற்குப் போதுமானது.

# வீட்டிலும் பாதுகாப்பு

'வெளி இடங்களை விட வீட்டில் தான் அதிக ஆபத்துகள் நிறைந்துள்ளன' என்பது உண்மைதான். மகளிருக்கும் சிறுவா் சிறுமிகளுக்கும் எத்தனையோ விபத்துக்கள் வீட்டுக்குள் மறைந்திருக்கின்றன!

இவற்றின் பாதுகாப்புகளைப் பற்றியும், இவற்றிற்கான முதலுதவிகளைப் பற்றியும் மகளிா் அதிகமாக அறிந்திருக்க வேண்டியது அவசியமே!

குழந்தைகளுக்கும், சிறுவா்களுக்கும் தண்ணீா்த் தொட்டி, கூா்மையான கத்தி, அாிவாள்மனை முதலியவைகளுடன் விளையாட எப்பொழுதும் விருப்பம் இருக்கும். இவற்றில் ஆபத்துக்கள் உணடு. ஒரு போதும் அனுமதிக்காதீா்கள்.

சமையலுக்கு வாயுவைப் பயன்படுத்துவது இன்றைக்குச் சா்வ சாதாரணமாகி உள்ளது. இதைப்பற்றிய தயாாிப்பாளா்களின் குறிப்புகளை நன்றாகப் படித்துத் தெளிவாகத் தொிந்து வைத்துக் கொள்ளுங்கள். அது மட்டும் போதாது. அவற்றைத் தவறாமல் கடைப்பிடிக்கவும் வேண்டும். வாயு சிலிண்டா் எந்தக் காரணத்தினாலும் நெருப்புச் சூட்டுக்குப் பக்கத்தில் இருக்கவே கூடாது. வெப்பமும், சூடும் அதன் மீது படக்கூடாது. வெடித்து விடும் அபாயம் உண்டு!

அடுப்பின் மீது எதுவும் பொங்கி வழியக்கூடாது. இதனால் சிலிண்டாிலிருந்து வாயு வெளிப்படும் அபாயம் உண்டு. நெருப்பை அணைத்ததும், சிலிண்டாிலிருந்து வாயு வெளிவருவது நின்று விட்டதா என்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அடுப்பு எாியாத போது, இரவில் அடுப்பை அணைத்த பின்னும் 'ரெகுலேட்டா்' ஓடி இருந்தால் வாயு வெளியேறுகிறது என்று அா்த்தம்- அபாயம் உடனே வாயுக்கசிவைச் சாி செய்யுங்கள். எப்பொழுதும் சமையலறையிலோ மற்ற அறைகளிலோ வாயு நெடி இருக்கவே கூடாது.

காலையில் அடுப்பை பற்றவைக்கும் முன் ஜன்னல்களையும் கதவுகளையும் அகலத் திறந்து வைத்துப் புதுக்காற்றை உள்ளே அனுமதியுங்கள் வாயுக் கசிவு இருந்தால் வெளியேறட்டும். அரைமணி நேரமாவது வெளிக்காற்றை உள்ளே அனுமதிக்க வேண்டும்!

அடுப்பு, சிலிண்டா் மற்ற உபகரணங்கள் எதையும் நீங்களே பழுது பாா்க்காதீா்கள். உாிய பழுது பாா்ப்பவரை வரவழைத்து ஒப்படைப்பதே சாியான முறை பத்திரமும் பாதுகாப்பானதும் கூட.

குமரகுரு பாிசுத்திட்டத்தின் பாிசு பெற்றவா்களின் பெயா் விபரங்களை அடுத்தவாரம் எதிா்பாருங்கள்.




குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தின் பாிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினா் பாிசளிக்கவுள்ளனா். நீங்கள் செய்ய வேண்டியது கீழ்காணும்கூப்பனை நிரப்பி தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பவேண்டும். அனுப்பி வைக்கப்படும் கூப்பன்களில் குலுக்கள் மூலம் தொிவு செய்யப்படும் வாசகிக்கு பாிசு காத்திருக்கிறது. உங்கள் கூப்பன்களை வெள்ளிநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

குமரகுரு பாிசுத்திட்டம்—05

பெயா்:....................................................

முகவாி:..................................................


..................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியா்களும் அவா்களது நெருங்கிய உறவினா்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# அரும்புகள் இனி அரும்பும்

Youth is a time of playing growing, exploring and learning இந்த இளமை நேரத்தில் சிறுவர்கள் விளையாடுவதற்கும், ஆரோக்கியமாக வளர்வதற்கும், உலகின் ஆச்சரியங்களை அறிந்துகொள்ளவும் கற்றுக்கொள்ளவும் நாம் அனுமதிக்கிறோமா? எனும் கேள்விக்கு எம்மில் எத்தனை பேரால் ஆமாம், எனப் பதில்கூற முடியும்.

கற்றுக்கொள்வதில் கூட விளையாட்டையே (மகிழ்வழிக்கும் நடைமுறைகள்) ஊடகமாகக்கொள்ளும் உரிமை சிறுர்களுக்கு உண்டு என சிறுவர் உரிமைப் பட்டயங்கள் பறை சாற்றி நிற்கின்றன. (Children have right to learn, but through play) இவ்வாறான ஒரு சூழலில் யுத்தம் தின்று தீர்த்த எங்கள் மழலைகளின் நாட்களை கடந்து இன்றும் அவர்களுக்காக, அவர்களின் எதிர்காலத்துக்காக எதாவது செய்யவேண்டும் என நினைத்த பலருள், விளையாட்டுத்துறையினரின் 'அரும்புகள்' உதைபந்தாட்டப் பயிலரங்கமும் அடங்குகிறது.



இந்தப் பயிலரங்கம் உதைபந்து நுட்பம் கற்றல், தந்திர ஆட்டம், வலுவூட்டல்பயிற்சி, ஆங்கில பேச்சுத்திறன் விருத்தி, கணினி ஆரம்பப் பயிற்சி என பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒரு செயற்பாடாக



அமைகிறது. இது ஒரு வளர்ச்சியடைந்த நாடுகளின் முறைமையாயினும் எமது மண்ணிலும் நடை முறைப்படுத்தப்பட க்கூடிய சாத்தியக்கூறுகளை கொண்டதாக அமைகிறது. இங்கு பெற்றோரின் அக்கறையும், பங்களிப்புமே அதிக முக்கியத்துவமுடையதாகிறது. என்பது பிரதானமானது. பெற்றோர் பிள்ளைகளின் பயிற்சியின்போது அருகில் இருந்து பார்க்கவேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் பிள்ளை பேருக்கம் பெறுகிறது.



உண்மையில் பிள்ளைகள் தமது பிள்ளைப்பருவ (Child hood)இறுதியில் எல்லா வகையான விளையாட்டுகளிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறும் வகையில் Play parks எனப்படும் இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்குதான் அவர்கள் எந்த விளையாட்டில் ஆர்வமும் திறமையும் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது அடையாளம் காணப்படும். அதன்பின்பு குறித்த விளையாட்டில் நுட்பங்களும், திறன்களும் கற்பிக்கப்பட்டு உயர்வடைவர் உடற்குறைபாடு இல்லாத எல்லாப்பிள்ளைகளுமே சிறந்த விளையாட்டு வீரர்கள் என ஒரு அறிஞர் சொல்கிறார். (Every able bodied Child is, unconsciously, an athlete) இவ்வாறான சிறுவர்களின் ஆர்வம், திறமை என்பவற்றிற்கு ஏற்றவாறு சிறுவயதில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, பயிற்சி வழங்கி நுட்பம், உடற்திறனில் தேர்ச்சியடைய வைத்தால் அவர்கள் 14 வயதில் தங்கத்தை வென்றெடுக்கும் நீச்சல் வீரவீராங்கனைகளாகவும், 15வயதில் ஒலிம்பிக் தங்கத்தை ஜிம்னாஸ்றிக்குக்காக பெற்றுக்கொண்ட "நாடியாக கோமராக" இருந்தால் என்ன 17வயதில் உதைபந்தாட்ட சர்வதேசப் போட்டிகளில் நுழைந்த பல்வேறு வீரர்களாக உயர்வடைவது உறுதியா கிவிடும். யப்பான் இந்தமுறையைக் கையாண்டதாலேயே கடந்த உதை பந்தாட்ட உலகக்கிண்ண அரங்கில் அரையிறுதிவரை முன்னேறியது.

**அ.அன்ரன் அன்பழகன்.**

---

வடகிழக்கு மாகாணத்திலிருந்து முதன் முறையாக அகில இலங்கை மட்டத்தில் நீச்சல் போட்டிகளுக்கு என அணி ஒன்று தெரிவு செய்யப்பட்டு சிறப்புப்பயிற்சிக்குக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனரென கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.சு.கனகராஜா தெரிவித்தார்.

நீச்சல் போட்டிகள் நடத்துவதற்குரிய எந்த அடிப்படைவசதிகளும் கொண்ட தடாகங்களும் இந்த மண்ணில் இல்லை. ஆனாலும் பெருந்தூர மற்றும் குறுந்தூர நீச்சலில் தேர்ச்சிபெற்ற பலர் எங்கள் மண்ணில் இருக்கின்றனர். முதல் முறையாக பாக்குநீரிணையை நீந்திக்கடந்த திரு.நவரத்தினசாமி, நீச்சலில் இந்தியக்கரைவரை சென்று திரும்பிவந்த ஆழிக்குமரன் ஆனந்தன், 1985இல் அகில இலங்கைப்போட்டியில் 400மீற்றர் "பிறீஸ்ரைல்" நீச்சல் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்ற உருத்திரபுரத்தைச் சேர்ந்த அ. எமிலியானஸ் என பல சாதனையாளர்கள் எம் மண்ணில் உள்ளனர்.

அண்மையில் முல்லைத்தீவில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவு விளையாட்டுப்போட்டியில் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக நீச்சல் போட்டியும் அமைந்திருந்தது. எதிர்காலத்தில் இந்தப்போட்டிகளே தமிழீழத் தேசிய மட்டத்திலான நீச்சல் போட்டிகளாக அமையப்போகிறது என்பதை எதிர்பார்க்கமுடிகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளிக்குடா கடற்பரப்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் தற்போது மாவட்ட விளையாட்டு அலுவலரின் ஏற்பாட்டில் கொழும்புக்கு மேலதிக பயிற்சிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

நீச்சல் தடாகங்கள் அமைப்பதற்குப் பெருந்தொகைப் பணம் எதிர்பார்க்கப்படுகின்ற இந்தக்காலகட்டத்தில், இயற்கை அன்னை தந்துள்ள களப்புக்களும், குடாக்களும், கடலேரிகளையும், நீச்சல்போட்டிகளையும், பயிற்சிகளையும் நடத்தும் இடங்களாக மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் நீச்சல் சாதனையாளர்களை எங்கள் மண்ணில் உருவாக்கமுடியும். இதற்கு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.சு.கனகராஜா அவர்களின் முயற்சி முன்னோடியாக அமைகிறது.



கொழும்புக்கு பயிற்சிக்குச் செல்லும் நீச்சல் அணியினருடன் பள்ளிக்குடா மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பிரான்சிஸ். கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி கனகராஜா. தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா. தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த ராஜா. கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஆகியோரும் விளையாட்டு அதிகாரிகள் கலாதரன். புவனேந்திர ராஜா ஆகியோரும் இப்படத்தில் காணப்படுகின்றனர்.



# நீச்சலில் எமக்கு எதிர்காலம் உண்டா?

---



இங்கிலாந்தில் இடம்பெற்று வந்த "நட்வேட்ஸ்" முன்முனைக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியை பார்த்து கொட்டாவி விடவேண்டிய நிலை இங்கிலாந்துக்கு ஏற்பட்டது.

நியூஸ்லாந்து, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் கலந்து கொண்ட மும்முனை ஒருநாள் போட்டியில் பலமான அணி எனக் கருதப்பட்ட இங்கிலாந்து தனது சொந்த மண்ணில் இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்தமை அவ் அணியையும் ரசிகர் களையும் சோகத்தில் ஆழ்த்தி விட்டது.



# இங்கிலாந்தின் கைகளுக்கு எட்டாத நட்வேட்ஸ் இறுதிப் போட்டி



ஏற்கனவே நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் மற்றும் மேற்கிந்தியத்தீவில் வைத்து மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் என்பவற்றை கைப்பற்றிய இங்கிலாந்து அணிக்கு முக்கோண ஒரு நாள் தொடர் சுலபமாக அமைந்து விடும் என நம்பப்பட்டது.

இந்நிலையில் இறுதிப் போட்டிக்குக் கூட தகுதிபெறாது போனமை ஆச்சரியமே.

இப்போட்டித்தொடரில் இடைஇடையே தடையாக அமைந்த காலநிலைசீர்கேடு இங்கிலாந்து அணிக்குப் பாதகமாக அமைந்து விட்டதோ என்ற கருத்து நிலவினாலும், நியூசிலாந்து அணித்தலைவர் பிளெமிங்கின் அதிசிறப்பான ஆட்டம் அவ் அணியை இறுதிப்போட்டிக்கான தகுதியை முதலில் ஏற்படுத்தியதுடன் கிண்ணத்தைக் கைப்பற்றவும் உதவியது. இந்நிலையில் மேற்கிந்தியத் தீவு அணியைத் தோற்கடித்து சிறப்பு வெற்றிபெற்றால் மாத்திரமே, இறுதிப் போட்டிக்கு நுழையலாம் என்ற நிலை இங்கிலாந்துக்கு ஏற்பட்டது.

அதாவது இங்கிலாந்து 07 விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்று தென்படைந்தது. பிளிண்டொப் 123, அன்று ஸ்டரஸ் 100 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்துக்கு வலுச்சேர்த்தனர்.

ஒரு கட்டத்தில் 03 விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோதே இவர்கள் இருவரும் அணிக்குப் புத்துயிர் ஊட்டினர்.

இருப்பினும் இங்கிலாந்து எதிர்பார்க்காத அதிர்ச்சியைக் கொடுத்தது மேற்கிந்தியத்தீவு கிறிஸ்கெய்ல மற்றும் ராம் நரேஷ் சர்வான் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்திற்கு முன்னால் மேற்படி ஓட்ட எண்ணிக்கை எட்டப்படும் இலக்காக மாறியதுடன் இங்கிலாந்தின் நம்பிக்கையையும் தகர்த்தது. இது கடந்த காலங்களில் சிறப்பான பல வெற்றிகளைப் பெற்று வந்த இங்கிலாந்து அணிக்கு ஏமாற்றமளிப்பதாக அமைந்து விட்டது. தனது அணியில் உள்ள இளம்வீரர்களை மிகவும் நம்புவதாக குறிப்பிட்டிருந்த அணித் தலைவர் மைக்கல் வோகனுக்குத் தனது சொந்த மண்ணில் ஏற்பட்ட தோல்வி மிகவும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டிருப்பதுடன் மேற்கிந்தியத்தீவின் திடீர் எழுச்சி இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் எத்தகைய மாறுதல்களை ஏற்படுத்தும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் இன்றைய எதிர்பார்ப்பாகும்.




## சிந்தனைத் துளிகள் சில

*நீ எதையும், எல்லாவற்றையும், சாதிக்கக் கூடியவன், எல்லாம் வல்லவன் நீ!

*நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு- உனது மனம். இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்துவிடு!

*மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் புண்ணியமாகும்,
மற்றவர்களுக்கு தீமை செய்வது பாவமாகும்!

**அ.சோமேஸ்ராஸா**

## சொற்சிலம்பம்-44

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| றை | ச | கா | ச | த் | வ | சீ |
| ய் | க் | ப | ய் | ழ | கே | பூ |
| வி | ன் | து | ர | ளை | ரு | ட் |
| ங் | ன | ய | மா | வ் | டி | த |
| மு | ம | உ | ம் | ந் | தா | நோ |
| சி | ல | ரி | தா | ம் | திகி | |
| னி | கோ | மு | ளி | ளீ | ண | ரீ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -42 இன் விடைகள்

01. ஆடு.
02. பசு.

01. புஷ்பம்.
02. மலர்.

### சொற்சிலம்பம் - 42 இன் பரிசுக்குரியவர்

**அமிர்தவாஷினி**
**தரம் -03,**
**கிளி/தருமபுரம் இல.1,**
**அ.த.க. பாடசாலை.**

### சொற்சிலம்பம் - 42 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. அ.அமலிகா, இரணைப்பாலை, றோ.க வித்தியாலயம்.
02. அ.குந்தவை, மு.மல்லாவி ம.கல்லூரி, கிளிநொச்சி.
03. பே.கலையரசன், உசன் இராமநாதன் ம.வி, மிருசுவில்.
04. சு.சுதன், 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
05. மா.புஸ்பகுமார், புனிதபூமி சிறுவர் இல்லம், முத்துஐயன் கட்டு.
06. சு.பிரியங்கா, தரம்-05 மு/சிறிசுப்பிரமணிய- வித்தியாலயம்.

01. விளையாட்டின் பெயர்கள் இரண்டு?
01) ....................................
02) ....................................

02. தமிழீழத்தில் உள்ள துறைமுகங்கள் இரண்டு?
01) ....................................
02) ....................................

பெயர் :- ....................................
முகவரி :-....................................
....................................


*சொற்சிலம்பம்-44*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

# எங்கள் சிறுத்தை

எங்களின் அதிவேகமான உலகின் அதிவேகமான விலங்கான சிறுத்தை பற்றி ஒரு பகுதியை பார்த்திருப்பீகள் இன்று சிறுத்தை பற்றி இன்னும் தரப் போகிறேன்.

சிறுத்தைக்கு ஒடுங்கிய அல்லது மெல்லிய நீண்ட உடல் இருக்கிறதால் வேகமாக சுழன்று திரும்புதல் பாய்தல் மூலம் ஓடி வேட்டையாடுவதில் அது காட்டுக் கதாநாயகன் எங்களின் காட்டுக் கதாநாயகன்தான்.

சிறுத்தைக்குத துல்லியமான கேட்டல் திறமை, கூர்மையான பார்வைப்புலன் உண்டு. சிறுத்தையின் வண்ணம் காரணமாக எமது வரண்ட காடுகள் அதற்கு நல்ல உருமறைப்பு, அதனால சிறுத்தையை காடுகளில் இலேசாக தனித்துப் பார்க்க முடியாது. அதோடு, சிறுத்தை அதிகம் கர்ச்சிக்காது. மிக அரிதாக அடித் தொண்டையால் உறுமும். எவ்வளவுதான் எங்களிடத்தில் 'சருகுபுலி' என்று சிறிய காட்டுப் பூனையைக் காட்டு வார்கள். ஆனால் 'சருகுபுலி' என்று சிறுத்தையைத்தான் குறிப்பிடப் படுகின்றது. எமது தாயகத்திலோ - சிங்கள தேசத்திலோ காட்டுப்புலி இல்லை. அது இந்தியாவில்தான் இருக்கிறது. புலி இந்தியா வின் தேசிய விலங்கும்தான்.



சிறுத்தை 'பெலிடே' என்ற விலங்குக் குடும்பத்தைச் சேர்ந்தது. எங்களிடம் இருக்கிற தேசியத் தன்மை வாய்ந்த தனித்துவ விலங்கு சிறுத்தைதான்.

சிறுத்தையை ஆங்கிலத்தில் லெப்பேட் (Leopard) என்று அழைப்பார்கள்.

சிறுத்தையின் வேறு இனங்கள் உலகத்தில வேறு நாடுகளில் வாழ்கின்றன. பாந்தர், சீற்றா என்ற இனங்களில் எல்லாம் உலகத்தில் சிறுத்தைகள் இருக்கின்றன. அவற்றைவிட எங்களின் காட்டு சிறுத்தைகள் தனித்துவமானவை.

உலகத்தில் மிகஅருகி வரும் விலங்கு சிறுத்தை. எம்மிடம் இருக்கின்ற 'பாந்தரா பார்டஸ் கொட்டியா' இன சிறுத்தையும் உலகில் முழுதாக அழியும் தறுவாயில் இருக்கின்ற மிக அரிதான விலங்கு.

இதனை வேட்டையாடாமல் அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். எம்முடைய வேட்டைக் காரர்கள் பல்லுக்காகவும் தோலுக் காகவும் சிறுத்தையை வேட்டை யாடுவார்கள்.

நாம் பாடப்புத்தகங்களில் படித்திருப்போம். உணவுச் சங்கிலி என்று அந்த உணவுச் சங்கிலியில் முதலாவதாக சிறுத்தையே உள்ளது. சிறுத்தையை அழித்தால் எங்களின் உணவுச் சங்கிலியில் எவ்வளவு பாதிப்பு வரும் என்பதை யோசித்துப் பாருங்கள். அப்படி அழிந்தால் எமது சூழலில் பாதிப்பும் ஏற்படும்.

## யார் பட்டஞ் சொன்னது?



**தந்தை:-** சார் என்ர பிள்ளையை இஞ்ச பட்டஞ் சொல்லி கூப்பிடுறாங்களாம் என்னண்டு கேளுங்கோ?

**ஆசிரியர்:-** யார் சொன்னது? (மௌனம்) தந்தை (மகளைப் பார்த்து) ஏய் எலிவால். ஆர்பட்டஞ் சொன்னது காட்டு

# யானையின் ஆசை

பகுதி -02





கவிதைகள்

## சந்தோசமாக இரும்...!

பேச்சுவார்த்தை என்பதென்ன....?
ஆச்சுதா? ஆச்சுதென்று அடுத்தடுத்துக்
கேட்கின்றீர் கேட்டுக் கேட்டுச்,
சூட்சுமங்கள் புரியாத
பிரகிருதிகள் போல் பேசுகிறீர்.....
கேட்பது எல்லாம் கொடுப்பதா? நெருளீயும்
மொத்தக்களஞ்சியமா? முடிமன்னர் சத்திரமா...?
முற்றத்திலே நின்று வேட்டுக்கள் தீர்ப்பதல்ல பேச்சுவார்த்தை!
பூடகமாய்... புதுமையாய்... புரட்சிகரமானதுவாய்...
நாடுமுயர் வழிமுறைகள் தம்மாலும்... அப்பாலும்
பாடுபடவேணும்,பக்குவம் பெரிதாய் வேண்டும்;
அதுவரை... ஓடுவதை நிறுத்தும்! நன்றாக இளைப்பாறும்
தப்பிலாதேடலும் வேண்டும்.... கேட்பதுள் கேளாததேதுமுண்டா?
பார்ப்பதுள் பாராதது ஏதும் வந்திடுமோ? அடுத்தவரின்
வாய்ச்சவடாய் தனக்கான தீனியெனப்போகாது
பேச்சோடு... வார்த்தை புரிந்துணர்வு; நட்பாய்வு
சால்புடமை இவையாவும் தப்பாது மேற்கொள்ளும்!
அஞ்சாமை ஆன்றதுணிவுடமையோடினி ஏதுமிவர்
துஞ்சும் நிலையினிலும் தீயவைதனை நாடார் இங்கு
அஞ்சும் நிலையின்றிப் பேச்சுக்குள் நிற்பதிலோ,
காலத்தின் ஓட்டமதைக் கணக்கில் எடுக்காதீர்!
ஞாலத்தில் நலம்புரிதல் காலங்கடந்தே தானரங்கேறும்...
ஓர் தேர்தற் காலமது உருண்டுருண்டு போனாலும்...
கூதல் கொடு கொடுப்பின்றி நீர் இருப்பதெனில்...
பேச்சுவார்த்தை வெற்றிதரும்... பிறகென்னசந்தேகம்...
ஆகும் மிகவிரைவிலாகுமெனக் காத்திருத்தல்
அதுவே முதல் பேதம்! பேச்சுவார்த்தை நாடகத்தின்
முதற் காட்சி கட்டியத்தோடு முடிவான பின்னர்தான்,
பேச்சுவார்த்தை சுகங்காணத்தொடரும் அறிவீர்...!
சந்தி தெருவென்னை சத்திரங்கள் தம்மில் நின்று
முந்தி உரைத்தென்ன? முடிவா கிடைத்துவிடும்...?
குந்தியிருந்து கொண்டு குரைக்கத்தொடங்காது,
சிந்தித்தவாறிந்தத் திரைக்குள்ளே சந்தோசமாக இரும்!

**வளவை வளவன்.**

## முள்ளின் மீதான இருப்பு

நீளமான பலூனாய்
பெருத்துக் கிடக்கிறது
எம் வாழ்வு
நீண்டு.
துயரங்கள் திரண்டு ஊத
வாழ்வு பலூன் வீங்குகிறது.
இயலாமை படித்தடைந்தழுத்த
இன்னொரு பக்கம் பொருமுகிறது.
ஓரிடத்தை அமர்த்த
இன்னோரிடமும்
இன்னோரிடத்தையிறுக்க
வேறோரிடமுமென...
மாறி மாறித் திருகவும்
வாழ்ந்தேயாக வேண்டுமென்ற அவா
(எப்படியும் வாழலாம் என்றல்ல)
நிமிடங்களிலெல்லாம்
பூத்துக் குலுங்குகிறது
கொத்துக் கொத்தாய்.
இந்த வாழ்வு பலூன்
எப்போது வெடிக்கும்?
இதுவே
வினா முனைக்கூர்
எனக்கும்– உனக்கும்.
தொங்கும் வாழ்வின் இழையில்
தொற்றியேனும்
வாழவே விரும்புகிறேன்
என் மண்ணில் என் மக்களோடு.

**ஆவரங்கால் சுதன்**

## படித்ததில் பிடித்தது

## வெள்ளைத் தாள்

பளிங்கு போன்ற வெள்ளைத் தாள் கூறியது.....

"நான் மிகவும் தூய்மையாகப் படைக்கப்பட்டேன்... தூய்மையாகவே எப்போதும் இருப்பேன்... இருள் என்னைத் தொடுவதை விட அசுத்தம் என் அருகில் வருவதைவிட நான் எரிந்து வெள்ளைச் சாம்பலாக மாறுவதையே விரும்புகிறேன்..."

இந்த வெள்ளைத்தாள் சொன்னதை மைக்கூடு கேட்டு தன் இருண்ட இதயத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்ட. தாளை நெருங்கும் துணிச்சல் அதற்கு இல்லை... பல வண்ண நிறப் பென்சில்களும் இந்தத் தாள் சென்னதைக் கேட்டு விட்டு அதை நெருங்கவேயில்லை...

அந்த வெள்ளைத் தாள் தூய்மையாக, கற்போடு எழுதப்பட்டாத தாளாக எப்போதும் இருந்தது...




சமீபகாலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து பல்வேறு சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்தன. தற்போதும் வெளிவர உள்ளன. இராணுவ நெருக்கடி மிகுந்த

## இலக்கியப்பகிர்வு

காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வெளியான இரண்டு சிறுகதைத்தொகுப்புகள் தொடர்பான சில குறிப்புகளைச் சொல்லலாம் என நினைக்கின்றேன்.

இந்த இரண்டு தொகுப்புகளையும் பொறுக்கி எடுப்பதற்கான பிரதான காரணமும்



மண்ணின் மலர்கள்

முதற்காரணமாகும் ஒன்றே ஒன்றுதான். அதாவது இரண்டும் பல சிறுகதை ஆசிரியர்கள் சேர்ந்து எழுதி வெளியிட்ட தொகுப்புக்களாகும். ஒரு தொகுப்பு மல்லிகைப்பந்தல் வெளியீடாக வந்த மண்ணின் மலர்கள். மற்றது நண்பர்கள் வெளியீடு.

முதலில் மண்ணின் மலர்கள் என்னும் தொகுப்பினைப் பார்ப்போம். யாழ். பல்கலைக்கழக புனைகதையாளர்களின் படைப்புக்கள் என்னும் மகுடமிட்டு சி.சிவாணி அவர்களால் தொகுக்கப்பட்ட இந்தத் தொகுப்பில் சித்தர் அறவரதன். அபிநவன். குமுதினி சதாசிவமூர்த்தி. இ.இராஜேஸ்கண்ணன். இராகவன். உடுவில் அரவிந்தன். தியாகு கணேஸ்ராஜ். இ.சிவாணி. வ.வசந்தகுமார் தாட்சாயனி. பிரியா குணராசா. நர்த்தனா. அருந்தவசீலன் ஆகிய பதின் மூன்று படைப்பாளிகளின் படைப்புக்கள் உள்ளன.

1962 இலங்கையில் புகழ்பு,த்த எழுத்தாளர்கள் செங்கை ஆழியான். செம்பியன் செல்வன். துருவன். பரராஜசிங்கம். மௌனகுரு. அங்கையன் கைலாசநாதன். செ.கதிர்காமநாதன். செ.ஜோகநாதன். முத்து சிவஞானம். போன்ற பலர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்தவேளை வெளி வந்த விண்ணுக்கும் மண்ணுக்கும் 'கதைப்பு,ங்கா' போன்ற சிறுகதைத் தொகுதிகளை நினைவு கூருவது மனங்கொள்ளத்தக்கது.

கிட்டத்தட்ட நாற்பது வருடங்களின் பின்னர் அவ்வாறான பல்கலைக்கழக சூழலில் வெளியாகும் இத்தொகுப்பு நாற்பது வருடகால எழுச்சியினையும். வீச்சையும் கொண்டுள்ளதா? என்பதை நுணுக்கமாகக் கவனிக்க வேண்டியது அவசியமாகின்றது.

தொகுப்பில் உள்ள "வாழ்க்கையா" முள் முருக்கு இரண்டு கதைகளும் சீதனப்பிரச்சினையில் கணவன் மனைவி உறவைப்பற்றிக் கனீதக்கின்றன.

கதைகளில் குறிப்பிடப்படும் பிரச்சினைகள் எமக்கும் பொருந்துவதாக இருந்தாலும் புறச்சூழல். கதைக்களம் என்பன எமக்கு அந்நியப்பட்டுப்போய் உள்ளன.

கதைகள் வெளிவந்த காலத்து புறச்சூழல் கதைகளில் இல்லை. அது மாத்திரம் அல்ல கதைகளின் முடிவுகூட எந்தவிதமான மாற்றங்களும் இல்லாமல் வழக்கம் போலவே ஏற்கனவே இது போன்று எழுதப்பட்ட கதைகள் போல அமைந்து விடுகின்றன. இந்தப் பாரம்பரிய மரபுதான் எங்கள் வழக்கத்தில் இருந்தாலும் மரபார்ந்த சில விடயங்களை இக்கதைகள் ஊடாக இந்தப் புதிய படைப்பாளிகள் கேள்விக்கு உட்படுத்தியிருந்தால் பொருத்தமாக அமைந்திருக்கும்.

ஆனால் என்னவர் இராமனல்ல என்ற சிவாணியின் கதை புத்துணர்வினை ஏற்படுத்துகின்ற கதை. சாரதாவுக்கு ஏற்பட்ட கொடுமையைவிட அவர் கணவர் அதை எதிர் கொண்ட விதமே அக்கதையினை உயர்த்துகின்றது.

அபிநயா எழுதிய "விளையாட்டு" வசந்தகுமார் எழுதிய "கினிக்குஞ்சு" தியாகு கணேஸ்ராம் எழுதிய "பாதை" உடுவில் அரவிந்தன எழுதிய"விடிவு" போன்ற கதைகள் யாழ்ப்பாணத்துப் புறச்சூழலை வெளிக்கொண்டுவரும் கதைகள். யாழ்ப்பாணத்து மக்களின் அடிமனத்தில் பதுங்கிப் போய் இருந்த உணர்வுகளை வெளிக்கொண்டு வந்த கதைகள்.

இதில் "விளையாட்டு" கதை விஸ்தார மாக எழுதப்படாவிட்டாலும் நெருஞ்சி முள்ளாகக் கதைக்கும் கதை. எனினும் "விடிவு" என்னும் கதை இயல்பாக அமையாத கதையாக இந்தக் கருவினை வைத்து எழுதவேண்டும் என்ற தொனியில் எழுதப்பட்டதாய் அமைந்து விடுகின்றது. இக் கதையினை எழுதிய உடுவில் அரவிந்தனின் மொழிநடை மிக நன்றாக அமைகின்றது.

"அவளுடைய காதுக்குள்ளே காற்றால் மிக மென்மையாக உரசிவிட்டுப் போனான் மரியதாஸ்" என்ற மாதிரியான அழகான மொழிநடை.

ஆனால் வலுக்கட்டாயமாக மரியதாஸ் கடலில் இறங்குவது பொருத்தமா?

"ஒரு மரணம் சில மனிதர்களும்" என்ற தாட்சாயனியின் கதையும் சமகாலத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சிறுகதை.

போராளியான பிறகு வந்துநிற்கும் நயனி பற்றிய கதை. அடுத்த இலக்கினை அடைய காத்திருக்கும் அவள் அதற்கிடையில் உறவினர்களைப் பார்க்க வந்திருக்கிறாள்.

எல்லோரும் தமிழ்ச் சினிமாவின் மாயங்களுக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கையில் தாட்சாயனி அதற்கு மாறுபட்டவராக உள்ளது கவனிப்புக்குரியது.

"என்ர முடிவு இஞ்சை எடுபடாமல்தான் சுவிசுக்கு தள்ளப்பாக்கிறியோ?"

"ஐயய்யோ அப்படியில்லையக்கா சிம்ரன் மாதிரியக்கா நீங்கள"

"சிம்ரன் மாதிரியோ.....?" எதிலோ தோற்றுவிட்டது மாதிரி அவளுக்கு ஓர் உணர்ச்சி தோன்றியது.

என்கின்ற உரையாடல் காத்திரமானது.

"மண்ணின் மலர்கள" என்னும் தொகுப்பின் கதைகளில் சில பொதுவான குறிப்புக்கள் இவை. கதையாக இருந்தால் என்ன? எந்த இலக்கியமாக இருந்தால் என்ன அது படித்து முடித்தவுடன் ஏதோ ஒரு வகைத் தாக்கத்தை வாசிப்பவர் மனதில் தோற்றவைக்க வேண்டும். சிறிய உணர்வலைகளையாவது ஏற்படுத்த முடியாதவைகள் வெறும் தாள்களாக அல்லது அறிக்கைகளாக அல்லது செய்திகளாக மாத்திரம் அடக்கி விடுகின்றன.

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**

நல்ல படைப்புக்களே நாளும் பொழுதும் காலந்தோறும் வாசிப்பவர்களை கலைத்துக் கலைத்து இம்சைகள் புரியும் தன்மை கொண்டவையாக அமைந்து விடுகின்றன.

அவ்வாறான இம்சைகளை அல்லது தாக்கங்களை எத்தனை படைப்புக்கள் எங்களுக்கு ஏற்படுத்துகின்றதா? இவை எல்லோருக்கும் ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துமா? என்பதெல்லாம் கவனிப்புக்கு உரிய கேள்விகள்.

மொத்தத்தில் "மண்ணின்மலர்களில" தாக்கம் இன்னும் அதிகமாக நுட்பமாக அமைந்திருக்க வேண்டும். அடுத்த கட்டத்திலாவது இவர்கள் தாக்கமும் வேகமும் கொண்ட கதைகளை படைக்கவேண்டும்.

## புகைத்தல்




நான் புகைப்பதை அறவே வெறுக்கிறேன். சில சமயம் புகைப்பதில் பெருமைப் படுகிறேன்.
ஏன் அப்படி.
முன்னது விமானக் குண்டு வீச்சின் புகை
பின்னது. புலிகளின் செல்வீச்சுப்புகை.

# உரத்த குரலில் சொல்லப்படும் “புதிய கதைகள்”

நெரிசல் மிக்க சாலைகளில் சமிக்ஞைக்காகக் காத்திருக்கும் பொழுதில் எதிர்ப்படும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகளைக் கண்டே, தத்தமது நாடுகளிம் உரிமைப் போராட்டமொன்று நடந்திருப் பதைப் பலதலைமுறைகள் கடந்து விட்ட இன்றைய வேகமான இளைய தலைமுறை உலகெங்கும் கண்டு கொள்கிறது. ஒரு வேளை சமிக்ஞை விளக்குகள் இல்லா விடின் இவை பற்றி தெரிந்து கொள்ளத் தேவையற்ற முறையிலேயே அநேக நாடுகளின் இளைய தலைமுறைகளை உலக மயமாதலும் , தகவல் தொழிநுட்பப் புரட்சியும் அமிழ்த்தி வைத்திருக்கிறது.

தமது உரிமைக்காகப் போராடும் நாட்களை உயிர்ப்புடன் பேணி, அடுத்தடுத்த தலைமுறைகளிடம் ஒப்படைக்க வேண்டும். வாழும்நாட்கள் மறுக்கப்பட்டு, புதை குழி யினுள் புதைந்து போனவர்களினது உருப் பெறாத கனவுகளை வெளிச்சமிட்டுக் காட்டவேண்டும். தாயக மீட்புடன் சமாந்தர மாகச் செல்ல வேண்டிய பணியிது.

போர் நெருக்குவாரங்கள் தணிந்த இன்றைய நிலையில் வன்னிப்பகுதியில் புதிய படைப்புக்கள் பல அண்மையில் வெளிவந்தவண்ணமுள்ளன. இவற்றுள் மிக அண்மையவரவு மலைமகளின் “ புதிய கதைகள்” உண்மையில் புதிய கதைத் தொகுதிதான் போராளிகளினது குறிப்பாகப் பெண் போராளிகளின் வாழ்க்கையை




அவர்களின் நோக்கு நிலை யிலிருந்தே கதைகள் வெளியாகியிருந்தாலும், தொகுதியாகியிருப்பது இதுதான் முதல் தடவை என நினைக்கின்றேன். அந்த வகையில் வரவேற் கப்பட வேண்டிய தொகுதி யிது. பெண் போராளி ஒருவர் தன் தோழியரி னதும் அனுபவங்களை யும் உணர்வுகளையும் பதிவு செய்திருக்கிறார். நாம் பெற்ற வெற்றிகளின் பின்னிருந்த -நாமறியாமல் எத்தனையோ தியாகங்கள் நம்முன்வைக்கப்பட்டுள்ளன. பதுங்குகுழிகளுக்குள்ளும் பனைவடலிகளுக்குள்ளும் விடுதலையைத் தவிர வேறெந்த எதிர்பார்ப்புமன்றி வீழ்ந்து போனவர்கள் நம்முன் உலவுகிறார்கள். கப்டன் வானதி வெளியீட் டக வெளியீடாக தாமரைச் செல்வியின் முன்னுரை யுடன் வெளிவந்துள்ளது.

“இவை சிறுகதைகளாக இல்லை என்பது பற்றிப் பேச நாம்முனையவில்லை ஊகங்களிற்கும் திறனாய்விற்கும் அப்பாற்பட்ட ஆற்றல்மிக்க மனிதர்களின் கதைகள் இவை என்பதே உண்மை”

இந்தத்தொகுப்பின் பலங்களும் பலவீனங்களும்இந்த நோக்கத்திற்குள்ளும் வார்த்தைகளுக்குள்ளுமே உள்ளன. தந்தை வழிச் சமுதாயமான நம்மிடையில் பெண்கள் பூர்ண சுதந்திரமுடையவர்களென்றோ, பிரச் சினையற்ற வாழ்வு வாழ்கிறார்களென்றோ கொள்ள முடியாது. சமூகத்தின் சம பங் காளிகளான பெண்கள் மதிக்கப்படுவ தில்லை என்ற கோபத்துடன் எழுதப்பட்டு தொகுத்த இத் தொகுப்பில் ஒப்பீட்டளவில் பெண்களின் விடுதலை பற்றிய எழுத்துக் களேமுனைப்புப் பெற்றுள்ளன. இக்கதை களில் வரும் அநேகமான பாத்திரங்கள் பெண்விடுதலை, மனித உறவு நிலைகளில் பெண்களின் பங்கு பற்றிய பூரணமான தெளிவுடன் இயங்கி எதிர்ப்படும் தடைகளை இலாவகமாக உடைத்துவிடுகின்றன. சில கதைகளில் வரும் போர் களக்காட்சிகளும் வார்த்தைகளும் ஒரு மயக்க நிலையை உண்டாக்கினாலும், அவையும் மேற் குறிப்பிட்ட வகைக்குள்ளேயே அடங்கும். மிகுதி ஓரிரு கதைகளும் போர்க்களத்தைப் பதிவு செய்கின்றன. எறிகணை வீச்சும், துப்பாக்கி சடசடப்பும் நடைபேசியின் (WALKYTALKY) இரச்சல் இருப்பினும் அவற்றின் இடையிலும் பெண்களின் விடுதலைக்கான பாத்திரங்கள் விடுதலை பெற்ற பாத்திரங்கள் இயங்குகின்றன.

தான் சார்ந்த பெண்கள் உரிய கௌரவம் பெறவில்லை என்ற இயல்பாய் எழக்கூடிய கோபத்துடன் இயங்குவது அவரது பலமாகவும்,பலவீனமாகவும் கொள்ள வாய்ப்புண்டு. இது விடயத்தில் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டிய வராகிறார்.

ஏனெனில் இவ்விடயத்தில் அவர் பெறும் பலத்திற்கு இணையான பலவீனத் தையும் கொண்டுள்ளார். இந்தக் கோபம்

இனக் குழுமமொன்று, போராட்டம் பற்றிய உணர்வுகளையும் தகவல்களையும் அடுத்த சில தலைமுறைகளுக்காவது உணர்வு நிலை குன்றாமல் கடத்த முயலவேண்டும். ஏனெ னில் அழிவு நிலையிலிருக்கும் அத்தேசத் தைப் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியவர் கள் அவர்களே.

போராட்டத்தின் ஒரு அங்கமாகிய போரின் போதான தியாகங்களே உச்சம் பெறுகின்றன. அல்லது உச்சமாகக் கணிக்கப் படுகின்றன. மக்களினதும் போராளிகளின தும் இன்னல் நிறைந்த காலகட்டமும் இதுதான். இவை அப்படியே கடத்தப்பட வேண்டும். இந்த வேலையை அநேகமாக இலக்கியங்களே செய்கின்றன. வெறும் தகவலொன்றை விட அதிக அதிர்வை ஒரு கவிதையோ சிறுகதையோ,நாவலோ உண் டாக்கவல்லது. தவிரவும்,போராடும் தேசத்து மக்களையும்,போராளிகளையும் கலையழகு டன் உண்மையாகப் பதிவு செய்யும் போது உன்னத இலக்கியங்கள் பிறக் கின்றன. இதற்கான நல்ல உதாரணங்களாக ரஷ்யா, வியட்நாமைக் காணலாம். ரஷ்யர் களின் மன்னர்களுக்கு எதிரான போரின் போதும், சமவுடைமை வாதிகளின் போரின் போதும் நாசிகளுடனான போரின்போதும் எழுந்த இலக்கியங்களை இன்று கூட இரசித்துப் படிக்க முடிகிறது.

நீண்ட உரிமைப்போராட்ட வரலா றுடைய நாமும் கடந்த இருபது வருடங் களின் மேலாகப் போர்க்களத்திலேயே வாழ்கிறோம். எங்களது அவலங்கள் காட்டுக் கரைகளிலும், தங்கியிருந்த மர நிழல்களின் கீழும் புதைந்துவிடக் கூடாது. அந்த அச்சுப்பதிப்பு, புத்தக ஆக்கம் நேர்த்தியாக உள்ளன.

முறையான திறனாய்விற்கும் விவாதத்திற்கும் இத்தொகுப்பு உட்பட வேண்டும்.ஏனெனில் கள நிலவரங்களைப் பதிவு செய்ய வசதியுள்ள ஒருவர் அடுத்த தலைமுறைக்கான கையளிப்பு இலக்கியங் களை நேர்த்தியாகச் செய்ய உதவும் .

இத்தொகுதி பற்றிப் பேசுமுன் ஆசிரியரது முன்னுரையிலிருந்து மூன்று விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றைத் தெளிவாகப் புரிந்தால் இத்தொகுப்பைப்பற்றி தேர்ந்த வாசகர் ஒருவர் புரிந்துகொள்ள முடியும். இந்த மண்ணின் பெண்கள் யார்? எத்தகையவர் கள்? என்ன செய்கிறார்கள் என்பதை உல கிற்குச் சொல்ல வேண்டும். இதுவே நோக் கம் நிகழவுள்ள, நிகழ்ந்து முடிந்துள்ள அற் புதங்கள் பலவற்றின் அடிவேர்களாக இவர்களே இருக்கிறார்கள். செயல்களைச் செய்த பின்பும் எந்த ஆரவாரமுமின்றி அமைதியாகத் தம் அடுத்தடுத்த பணிகளில் மூழ்கிப்போய்விடுவதால் இவர்களின் இருப்பு எவருக்கும் தெரிவதில்லை. இவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்த நான் விரும்பு கிறேன்.

“ நடைமுறை வாழ்வியல் அசைவியக்கத்தின் அச்சாணியாகப் பெண்கள் இருக்கின்றபோதும் அவர்கள் கௌரவிக்கப்படுவதில்லை. அவர்களின் இயல்பு மதிக்கப்படுவதில்லை. என்தோழி கள் பேசப்படாதவர்களாக போய்விடுவார் களோ என்ற பயத்தினாலேயே எழுத முனைந்தேன்”

அவரது விசாலித்த அனுபவங்கள் கதை யாவதைத் தடுக்கின்றன. ஒரே மாதிரியான கதைகள், ஒரு தொகுப்பில் இடம்பெறு வதால் ஏற்படும் ஆபத்து மிகப்பெரியது.

தொகுப்பின் ஆரம்பக் கதைகள் ஓரிரண்டை வாசித்த பின் ஆசிரியரின் மன வோட்டத்தை புரிந்துகொண்ட பின் அடுத் தடுத்த கதைகளின் பாத்திர தன்மையும் முடிவும் ஊகிக்கக் கூடியதாகவுள்ளது.

ஒரே சூத்திரத்தன்மை வாய்ந்த கதைகளின் விளைவிது.

ஆசிரியர் குறிப்பிட்ட இன்னொரு விடயம், இவை சிறுகதைகளா என்பது எனக்குத் தெரியாது. (முன்பக்கத்தில் சிறுகதை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது) ஏற்கனவே குறிப்பிட்ட ஒருமுகமான பார் வையும் இருப்புப் பற்றிய பயத்தின் வெளிப் பாடுகளும் இச்சர்ச்சையை மேலும் தூண் டக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

இவற்றையெல்லாம் மீறி, அவரின் நடையும், கதை நகர்த்தும் பாங்கும் இரசிக் கத்தக்கதாயுள்ளன. கதைகளைப் படிக்கும் போது இயல்பாகவே காட்சிகள் குறிப்பாக “யாருன்னை அழைத்தார்” கதையைப்படிக் கும்போது குறும்படம் ஒன்றைப் பார்ப்பதான உணர்வே உண்டாகின்றது. தன் விசாலித்த அனுபவங்களையும், பன்முகப்பார்வைகளை யும், கலையழகுடன் சொல்லும் ஆசிரி யரால் இன்னும் சிறந்த படைப்புக்களைத்தர முடியும். போர்க்களத்தில் வாழும் ஒருவர் யாருமறியாமல் போகும் தன் தோழிகளின் கதை களைத் தொடர்ந்தும் சொல்லவேண்டும்.

**ஞானுஜா**




## இரு குறும்பாக்கள்

முந்தலிலே வாழ்கின்ற தேவர்
முழுத்தொழிலிற்கு முதலாளி யாவார்.
இந்த விலை விற்கிறதே! ஏன்-
செருப்பைத் தேய்ப்பான் என்(று)
அந்தரத்தில் தான் நடந்துபோவார்.

0 0 0

நல்லையர் நெக்குருகி நைந்தார்
நம்பெருமான் ‘வா’ என்று சொன்னார்
நில்லையா என்றடியார்
நேரே போய் தம்மனைவி
செல்லம்மாள் சேலையுள் மறைந்தார்.

-மஹாகவி-

## மூன்று பதில்கள்

ஆட்களற்ற தீவொன்றில் மூன்று தமிழர்கள்
அநாதரவாக ஒதுங்க நேர்ந் தால் என்ன செய்வார்கள்?
முதலில் ஒரு சங்கம் அமைப் பார்கள், சண்டையிடுவார்கள்
பிறகு மூன்று சங்கங்கள் அமைப்பார்கள்.
தமிழர்கள் உண்ணாமல் தின்னாமல் சொத்தும் பணமும் ஏன்சேர்க்கிறார்கள்?
ஒன்று திருடனுக்குக் கொடுக்க அல்லது மருமகனுக்குக் கொடுக்க...
இனவெறியர் முன் இறைவன் தோன்றினால் என்ன வரம் கேட்பர்?
கலவரம்!

## நான்கு தீதுக்கள்

யாரைக் காண்பதுவும் தீதே-திருமிக்க
தீயார் சொற்கேட்பதும் தீதே
தீயார் குணங்கள் உரைப்பதும் தீதே-அவரோடு
இணங்கி இருப்பதும் தீதே...

ஔவையார்.

## ஐந்து பாதகங்கள்

தொலைக்காட்சி பெட்டி முன் நேரத்தைக்கொல்லல்
சீட்டாட்டக் கோஷ்டியை வீட்டுக்கு அழைத்தல்
ஊதாரிகளோடு உறவாட முனைதல்
அரசியல் வாதிகளுக்கு ஆலவட்டம் பிடித்தல்

## ஆறு மனங்கள்

கொடுத்து ஆறும் ஒரு மனமுன்று-பிறரைக்
கெடுத்தே ஆறும் இன்னொன் டுண்டு
கதைத்தே காலம் கழிக்கும் ஒன்று- மௌனம்
காத்தேவாழும் மனமுமுண்டு...
பிழைக்க பிறரை அழிப்பதும் ஒன்று-தன்...
பிழைக்குப் பிறரைச் சாட்டுவ தொன்று...
உண்மை மனிதன் மனமோ வேறு...
உழைத்தே வாழும் அவன் மனம் ஆறு...

**பொறுக்கி**

(15ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இன்மையாலும் இதற்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து நிலவிவருவதனாலும் இவ்வருடம் மட்டும் ஆரம்பக்கல்வி வளநிலையம் ஒன்றினை இவ்வலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அடுத்து கணித விஞ்ஞான வளநிலையங்களை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இதனை மிக விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரையில் வளப்பங்கீடு என்பது சகல பாடசாலைகளுக்கும் உரியமுறையில் பங்கிடப்படவில்லை என அடிக்கடி பலரால் கூறப்படுகின்றது. அதாவது பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும், நகரப் பாடசாலைகளில் ஆசிரியர்வளம் அதிகம் என்ற கருத்து. தொடர்பாகக்கேட்டபோது;

இதில் கேட்கப்பட்ட விடயத்தில் தவறுகள் ஒன்றும் இல்லை. கடந்த இரண்டுவருடங்களுக்குமுன் அரச உத்தியோகத்தர்கள் பலதிணைக்கள ஊழியர்கள் நகரத்தின் ஒரு சில பாடசாலைகளில் தேவையான அளவு ஆசிரியர்கள் வைத்திருக்கவேண்டியது மிகமுக்கியமானது. இது தொடர்பாக பல கூட்டங்களில் அரசாங்க அதிபராலும் சில அரச அதிகாரிகளாலும்வலியுறுத்தப்பட்டுவந்தது இந்த அடிப்படையிலே கிளிநொச்சி நகரத்தின் கிளிநொச்சி மத்தியகல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலயம் இம்மூன்று பாடசாலைகளிலும் போதியளவு என்று சொல்லமுடியாது. ஓரளவு ஆசிரியர்கள் கற்பித்துக்கொண்டு இருக்கின்றனர்.

இவ்வாறுஇருந்தும் கிளிநொச்சிமகாவித்தியாலயத்தில் விஞ்ஞானம் கற்பிக்க ஒரு ஆசிரியர் கூடஇல்லை. அதேநேரத்தில் மிகப்பாரிய பிரச்சினைகள் நகர்ப்புறங்களில் நாங்கள் எதிர்நோக்குகின்றோம். இதற்கு பல அடிப்படைக்காரணங்கள் உண்டு. கடந்தமூன்று வருடங்களுக்கு முன் பல இடங்களில் இதற்கு இடம்பெயர்ந்த மக்கள் தொகையில் இருந்து ஆசிரியர் நியமனங்கள் இடம்பெற்றன. அதனால் 1995இல் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் இந்த நியமனத்தைப் பெற்றனர். பின் அவர்கள் சொந்த இடங்களுக்கு சென்றனர். இன்னும் சிலர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளுக்கு சென்று தற்பொழுது இந்த இடங்களுக்கு வந்துள்ளனர்.

பின்தங்கிய இடங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் தங்குமிடவசதி போக்குவரத்து வசதி என்பவற்றால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் பின்தங்கிய பிரதேச ஆசிரியர்கள் தங்களை தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யுமாறு அடிக்கடி கேட்டுக்கொண்டு இருக்கின்றனர் இவ்வருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருந்து 112 ஆசிரியர்கள் வந்துள்ளனர். அதேநேரம் இவ்வருடம் 132 ஆசிரியர்கள் ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளுக்கு செல்கின்றனர். நகரப் பாடசாலைகளில் மேலதிகமாக கருதப்படும் ஆசிரியர்கள் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். இந்த ஆசிரிய வளப்பங்கீடு என்பது மூன்றாம் தவணை ஆரம்பத்தில் இருந்து ஓரளவுக்கு நிறைவு செய்யப்படும் என நினைக்கிறேன்.

இதேநேரம் எந்தஒரு பாடசாலையிலும் எந்த ஒரு ஆசிரியரும் மேலதிகமாக இல்லை என்பதை கூறவிடும்புகின்றேன். நகரப்பகுதி என்று சொன்னாலும் ஏறத்தாள 1300 பிள்ளைகள் கல்வி கற்கின்ற கனகபுரப் பாடசாலைக்கு குறைந்தது 45 ஆசிரியர்கள் தேவையான நிலையில் 22 ஆசிரியர்கள் இருக்கின்றனர். 1150 பிள்ளைகள் கல்வி கற்கின்ற பாரதிபுரம் பாடசாலையில் 11நிரந்தரஆசிரியர்கள்மட்டும் உள்ளனர். நகரப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகம் என்பதும் கிராமப்புறப்பாடசாலைகள் ஒதுக்கப்படுவது என்பதும் தவறானது அங்கு ஆசிரியர்கள் செல்வதற்கும் தங்குவதற்கும் விடுதியின்மை. போக்குவரத்தின்மை என்பன பிரதான காரணமாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும். □□

## வெள்ளிநாத வாசகர்களிடமிருந்து படைப்புக்களை எதிர்பாக்கின்றோம்

- *சிறுகதை*
- *கவிதை*
- *பிரதேச கட்டுரைகள்*
- *விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய நகைச்சுவை துணுக்குகள்*

என உங்களால் எமது வெள்ளிநாதத்தை அலங்கரிக்கும் வகையில் பல்வேறு ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

மேலும்புலம்பெயர்வு உறவுகளே நீங்களும் உங்கள் படைப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

படைப்புக்களை எழுதுபவர்கள் தவறாது தெளிவாக உங்களோடு தொடர்வு கொள்ளக்கூடியதாக முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பனவற்றையும் எமக்கு எழுதுங்கள்.

உங்களுக்கான எமது முகவரி:

ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ். சாலை, கிளிநொச்சி,
மின்னஞ்சல் : Weekly @eezhanatham. Com

## தமிழீழ மாவட்ட நீதிமன்று –கிளிநொச்சி

வ.இல. :-142/2003
தன்மை :-காணி
பெறுமதி:-150000/=

வழக்காளி:-
சின்னத்துரை விஜயராசா,
உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

எதிர்:-
1) திருமதி முருகன் இலட்சுமி
மே/பா. மு. இராசேந்திரம்,
மட்டுவில் நாடு மேற்கு, வில்லடி, பூநகரி,
2) செல்வராசா சிறிமோகன்உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி. எதிராளிகள்.

### பகிரங்க அறிவித்தல்

குறித்த 1ஆம் எதிராளிக்கு

மேற்குறித்த வழக்கினை, வழக்காளி, இந்நீதிமன்றில், உமக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளார். உமக்கான அழைப்புக் கட்டளையை முறைநிறைவேற்றுனர் மூலம் சேர்ப்பிக்க முயன்ற பொழுது, நீர் அம்முகவரியில் இல்லாமையால், உமக்குரிய அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிக்க முடியவில்லை. எனவே, நீரோ அல்லது உமது நலனில் அக்கறை உடையவரோ, இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகிய அன்றிலிருந்து 15 நாட்களுக்குள் ஏதும் சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்காது விடுமிடத்து, இவ் அறிவித்தலை நீவிர் ஏற்றதாகவே கொள்ளப்படுவீர் என்றும், உமக்கு எதிராக ஒரு முகவிளக்கம் மேற்கொள்ளப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் உமக்கு அறியத்தரப்படுகின்றது.

இந்த 2004ஆம் ஆண்டு ஆடி மாதம் 29ஆம் திகதி
வரைவு

வழக்காளி சட்டவாளர்,
திரு.தா.இ.குலசங்கர்,
டிப்போச் சந்தி, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

பதிவாளர்,
மன்றின் கட்டளைப்படி
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி

(4811)


2004

நாடு பூராகவும் ஈழநாதத்தைப் பெறலாம்

## ஈழநாதம் பத்திரிகை சந்தா விபரம்

| காலம் | வெள்ளிநாதம் | தினசரி | வெள்ளிநாதமும் தினசரியும் |
|---|---|---|---|
| 1/4 ஆண்டுக்கு | 300/= | 750/= | 975/= |
| 1/2 ஆண்டுக்கு | 550/= | 1400/= | 1850/= |
| ஆண்டுக்கு | 1000/= | 2650/= | 3600/= |

தபால் மூலம் உங்களிற்கு பத்திரிகைகள் அனுப்பி வைக்கப்படும்
சந்தாதாரர்கள் தொடர்புகொள்ள வேண்டியமுகவரி

பொதுமுகாமையாளர்,(ஈழநாதம்)
யாழ்.சாலை,கிளிநொச்சி.



## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்



## மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்



வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத
இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!

★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.

★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடைவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.

★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம் யாழ்சாலை, கிளிநொச்சி. T.P. 021-2285971
(சி:9947)

# உதயநகர் கிராமத்தின் மீது அதிகாரிகளின் கவனம் திரும்புமா?



கிளிநொச்சியில் உதயநகர் கிழக்கு கிராமம் சத்ஜய இராணுவ நடவடிக்கையின் பின்பு சிறிலங்கா இராணுவம் நிலை கொண்டிருந்த கிராமங்களில் இதுவும் ஒன்று மக்கள் மீளக்குடியமர்ந்த பின்பும் கிளிநொச்சியில் அதிகளவில் ஊடகங்களில் பேசப்பட்ட கிராமமும் இதுதான் அதிகளவிலான மனித எலும்புக்கூடுகள் இந்த கிராமத்திலிருந்துதான் மீட்கப்பட்டன. இதன் பின்பு சாதாரண அபிவிருத்தி என்ற போர்வைக்குள் கிளிநொச்சி மூழ்கத்தொடங்கிய காலத்திலிருந்து உதயநகர் குறிப்பிடக்கூடிய ஒரு கிராமமாகவே தற்பொழுதும் இருக்கின்றது. காரணம் மீளக்குடியேறுபவர்கள் அதிகமாக இந்த உதயநகர்ப்பகுதியில் காணிகளை கொள்வனவு செய்வதில் அதிகம் ஆர்வம் காட்டினார்கள், காட்டுகின்றார்கள்.

காரணம் இது கிளிநொச்சி நகருக்கு மிக அண்மையில் உள்ள ஒரு வறுமைப்பட்டகிராமம், கிளிநொச்சியில் இதனைவிட இத்தகைய கிராமங்கள் அதிகம் உண்டு.

ஆனால் இந்தக் கிராமத்தின் விடயங்கள் சிலவும் வெளிப்படுத்த வேண்டியதேவை தற்போது இருக்கின்றது.

உதயநகர் கிராமம் இரண்டு பிரிவுகளைச் சார்ந்துள்ளது. ஒன்று உதயநகர் கிழக்கு அடுத்தது உதயநகர் மேற்கு. உதயநகர் மேற்கு ஒரு வகை அபிவிருத்தியோடு சாதாரணமாக நகர்ந்து செல்கிறது. ஆனால் உதயநகர் கிழக்குக் கிரா மத்தில் அதன் கிராம அமைப்பு உதயநகர்கிழக்கையே இரு கூறுகளாகப் பிரித்திருக்கின்றது.

இனி உதயநகர் கிழக்கு கிராமத்தை மட்டும் கவனிப்போம். தெற்கே விவேகானந்த நகரையும் கிழக்கில் ஆனந்தபுரத்தையும் மேற்கே அம்பாள்குளத்தை அண்டிய உதயநகர் மேற்கையும் உள்ளடக்கியதுதான் உதயநகர் கிழக்குக்கிராமம். இந்தக் கிழக்கு கிரா மத்தில் விவேகானந்தநகரை சார்ந்த பக்கம் இந்தக் கிராமத்தை இருகூறுகளாக பிரிக்கின்றது. காரணம் இந்த பகுதியில் உள்ள வாய்க்கால் போன்ற பகுதியொன்று கிழக்கை இரு கூறுகளாகப் பிரிக்கின்றது. இது ஒரு தாழ்ந்த பிரதேசமாகவே இருக்கின்றது . அந்த கிராமத்து மக்களின் மொழிநடையில் இந்த பகுதியை "பள்ளம்" என்று கூறுவதே வழக்கம்.

இந்த பள்ளத்தில் 50 - 60 வரையான குடும்பங்கள் தற்பொழுதும் வாழ்ந்து வருகின்றன. இவர்களின் வாழ்க்கை மற்றும் பொருளாதாரநிலையும் பள்ளத்திலேயே இருகின்றது.

உதயநகர் கிழக்கின் ஏனைய பகுதிக்ளில் மக்களின் வாழ்க்கைத்தரம் அதிஉச்ச நிலையில் இல்லாவிட்டாலும் பார்க்கும் போது ஓரளவு பரவாயில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

"இந்தப் பகுதியில் ஓரளவு பரவாயில்லை வியாபாரக்காரரும் உத்தியோகம் பார்க்கிறவையளும் தான் இருக்கினம் பள்ளத்துல இருக்கிற சனங்களின்ர பாடுதான் கொஞ்சம் கஷ்டம்" என்று உரையாடும் போது கிராமத்துத் தலைவர் ஒருவரும் கூட கூறியிருந்தார். பெரும்பாலும் அனேகமான குடும்பங்கள் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகளை பெற்றிருக்கின்றன. வெளி மாவட்டத்தைச் சேர்ந்த 40 - 50 வரையான குடும்பங்கள் மட்டுமே இந்தக் கொடுப்பனவுகளை இதுவரை பெறவில்லை.

உதயநகர் கிராமத்தின் சிறு சிறு அபிவிருத்திகள் வீதி துப்புரவு என்பன கூட இந்தப் பள்ளத்தின் பக்கம் இன்னும் திரும்பவில்லை.

வீதிகள் அகலமாக்கப்படுகிறது. அவை இருமருங்கிலும் துப்பரவு செய்யப்படுகிறது. கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் சீர்செய்யப்படுகிறது. இன்னும் சிறுசிறு நடவடிக்கைகள் எல்லாம் நடைபெறுகின்றன. இவை அனைத்தும் பள்ளத்தின் பக்கம் அல்ல என்பதையே மக்கள் வேதனையுடன் தெரிவிக்கிறார்கள்.

மாரிகாலங்களில் இந்த பள்ளத்தில் வாழும் மக்களின் நிலை கவலைக்குரியதுதான். குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு பெரிய வீடுகள் இல்லை. சீரான போக்குவரவுக்கு வீதிகள் இல்லை.

இந்தக் கிராமப்பள்ளத்தின் பக்கம் குறிப்பிட்ட சில நிறுவனங்களின் அல்லது அமைப்புக்களின் பார்வை திரும்பவில்லை என்று தான் கூறத்தோன்றுகிறது.

இந்த கிராமத்தின் நிலை அறிந்து கொண்டு நிறுவனம் ஒன்று சில உதவிகளை செய்ய முன்வந்து உதவிகளை செய்தது அதுவும் திருப்திகரமாக இல்லை. ஏனென்றால் அந்த நிறுவனமும் தனது இலக்கில் மட்டும் குறியாக இருந்தது.


இப்பொழுது அந்த நிறுவனம் உதவி செய்வதாக கூறிய ஏனைய அமைப்புகளும் இந்தக் கிராமத்தை கைவிட்டநிலையாகிவிட்டது. கிராம மக்களின் ஆதங்கம் இது.

எனவே கிராமத்தின் அனைத்து பக்கங்களிலும் தரம் அறிந்து முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் இதனை கிராமமட்ட அமைப்புகள் வலியுறுத்தவேண்டும். இல்லையேல் அடிமட்டமக்களின் வாழ்க்கை நிலை பள்ளத்திலேயே தொடர்ந்து இருக்கும். எனவே ஊரக வளர்ச்சிப் பணியின் பார்வை இங்கு திரும்பவேண்டும். என்பதையே இன்றைய காலம் உணர்த்துகிறது.

**தேவி**

---

# வாழ்வென்றால் போராடும் போர்க்களமே!



மனித சமூகத்திற்கே நம்பிக்கை ஊற்றாகத் திகழவேண்டியவர்கள் இளைஞர்களே! இன்றைய தமிழ் இளைஞர்களை எடுத்துக்கொண்டால் பலரும் வாழ்வில் போராடி முன்னேறிட முயல்வதில்லை என்ற கசப்பான உண்மையை ஜீரணிக்க முடியவில்லை.

குறிப்பிட்ட ஒரு சில இளைஞர்கள் தியாக சிந்தையோடு போர்க்களமே விடுதலையின் வாசல் மண்ணின் மைந்தர்களாக தாயக விடுதலைக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்ட இந்த வரலாறு படைக்கின்ற இளைஞர்கள் பிறந்த இதே மண்ணில், பிறந்த இன்னொரு பகுதி இளைஞர்கள் திக்குத்தெரியாத காட்டில் சிக்கித் தவிக்கிறார்கள். இவர்களது சிந்தனைகளை சினிமாவும், தொலைக்காட்சியும் முற்று முழுதாக ஆக்கிரமித்து, அவர்களது சிந்தனைத் திறனை மழுங்கடித்து தடம் புரள வைத்துள்ளது.

இன்றைக்கு எமது இளைஞர்களிடத்தில் இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினை இதுதான். வன்முறையும் பாலியல் வக்கிரங்களும் அவர்களை ஆக்கிரமித்துள்ளமையினால் அவர்கள் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள். முகம் சுளிக்க வைக்கும் ஆபாசக் களஞ்சியமாக மாறிவிட்ட சினிமாவில் ஆட்டம்,பாட்டு,அடாவடித்தனம் என்பன வக்கிரத்திசையில் கொடி கட்டிப்பறக்கிறது.

பாடல்களை எடுத்துக்கொண்டால் மன்மதராசாக்களும், சின்னவீடா வரட்டுமா பெரிய வீடா வரட்டுமா போன்ற சிலேடைகளும், கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா புள்ளகுட்டி பெத்துக் கிட்டுக்கட்டிக்கலாமாக்களும் சக்கை போடு போட்டு இளைஞர்களைச் சக்கையாக்கி விடுகிறது. ஓ போடுவும்,மே மாதம் தொன்னூத்தெட்டில் மேஜரானேனேக்களும், என்னைக் கணக்குப் பண்ணேன்டாக்களும் இப்படிப் போடுகளும் விரசமாக எமது இளைய தலைமுறையினரை ஆடவைக்கின்றமை வேதனையை ஏற்படுத்துகிறது.

அடிதடி வன்முறைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வன்முறைக் காட்சிகள் சர்வ சாதாரணமாகி விட்டது. இவை போதாதென்று இரகசியமான நீலப்படங்கள்! கூடவே போதைப் பொருட்கள்...!

இவற்றை எல்லாம் பார்க்கும் போது பகுத்தறிவு வளர்ந்த நாகரிக மனித சமுதாயத்திலா நாம் வாழ் கிறோம் என்ற சந்தேகம் ஏற்ப டுகிறது.

ஆன்மீகமோ, அல்லது புதிய சிந்தனைகளோ அவர்களை ஈர்ப்பதில்லை. புதிய தலைமுறை இளைஞர்கள் யாரும் இன்று நல்ல புத்தகங்களை வாசிப்பதாகத் தெரியவில்லை. இதனால் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்கிற சிந்தனையே அற்றுப் போகிறது. இந்த நிலையில் வாழ்வில் எதிர்நீச்சலடித்துப் போராடி முன்னேறுழ் ஊக்கம் எங்கிருந்து வரப்போகிறது சொல்லுங்கள்?

இன்றைய இளைஞர்களைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கும் பலவீனம் இதுதான். யாரிடமும் போராடும் குணம் இன்று இல்லை. தனிமனித சண்டித்தனங்கள் தான் மிகுந்துவிட்டது.

இவ்வாறு இருளில் அமிழ்ந்திருக்கின்ற இளைஞர்கள் போராடும் குணமில்லாமல் எளிதில் உடைந்துபோய் விடுகிறார்கள்.

நாட்டின் சொத்து என்பது இளைய தலைமுறைதான். இவர்கள் தான் நல்லவழியில் செயற்பட்டு எமது சமுதாயத்தை மேம்படுத்த வேண்டியவர்கள். தனிமனித உழைப்பும், உயர்வும் ஒரு சமூகத்தையே மேம்படுத்திட வல்லது. இப்படிப்பட்ட இளைஞர்கள் திசைமாறிய பறவைகளாக இருப்பதும், காதல் போன்ற விடயங்களுக்கு எல்லாம் மனமுடைந்து ஒடுங்கிப் போயிருப்பதும் உண்மையிலேயே சாபக்கேடுதான்.

சோம்பிக்கிடக்கின்ற அல்லது வன்முறையில் காலத்தை வீணடிக்கின்ற இன்றைய இளைஞர்கள் சரியான திசையில் பயணிக்க முன்வரவேண்டும். இதற்கான ஒரு புதிய சூழ்நிலை ஒன்றை உருவாக்குவது பெரியோர்களின் தலையாய கடமையாகும்.

"உன்னையே நீ உணர்வாய்" என்ற தத்துவஞானியின் வரிகள் இளைஞர்களின் மனதில் ஆழப்பதிய வைக்கப்பட வேண்டும். சூழ்நிலைகள் மாற்றி அமைக்கப்படும்போது இளைஞர்கள் சரியான திசையில் மாறத்தான் செய்வார்கள்.

இது முடியாத ஒன்றல்ல. எல்லாமே முயற்சியில்தான் தங்கியிருக்கிறது. இலக்கு எட்டப்படும்வரை முயன்று கொண்டே இருந்தால். பெரியவர்கள் இதைச் சாதிக்கலாம். பெரியவர்கள் இளைஞர்களின் தவறான போக்கைக்கண்டு கொண்டும், கண்களை மூடிக் கொண்டிருந்தால் எமது அடுத்த தலைமுறை கெட்டுக் குட்டிச் சுவராகிவிடும்.

பெற்றோர்களும், கல்விமான்களும். சமூகசேவகர்களும் இது பற்றி அதிககரிசனை எடுக்காவிட்டால் பாரதூரமான பின்விளைவுகள் தவிர்க்க முடியாததாகி விடும்.

**ச.முருகானந்தன்**



## அன்புப்பரிசு



அந்த வீட்டில் எல்லாமாகப் பத்துப்பேர். ஆனால் வருமானமோ மிகக்குறைவு பணத்தால் வீட்டின் வருமானத்தைக் குறிப்பிடுவதைவிட உணவால் வீட்டின் பொருளாதார நிலைமையைக் கணிப்பிடுவதே பொருத்தமானதாக இருக்கும். அதிகமான நாட்களில் காலை உணவு இருப்பதில்லை. மதியம்சோறு அதற்குச் சம்பல் அல்லது சுற்றுச்சூழலில் இயற்கை யின் கருணையால் விளைந்த கீரை. இரவு அதிகமாக சொல்வதைவிட எல்லோர் வயிர்களும் ச ரி க ம ப த நி ச போடும் சங்கீதம் இரவின் சோகத் தைச் சொல்லும்.

ஆனாலும் அந்த வீட்டின் வறுமை அவா களோடு சேர்ந்து வந்த தல்ல. எல்லாம் திடீர் வருகை. மூத்தவனை இயக்கத்திற்கென அப்பா மாவட்டப்பொறுப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு வந்து ஒரு கிழமையால் சிவப்பு மை எழுத்துக்களால் தேச விரோதிகள் அனுப்பிய கடிதத்தைக் கண்டு இனியும்... இஞ்ச இருக்கக் கூடாது எல்லாரும்வெளிக்கிடுங்கோ... எனப் புறப்பட்ட மங்கிய இருள் பொழுதொன்றில் வறுமைக்கான பிள்ளையார்சுழி போடப்பட்டது.

ஊரில் சொந்தமாக பலசரக்குக் கடைவைத்திருந்தவர்கள் ஊர்மாறி புதிய ஊருக்குப் போனதன் பிறகு சொந்தமாக வருமானம் எதுவும் இல்லாத நிலையில்... ஊரில் நாலுபேரைக் கூலிக்கு அமர்த்தி இதர வருமானம் தேடிய குடும்பம் இதர வருமானத்தை விட பிரதான வருமானம் எதுவும் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

அப்பா கூலி வேலைசெய்து பழக்கப்படாதவர். அம்மாவைப்பற்றிச் சொல்வதானால் அந்த உருவத்திற்கும் செயலுக்கும் இடையில் நூல் இழையால் கூட ஒப்பீடுசெய்யமுடியாதளவிற்கு வித்தியாசமான உள்ளம். அடுத்தவள் மூத்த அக்கா. அம்மாவையும் அக்கா வையும் ஒரே நேர்கோட்டில் வைத்து மதிப்பிடலாம். அம்மா இல்லை யென்றால் அக்கா தான் எல்லாம். இப்படியிருக்க இந்த வீட்டைத்தேடிக் கண்டுபிடித்து வீட்டின் ஒரு அங்க மாகிப் போனான் அந்தப் போராளி. பாதுகாப்பாய்த் தூங்க, நிம்மதியாய் களைப்பாற உரிமையோடு தனது சக நண்பாகளை அழைத்துவர என அந்தப்போராளிக்கு அந்த வீடு பாதுகாப்பானதாகிவிட்டது. ஆனால் பானையில் கறண்டி தட்டும் சத்தம் கேட்காது இருக்கும் உணவைத் தனக்குத் தரும் நிலையைக்கண்டும் அந்தப் போராளியால் அங்கு வருவதை நிறுத்த முடியாதளவிற்கு இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு.


சம்பலும்சோறும் கஞ்சியும்,மிளகாயும் என எல்லோரோடும் சேர்ந்து தானும் பங்கிட்டுக் கொள்வான் அந்த போராளி. ஆனால் அவனால் என்ன செய்ய முடியும்.?

இப்படியே காலம் கழிந்தது. வீட்டில் அம்மாவும் மூத்த அக்காவும் வெங்காய நடுகை, பிடுங்குதல் என கூலி வேலைக்குப் பழக்கப்பட்டு ஏதோ வீட்டு நிலைமை ஓடிக்கொண்டிருந்தது.

அம்மாவும் அக்காவும் கொண்டுவரும் அறுபது, அறுபது ரூபா வருமானம். பத்தோடு பதி னொன்றாக இருக்கும் அந்தப் போராளிக்கும் சேர்த்துப் பங்கிடப்போதாது. அதில் உணவைத்தவிர வேறு எந்தச் செலவிற்கும் பங்கிடமுடியாத குறுகிய வருமானம்.

இது இப்படியிருக்க பாடசாலை போகும் பிள்ளைகளுக்கு மாற்று உடுப்பு என்பதுகூட இல்லாத நிலை. வேதனையால் அந்தப் போராளி மனம் முறுகுவதைவிட அவனால் ஒன்றும் செய்ய முடியாத நிலை.ஒரு நாள் காலை எல்லோரும் கூச்சலும் கும்மாளமுமாக ஓடிவந்து அந்தப் போராளியின் கரங்களைப் பற்றி எங்கட.... பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்றபோதுதான் அவனுக்கு அன்று தனது பிறந்த நாள் என்பது ஞாபகம் வந்தது. எல்லாவற்றுக்கும் மேலாய் பெரியக்கா கூலிவேலைக்குச் சென்று சம்பாதித்த பணத்தில் சிறு தொகையை மிச்சப்படுத்தி அவனுக்காக ஒரு புதிய சறம் ஒன்றை வாங்கி வந்து பத்திரமாய் பரிசளித்துபோது அவன் அழுதேவிட்டான்.

## புதிய தெம்பு



நாலு வீதி ஒன்றாகச் சந்திக்கும் அந்த இடத்தைக்கடந்த போது சட... சட... என முழங்கியது இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கி ரவைகள். யாரோ.... எவரோ இந்த இடத்தால்தான் போராளிகள் தமது பயணப்பாதையாக பயன்படுத்து கிறவர்களென தகவல் கொடுத் திருக்க நிலையெடுத்துக் காத்திருந்தனர். சலோ... சலோ.. கோஷ்டி.

கொண்டு வந்திருந்த சைக்கிளைக் கைவிட்டு நாலு வேலி தாண்டி அந்தப் போராளி தப்பியிருந்தபோது இந்தியச் சிப்பாய்கள் தங்களைத்தாங்களே சலித்துக் கொள்வதை தவிர்த்துக்கொள்ள முடியவில்லை.

தப்பியோடி ஊருக்குள் நுழைந்துபோது நேரம் மதியம் ஒருமணியிருக்கும். பசி வயிற்றை விறாண்ட இந்தஊருக்குள் உள்ள ஆதரவாளர்களின் வீடுகளைப் பற்றி விசாரிக்கத்தொடங்கினான் அந்தப் போராளி.

அங்கு ஒரு போராளிக் குடும்பம் இருப்பதாக வயது முதிர்ந்த ஒருவர் கூறியதையடுத்து.

அம்மா...எனப் கடப்பைத் தட்டினான் அந்தப்போராளி. இவனைக் கண்ட அம்மா வாங்கோ தம்பி என அன்பாக அழைத்து வீட்டில் அமரச் செய்தாள் அம்மா.

பசி வயிற்றைவிறாண்ட விறாண்ட இவன் உணவுக்காக ஏங்கிக்கொண்டி ருக்க, குசினிக்குள் நுழைந்த அம்மா நீண்ட நேரமாகியும் வரவில்லை. இவனது நிலைமை மையைப் புரிந்துகொண்டபோதும் அந்தத்தாயின் இல்லத்தில் எந்த உணவும் இருக்கவில்லை. இவன் உணவுக்காகக் காத்திருந்தான்.

நீண்ட இடைவெளியின் பின் அம்மாவால் முடிந்தது என்ற வகையில் ஒரு கோப்பைத் தேனீரும் இன்னொரு தட்டில் ஒரு அவித்த முட்டையும் அவன் முன் அன்போடு வைத்தாள்.

அதைக் கூட அந்தத் தாய் போத்தலில் சீனி இல்லையென்றிருந்தபோது தேனீரைப் போத்தலுக்குள் ஊற்றி நன்றாக ஆற்றியே அந்தத் தேனீரை தயாரித்திருந்தாள். எங்காவது தேனீரும முட்டையும் மதியத்தில் பங்கிடப்படுமா என சிந்தித்த போதுதான் அந்த வீட்டின் வறுமை அப்படியே தெரிந்தது.

அவன் விருப்போடு அந்த முட்டையை உண்டு, தேனீரைப் பருகிய போது அவனுக்குள் எழுந்த உணர்வு இருக்கிறதே அது அனுப வித்தாள் தான் புரியும்.

## தந்தையின் காவல்



நீண்ட தூரம்நடந்து ஒரு குறிப்பிட்ட தூரம் சைக்கிளில் ஓடி அலைந்து திரிந்துவிட்டு வந்து படுத்தால் எழும்ப மனம்வராது.

மாலை மங்கத்தொடங்கவே எப்போது படுக்கையில் சாயலாம் என்றிருக்கும் இந்த நிலையில் "சென்றி" பார்ப்பது எப்படி? ஆறுதலாய் அமர்ந்து பேசுவது எப்படி?

ஆனால் போராடப்புறப்பட்ட விடுதலை வீரர்களுக்கு அலுப்பும் சுமையும் ஒரு பொருட்டா? என்ன ஆனாலும் சில நேரங்களில் நித்திரை ஆறத்தழுவிவிடும். இதையும் மீறி சில நேரங்களில் சென்றி இருப்பது என்பது வேப்பங்காய் போல இருக்கும்.

அதிகமாக அந்த ஆதரவாளரின் வீட்டில்தான் போராளிகள் இரவுப்பொழுதைக் கழிப்பார்கள். களைத்துவிழுந்துவரும் அவர்களுக்கு நல்ல குளியல் நிறைவானசாப்பாடு. பிறகென்ன ஆளைத் துரத்திக் கொண்டுவரும் நித்திரை.

"உந்தச் சனியன் பிடிச்ச நித்திரை ஏன்தான் வருகுதோ" என்று மனம் சலித்துக்கொள்ளும். ஆனாலும் என்ன செய்ய... முதல்நாள் இரண்டு கிலோ மீற்றர்போனால் அடுத்தநாள் அதைவிடப் பலமடங்கு தூரம் போக வேண்டியிருக்கும்.

போராளிகள் தங்களுக்குள் பேசிக் கொள்வதையும் சலித்துக்கொள்வதையும் அந்த வீட்டு அப்பா சிரித்தபடி கேட்டுக்கொண்டிருப்பார்.

ஒரு நாள் நல்ல அலுப் போடு வீடு வந்து சேர்ந்தவுடன் படுக்கையில் விழுந்தவர்கள் எழும்பவே இல்லை.

கண்டபடி நாய் குரைத்துக்குரைத்து வீட்டைச் சுற்றி வட்டமிட்டு ஓடியோடி வந்தபோது மெல்ல எழும்பி எழுந்து கடப்புக்குச் சென்றபோது ஒரு உருவம் அசைவது அவனுக்குத்தெரிந்தது.

மெல்ல அவன் "யாரது...." என அதட்டலாகக் கேட்டபோது "அது நான்தான். நீ போய்ப்படுமோனை. நானிருக்கிறன்" என்றார் அப்பா.

அவன் சென்றி பார்ப்பதே இல்லை என நினைத்துக்கொண்டிருக்க அவர்களுக்காகச் சென்று பார்க்கப்படுகிறது என்பது அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது.

## ஆத்ம திருப்தி

ஐயா வீட்டில் இருக்கும் அவரது உடுப்புப்பெட்டியில் பத்திரமாய் இருக்கிறது அந்தச் 'சேட்'.

ஆனால் அது எல்லாப் பக்கமும் கிழிந்து ஓட்டையும் நூலுமாக இருந்தபோதும் அதை அவர் தனது கரங்களால் வருடும் போது அவருக்கு ஒரு ஆத்மதிருப்தி.

இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்காலத்தில் போராளிகளைப் பாதுகாக்கும் கவ சமாய் இருந்த அவரது வீட்டிற்கு வந்து போகும் போராளிகளில் ஒருவன் ஒருநாள் ஐயா... உங் களுக்கு இது என்னுடைய அன் புப்பரிசு என ஒரு சேட்டைக் கையளித் தான்.

ஆனால் கையளித்துச் சென்றவன் பின்னர் ஒரு போதுமே அந்த வீட்டுக்கு வரவில்லை.

இந்திய சிப்பாய்களுக்கும் புலிவீரர்களுக்குமிடையே நடந்த ஒரு மோதலில் அவன் வீரச்சாவடைந்துவிட்டான் என்ற செய்தியை மட்டும்தான் ஐயாவிடம் அவனது நண்பர்கள் கூறினார்கள்.

ஐயா சோர்ந்துபோனார் அவரால் அவனது இழப்பைத் தாங்கவே முடியவில்லை.


அன்று அந்த சேட்டைக் கழற்றித் தனது பெட்டிக்குள் பத்திரப்படுத்தியவர். இன்றுவரை தனது கரங்களால் மெல்லத்தடவிக் கொள்வார். அதில் அவருக்கு ஒரு ஆத்மதிருப்தி.

### ஒட்டுநர்



தம்பி:- அண்ணை ஓடிவா, நாக பாம்பு படமெடுக்குது.

அண்ணன்: கலர்ப்படமோ பிளக்கன்வைற்றோ.



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 02**


**பகுதி -05**





**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

இரவினுடைய மங்கலாகிப் போன ஒளிகள் 'யதார்த்தத்தின் தீர்க்கமான கோடுகளை தெளிவற்றவையாக்கி' அடுத்திருந்த உலகின் மீது வெறுமை ஒன்றை போர்த்திக் கொண்டிருந்த வேளைக்குள் புகுந்தேன். "இதுதான் அது "என்று சொல்லுகின்ற விடயமாக அது இருக்கவில்லை. ஏனென்றால் ஒரு பொருள் எப்படி இருக்குமோ அந்த விதத்தில் கண்டு பதில்களை தெரிந்து கொள்வதற்கான ஐயத்துக்கிடமில்லாத சாட்சியாக, கண்ணைக்கூச வைக்கும் ஒளி அங்கே இருக்கவில்லை. இருண்டு போகச் செய்யப்பட்ட வானம், மென்மையாக்கப்பட்ட மதிப்பீடுகள், இடைநிறுத் தப்பட்ட தீர்ப்புக்கள், உணர்வு ரீதியான விருந்தோம்பல்கள், முதலியவற்றுக்கு அதிகமதிகம் இடமளிப்பதாகவே உள்ளது. இந்த வகை ஒளியில் காணப்படும் விடயங்கள் அவற்றினுடைய வரை யறுக்கப்பட்ட தன்மைகள் இருபொருள்படும் விதத்திலான பல சாத்தியக்கூறுகளைக் கொண் டவையாகத் தோன்று கின்றன. இங்கே




சந்தேகத்தினுடைய அனுகூலங்கள், மனித மதிப்பீடுகளின் செயல்பரப்புக்கள் மற்றும் வரை யறைகள் பற்றிய கருத்துக்களை வலிந்து புகுத்தும் அளவுக்குத் தழைத்தோங்கி, நீண்ட காலத்துக்கு நிலை பெற்று விடுகின்றன. ஏனென்றால் ஒருவரின் உள்ளே உள்ள தொடு வானங்கள் குறுகும் பொழுது அல்லது விரிவ டையும் போது அதனுடைய தூரங்கள் வேறு மனிதர்களால் அளவிடமுடியாதவையாக ஆகி விடுகின்றன. ஒருவர் வாழ்க்கையில் பெறும் அனுபவத்திலிருந்தே புரிந்து கொள்ளுதல் வளர்ச்சியடைகிறது. பல்வேறு பட்டவையும் மாற்றக்கூடிய கருத்துக்கள் நிறைந்தவையுமான வழிகளில் விடயங்களைக் காணவும் உணரவும் இது வழிவகுக்கிறது. சுய புரிந்துகொள்ளுத லை, நிர்ணயிக்கும் காரணியாகவும் அது ஆக்கிவிடுகிறது. இந்த நிழலார்ந்த உலகத் திலுள்ள விடயங்களை, எமது தனிப்பட்ட எண் ணங்கள் மனச்சார்புகள், உணர்வெழுச்சிகள், தேவைகளை பிரதிபலிக்கும் விதத்திலேயே நாம் காண்கிறோம் என்பதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். இன்னொரு, மனிதனு டைய நடத்தைக்கான காரணங்களைக். கணிப் பதற்கான ஞானம் எம்மிடம் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தன்னுடைய ஆளு மையின் கூறுபடாநிலை மற்றும், மகிமை யிலிருந்து தனக்குள்ளே உருவாக்கிக் கொண் டுள்ள கருத்துகளால் ஆன தனிப்பட்ட உலகில் வாழ்கிறான் என்பதைப் புரிந்துகொள்வது சிலவேளை இலகுவானதாக இருக்கலாம்.

அந்தச் சந்திப்பிலிருந்து நான் சென்ற போது மற்றவர்களும் பகிர்ந்து கொண்ட டிப்ஸ் ஸின் மீதான ஒருவகை மரியாதை மற்றும் அவனைக் காண்பதற்கான ஆர்வம் முதலிய வற்றுடனேயே சென்றேன் இவ்வாறான பிரச்சினை களுக்குப் போதியளவு தீர்வுகளைக் கிடைக்கச் செய்யும் கதவைத் திறப்பதற்கான இன்னு மொரு முயற்சியை -இன்னும் ஒரேஒரு முயற் சியை எடுக்காமல், எல்லா எதிர்பார்ப்புக் களையும் கைநெகிழச்செய்யும் தன்முனைப் பான மனநிறைவோடு கூடிய பொறுமை யின்மைக்குள் நான் மாட்டிக்கொண்டேன். உளநலம் என்ற பரப்பின் இடையிடையே காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்ன என்பது எமக்குத் தெரியாது. எமக்குள் ஏற்படுகின்ற பதிவுகளில் பலவும் மிகவும் நொய்மையானவை என்று எங்களுக்குத் தெரியும். ஒரு இலக்கு சார்ந்த, ஒரு அமைதி யான, ஒழுங்கமைக்கப்பட்டதான ஆய்வி னுடைய பெறுமதி பற்றி நாம் உணர்கிறோம். ஆய்வு என்பது எமக்குள் எழும் இயல் கடந்த அனுமானங்கள், ஊகக்குறிப்புக்கள் விடயம் சார் தன்மைகள், கற்பனைகள், எதிர்பார்ப்புக்கள், கனவுகளை இலக்குச் சார்ந்து சேகரித்த உண்மைகளுடன் நுணுக் கமான முறையில் கலந்து கணிதவியலின் யதார்த்த மட்டத்திற்கு எடுத்துச் செல்லும். ஈர்ப்பை ஊட்டும் சேர்மானம் என்பதை நாம் அறிவோம். இவற்றுள் எந்த ஒன்றும் இல் லாமல் மற்றவை முழு மையடைய மாட்டா. அவை ஒன்றாகச் சேர்ந்து உண்மை எங்கே இருக்கின்றதோ, அங்கே அதைத் தேடிச்செல்லும் பாதையிலே அங்குலம் அங்குலமாக நகர்ந்து செல்லும்.

எது எப்படியோ நான் விரைவில் டிப்ஸ்ஸை சந்திக்க விருந்தேன். நான் பாடசாலைக்குப் போய், மற்றப் பிள்ளைகளோடு டிப்ஸ் இருக்கையில் அவனை அவதானிக்கப்போகிறேன். பின்பு அவனைத் தனியாகச் சந்திக்கவேண்டும். அதற்குப் பின்பு அவனது வீட்டுக்குப்போய் அவனது தாயோடு கதைக்கவேண்டும். அதற்குப்பின்பு விளை யாட்டு அறையிலும் குழந்தைகளுக்கான உள வளத்துணை மையத்திலும் மேற்கொள்ள வேண்டிய சந்திப்புகளுக்கான நேரங்கள் குறித்து முடிவு செய்ய வேண்டும். அங்கிருந்து தான் மிகுதியைத் தொடரவேண்டும். நாங்கள் ஒரு பிரச்சினைக்கான தீர்வைத் தேடு கிறோம். இந்தச் சந்திப்புக்களில் கிடைக்கப்போகும் மேலதிக அனு பவங்கள், அந்தக் குழந்தையின் தனிப்பட்ட வாழ்வினுள் எட்டிப் பார்ப்பது போலத்தான் இருக் கப்போகிறது. அந்தச் சந்திப்புகள் டிப்சுக்கு எப்படி உணர்வாகப் போகின்றன என்பது பற்றி எமக்கு எதுவும் தெரியாது. அவ னுக்குள் புதைந்திருக்கும் மர்மங் களின் முடிச்சுக்களை அவிழ்த்து எமது புரிதலுக்கு மேலதிகமாக ஏதாவது சேர்த்துவிடக்கூடிய நூலொன்றை பிடிக்க முயற்சி செய்வதற்கான இன்னுமொரு வாய்ப்பாகவே அது இருந்தது.

(தொடரும்....)

**நூல் புடவை**



எப்பபார்த்தாலும் நூல் புடவையே கட்டிக்கொண்டு வாறது யார் ?

அவர்தான் நூலகர் கணேசன்ர மனைவி.

---


**தொடர் - 27**

"இப்போதும் அப்படியா"

"இல்லை அந்த வழக்கம் இப்போது கிடையாது"

"பாரம்பரிய வழிபாட்டு முறைகளைத்தான் பின்பற்றுகிறார்களா?,"

"இல்லை" என்றான் முன்னால் போன ஓலே திரும்பி;





"....இப்போது இந்த ஊரில் எல்லோரும் கத்தோலிக்கர்கள்."

"இதையும் பார்த்து விட்டுப் போங்கள்," சற்றுத் தள்ளி முற்றத்து நடுவில் வேறு சிலரோடு நின்றுகொண்டிருந்த கியாப்பே அழைத்தான். நாங்கள் அங்கே போனதும் அவர்கள் முட்டுக்காலிட்டுக்குந்தி, பரபரப்பாக எதிலோ ஈடுபட்டார்கள். என்னவென்று பார்த்தால், மரப்பலகை ஒன்றை வைத்து, அதன் மேல் ஒரு நீளக்கோலை நெட்டுக் குத்தாய் வைத்து. இரு உள்ளங்கைகளையும் சேர்த்து விரைவாய் கடந்து புகை கிளம்புற இடத்தில் காய்ந்த புல்லைப்போட்டு, தீயை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள்!





'தீக்கடைக்கோல்!' அது எமக்குத் தெரிந்த விசயமென்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

ஆனால், இரண்டாவது வானில் வந்த பயணிகள் இதை எல்லையில்லா ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்! அக்குழுவிலிருந்து விலகி, ஒருவர் எங்களை நோக்கி வந்தார். அவர் எங்களைப் போலிருந்தார். நல்ல உயரம், கண்ணாடியும் முழுக்கை சட்டையும், தோளில் பையுமாய் அருகில் வந்து முறுவலித்தபடி "ஹலோ!" சொன்னார்.

அவர் இந்தியர். மேற்கு வங்காளம். சுரேஷ் சட்டர்ஜி தொண்டு நிறுவன மொன்றில் பணியாற்றுகிறவர்.

"ஊர்ச்சந்தையைப் போய்ப்பார்ப்போம்", ஓலே முன்னால் நடந் தான். அலம்பல் வேலி யின் இன்னொரு வாசல் வழியாக வெளியே வந்ததும் அருகோடு சந்தை இருந்தது. உண்மையில் ஊரவர் களுக்குத் தேவையான பொருட்களை விற்கிற சந்தையல்ல, அது. எங்களைப்போல வரு கிற பயணிகளுக்கு விற்பதற்காக வைத்திருக்கிற கைவினைப் பொருட்கள், நினைவுப்பொருட்கள் போன்றவற்றின் சந்தை. வேலியோடு பரண்களமைத்துப் பொருட்களை அடுக்கி விட்டு, விற்கிறவர்கள் பரணுக்குக் கீழே குந்தியிருந்தார்கள்.

ஒரு வட்டமடித்து, வாங்குவதற்கு ஏதும் தோதுப்படாமல் ஒருபக்கமாக ஒதுங்கி நின்றேன் அந்த இடம் சந்தோசமாக இருந்தது. மதியமென்று தெரியாத வெய்யில், மலை விளிம்பு தொலை தூரத்தில் கட்டிநிற்கும் வரம் பினைத் தாண்டி வீசுங்காற்று, உள்ளூர்க்காரரும் வெளிநாட்டாரும் கலந்து நின்ற, கலகலப்பு, எங்கிருந்தோ மிதந்து வரும் மாடுகளின் கத்தல், மணியோசை ஓலேயும் சட்டர்ஜியும் வந்து அருகில் நின்றார்கள்.

ஓலே ஆங்கிலம், ஸ்வாஹிலி, விஞ் ஞானம், விவசாயம், சங்கீதம் ஆகிய பாடங்கள் படிக்கிறான். பள்ளிக்குப் போவது அவனுக்கு விருப்பம். இன்று, தகப்பனுக்குப் பதிலாகத்தான் இங்கு நின்று எங்களைக் கவனிப்பதற் காகத்தான் போகாமலிருக்கிறான்.

"எல்லாப்பிள்ளைகளும் பள்ளிக்குப் போவார்களா?" "ஓ! எட்டாம் வகுப்பு வரை,"

உண்மைபோலத்தானிருந்தது; இந்த மட்டத்தில், ஓலே, கியாப்பே இருவரையும்விட வேறு சிறுவர், சிறுமியரைக் கண்டதாய் இல்லை கிராம மட்டத்தில் பள்ளியொன்றை நடத்து வதன்மூலம் நேற்றிரவு என்ஜென்கா சொன்ன தடைகளையுந்தாண்ட முக்கிக்கி மக்கள் முயற்சிப்பது புரிந்தது.

"எத்தனை வயதில் மணமுடிப் பார்கள்", சட்டர்ஜி கேட்டார்.

"ஆண்கள் இருபத்தாறு, பெண்கள் பதினெட்டு."

"ஒரு ஆண், எத்தனை பெண்களை மணமுடிக்கலாம்?"

"எத்தனை பேரையும்!", " என்றார் ஓலே,"...ஆனால், ஒவ்வொரு மனைவிக்கும் விலையாக ஏழு பசுக்கள் கொடுக்கவேண்டும்."

"அவ்வளவுதானா" " "ஒவ்வொரு மனைவிக்கும் தனித்தனிக் குடிசையும் கொடுக்க வேண்டும்" (தொடரும்...)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள் விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

பாவலரே!

எமது இன்றைய இலக் கியங்களின் போக்கு எப்படியிருக்கிறது?

முற்போக்கு, தற்போக்கு என்று போய் இப்போது ஏதேதோ தனிப்போக்கில் போய்க் கொண்டிருக்கிறது... பிற போக்கில் செல் லாமல் இருந்தால் சரிதான்.

சு.ரிஷிபா,
இரத்தினபுரம்.

ஐயா பாவலரே

சங்கிலிய மன்னனும், பண்டாரவன்னியனும் ஒன்று சேர்ந்து உங்கள் முன்னால் காட்சி தந்தால் நீங்கள் அவர்களிடம் எதை கேட்பீர்கள்?

எவர்க்கும் அடங்க மறுத்த சங்கிலியரே... அடங்காப்பற்று வன்னியரே.. உங்கள் வீரமும், தேசப்பற்றும், இனப்பற்றும் உங்கள் மண்ணில் இன்று உயர் வீச்சுடன் வளர்வதை வந்து பாருங்களேன் என்பேன்...

த.சுதா,
வட்டக்கச்சி.



திருமணம் செய்யும் ஆண்கள் பெண்களிடம் சீதனம், அழகு இரண்டினையும் எதிர்பார்க்கின்றனர் இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள் கொஞ்சம் காரசாரமாக பதிலதரவும் அப்படியான ஆண்களுக்குஉறைப்பாக இருக்கும்? மணம் முடிக்க பண முடிப்புக் கேட்கும் உழைத்துப் பிழைக்கும் வலுவற்றோர்க்கு அழகுணர்ச்சி இருக்காது தம்பி..! அவர்கள் பணமுடிப்பை ரசிப்பவர்கள் பண்பான பெண்ணை ரசிப்பவர்களல்ல....

சு.சிவாஜினி
புதுக்குடியிருப்பு.

பாவலரே!

புலிகள் ஏன் இத்தனை அமைதி காக்கிறார்கள் போரிடும் கலையை மறந்துபோனார்களோ?

இந்த அமைதி புயலுக்கு பிந்திய- பூகம்பத்திற்கு முந்திய அமைதி..! அநியாயத்திற்கும் அடக்குமுறைக்கெதிராக போரிடும் கலை தமிழரின் மரபு சார்ந்தது... அதனை மறந்தல் சாத்தியமில்லை.. புலிகள் தமிழர்களல்லவா!

சு.விக்கி,
புதுக்குடியிருப்பு.

உலக வல்லரசுகளுக்கு உங்கள் மானசீக அட்வைஸ் என்ன?

'குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்தோரூர் நண்ணிறும் நண்ணுவர்... எனவே வல்லரசுகளே நீங்கள் உங்களை எல்லாம் வல்ல அரசாக நினைக்காதீர்கள்... வல்லரசுகள் ஒரு போதுமே நல்லரசுகளாக மதிக்கப்பட்டதில்லை.

வீ.தீபன்,
விசுவமடு.

அண்மையில் யாழ் பல் கலைக்கழகத்துக்கு மாமனிதர் துரை ராசாவின் நினைவுப் பேருரையாற்ற ஜீவன் கூல் பயணம் செய்தாராமே கவனித்தீரா?

மாமனிதர் பற்றி உரையாற்ற இந்த மரமனிதருக்கு என்ன தகுதியாம்? மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற தமிழின விரோத அமைப்பின் தலைவருக்கு பல்கலைக் கழகத்திற்குள் நுழையவே மாணவர்கள் அனுமதிக்கவில்லையே.. கவனித்தீர்களா?

ஜீவன் கூலுக்கு தனது அடுத்த அறிக்கைக்கான விடயம் கிடைத்து விட்டது.

த.தர்சிகா,
யாழ்ப்பாணம்.

உமக்கு நீரே அடிக்கடி கூறும் மந்திரம் என்ன?

அரியணைத் தந்திரம் நாட்டைக் கெடுக்கும்.
தலையணை மந்திரம் வீட்டைக் கெடுக்கும் என்பது தான்.

ரமேஸ்,
வவுனியா.

அம்மாவிடம் உமக்கு பிடித்ததும் அப்பாவிடம் உமக்குப் பிடிக்காததும் எது?

அம்மாவிடம் பிடித்தது அவரது அம்மாக்குணம்.
அப்பாவிடம் பிடிக்காதது அவரது அப்பா(வி)த்தனம்.

கு.காமிலா,
சாவகச்சேரி.

இராணுவப் புலனாய்வு அதிகாரி மாற்றப்பட்டிருக்கும் பின்னணி யாதோ?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குழம்பிப் போயுள்ளதே காரணம்.

மொ.கோகிலா,
உருத்திரபுரம்.

ஜே.வி.பி.யினர் நாட்டை எங்கே கொண்டுபோகிறார்கள்.

சுடுகாட்டுக்கு.

குமார்,
வட்டக்கச்சி.



## தெருப்பேச்சு

நோயாளி:- வயிற்று வலி தாங்க முடியவில்லை.
வைத்தியர்:- நேற்று என்ன சாப்பிட்டநீர்?
நோயாளி:- ஒரேயொரு பழந்தான் முழுசாத்திண்டிட்டன்.
வைத்தியர்:- என்ன பழம்
நோயாளி:- பலாப்பழம்.

* * *

தந்தை:- எப்பவும் பெரியவை சொல்லுறதக் கேட்டு நட உன்ர அறிவுக் குத்தான் சொல்லுவினம்.
மகன்:-அப்படியே! வானொலியக் கண்டு பிடிச்சதார்.
தந்தை:- மார்க்கோனி.
மகன்:- அதையேன் அவற்ற அப்பா கண்டுபிடிக்கேல்ல.
தந்தை:- மார்க்கோனிய கண்டு பிடித்ததே அவர்தானே.

நடுமத்தியானம் பன்னிரண்டு மணிக்கும் ஒரு மணிக்கு மிடையில் இருவர் - கிளிநொச்சி சந்தையில மரக்கறி கடையில் வந்து "தம்பி கத்தரிக்காய் என்ன விலை?" என்றார் "நாங்கள் ஸ்ரொக் எடுக்கப் போறம் இப்பதர ஏலாது"

"என்ன தம்பி கடையில ரெண்டுரூபா மலிவாக்கிடைக்கும் எண்டு வாறம் இப்ப... என்றார் ஒருவர். பட்டறை நிறைய மரக்கறி கிடக்கு கேக்கிறவைக்கு இப்ப குடாட்டி பின்நேரம் நாலு கிலோ வத்திப்போம்... நட்டமாப் போகுமே... தனியார் வேற கடையிலயெண்டா வருமானத்தைத்தான் பாப்பான். சாமனக் குடுத்திட்டு ரெண்டு மூண்டு மணிக்கு உதை எடுத்தா என்ன?" என்றார். கடைக்காரர். "மேலிடத்து ஓடர் இப்ப தான் எடுக்க வேணும்" என்றார். "அள்ளி வைக்கிறாங்கள்" என்றபடி அப்பால் போனார் அவர் பட்டறையில் சாமானை வைத்துக் கொண்டு கடைக்கு தடுப்புப் போடாமல் இருப்பு எடுப்பதாகக் கூறுவது தவறு. பொருட்களை விற்க மறுப்பதும் குற்றம்தான்.

* * *

ஒரு மனிதன் கட்டாயமாக எட்டு மணித்தியாலம் உழைக்க வேண்டும் அப்படி உழைத்து முன்னேறிய பிறகு பன்னிரண்டு மணித்தியாலம் வேலை செய்யலாம்.

* * *

1950 களில்

நாய் ஒரு வீட்டு மிருகம்.

அது வீட்டைக் காக்கும்.

அதை கட்டி வளர்ப்பார்கள்.

2000 தில்


நாய் ஒரு வளர்ப்புப் பிராணி.

நாயை வீட்டில் பாதுகாப்பாக வைத்திருப்போம்.

அதை கூட்டில் வளர்ப்போம்.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –77



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –77

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : .................................................
முகவரி : .................................................
.................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –76



செ.கௌதமன்,
533/11 யூனிற்,
தர்மபுரம்,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

*வெஞ்சமர் நடந்திடும் எம் தேசத்தில்*
*வஞ்சகம் அறியாப் பிஞ்சிவன் - வஞ்சகர்*
*வாசம் அறியாமல் வாழ வா - இந்நாளில்*
*அமைப்போம் தோழனே தமிழீழம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*நவீனத்தில் நீர் பாச்சினாலும் இனிமையாக*
*குளிப்பதற்கிங்கே உறவொன்று என்னருகிலில்லை*
*நித்தம்! நித்தம் ஏங்குகிறேன் யார் வருவாரோ*
*தாயே! மறுபிறப்பெடுத்தேனும் வாவேன்.*

கு.அகவிழி,
வள்ளிபுனம்.

*வளமான உனது வாழ்விடமோ உயர் பாதுகாப்பு*
*வலைக்குள் நீயோ ஊரிழந்து*
*உறவிழந்து அநாதையாக தாகம் கூடத்*
*தீர்க்க முடியாமல் தனித்துப் போனாயே*

த.காந்தன்,
கிளிநொச்சி.

*குழாயில் தண்ணீர் பருகும்*
*குழந்தைச் செல்வமே*
*துணைக்கு யாரும் வரவில்லையா*
*தடக்கி விலாமல் அவதானமாய் நில்*

யோ. கவின்சிகா,
நெடுங்கேணி.

*ஏதும் அறியா பிஞ்சே எதற்காக*
*இந்நிலை எதிரியவன் உனது தாய்*
*தந்தையை கூடவா கொன்றான் எதற்கும்*
*அஞ்சாதே விடியும் விரைவில்.*

ச.மகிழ்ராசா,
கிளிநொச்சி.

*இரக்கமற்ற இராணுவத்தால் - உன்*
*அன்பு பெற்றேரை இழந்து*
*விட்ட பாலகனே! ஒரு கையில் உணவு*
*மறுகையால் நீர் பிடித்தும் உன் தாகம் தீர்கின்றாயா?*

பா.வவி
ஆனைவிழுந்தான்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.


வன்னிப்பெருநிலப்பரப்பில் உந்துருளி விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
TVS
Sivaguru Hardware & Motor Cycle Sales Centre (Pvt) Ltd.
DAIDO
உங்கள் சிறந்த தெரிவுகளுக்கு
எமது காட்சியறைக்கு வாருங்கள்
சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
இல. 496,496/1
நாயகி கட்டடம்,
யாழ்சாலை பரந்தன்,
கிளிநொச்சி.
(வன்னிப்பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)
(சி-9949)


யாழ் நகரில்...
அழகிய பூங்கனிச்சோலைகளின் மத்தியில்
மிலேனியம்
உல்லாசப்பயணிகள் விடுதி
உங்களை அழைக்கின்றது.
நவீன வசதிகளுடன்
கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட அறைகள்
உங்கள் தொடர்புகளுக்கு:
மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி,
76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 2810
(சி-9948)


அபிஷா தனியார் வைத்தியசாலை
சத்திரசிகிச்சைப்பிரிவு
மகப்பேற்று சிகிச்சைப்பிரிவு
குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு
அம்புலன்ஸ் சேவை
தனியான அறை வசதிகள்,
குறைந்த கட்டண பொதுவிடுதி வசதி,
(நாளொன்றிற்கு 200/=)
ஸ்கானிங், X-Ray ஆய்வு கூட வசதிகள்,
அதிநவீன பிரசவ அறையுடன் கூடிய சேவை,
நவீன சத்திரசிகிச்சைக்கூடம்
கற்குழி, வவுனியா.
T.P-024-2221474
0777-237143
(சி-10116)


Sanshigaa
JEWEL HOUSE
சன்சிகா நகையகம்
සන්ෂිගා ජුවෙල්හවුස්
சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL: 024-2224028
(சி-9950)
யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு - 11